# மண்

இதழ் 228

ஜேர்மனி / 2024

கார்த்திகை - மார்கழி / Nov - Dec

**1** Medicine (மருத்துவம்)



Alfred Nobel
(1833 - 1896)



Victor Ambros
USA
71 Years



Gary Ruvkun
USA
72 Years

**2** Physics (இயற்பியல / பௌதீகவியல்)



Geoffrey Hinton
USA
74 Years



John Hopfield
USA
71 Years

**3** Literature (இலக்கியம்)



Han Kang
South Korea
54 Years

**4** Chemistry (இரசாயனம்)



Demis Hassabis
UK
49 Years



John M. Jumper
US
39 Years



David Baker
USA
62 Years

**5** Economic (பொருளாதாரம்)



Daron Acemoglu
USA
57 Years



Simon Johnson
US
61 Years



Jemes Robinson
USA
64 Years

**6** Peace - (சமாதானம்)



Nihon Hidankyo
Japan
1956

உலகில் அணு ஆயுத
பயன்பாட்டை கட்டுப்படுத்தும்
யப்பான் அமைப்பு












எமது சஞ்சிகையின் யேர்மனிய வாசகர் திருமதி மயூரி சுதர்சன் அவர்களின் தந்தையாரின் (அமரர் கணேசரத்தினம் பிரபாகரன்) 3வது ஆண்டு நினைவஞ்சலிக்காக அவரின் நிதிப்பங்களிப்பில் மல்லாவி - துணுக்காயில் அமைந்துள்ள ”ஒளிரும் வாழ்வகம்” இல்லத்தின் பராமரிப்பிலுள்ள முதியோர், மாற்றுத்திறனாளிகளுக்கு 27.10.2024 அன்று மதிய உணவும், உணவுப் பொதிகளும் வழங்கப்பட்டன.

# உள்ளே

- எங்கள் கருத்து
- சிறுவர்வட்டம்
- வினாவிடைப்போட்டி
- சிறுவர்போட்டிகள்
- குறளும் பொருளும்
- கவிச்சோலை
- இலக்கியச் சாரல்
- சிறுகதை, கட்டுரை
- குறுக்கெழுத்துப்போட்டி
- சுகாதாரக்குறிப்புகள்
- செய்திக்கண்ணோட்டம்
- ஆதரவற்றோர் உதவிநிதி

| | |
|---|---|
| **முகவரி:** | V. Sivarajah<br>Am Windhoevel 18a<br>47249 Duisburg<br>Germany |
| **தொலைபேசி:** | 0203/8073898<br><br>015254799233 |
| **மின்னஞ்சல்:** | v.sivarajah@arcor.de |

| | |
|---|---|
| **வங்கிவிபரம்:** | Mann (Erde) Verein e.V. Duisburg<br>Stadtsparkasse Duisburg<br>Kontonummer: 225 000 421<br>Bankleitzahl: 350 500 00<br>IBAN-Nr.: DE41 3505 0000 0225 0004 21<br>SWIFT-BIC: DUISDE33XXX |

# ஆசிரியர் பக்கம்...

## புதிய ஜனாதிபதியும் புதிய பாராளுமன்றத் தேர்தலும்....

2024ம் ஆண்டு ஒரு தேர்தல் ஆண்டாகவே அமைந்துள்ளது. உலக வரலாற்றில் அதிகூடிய தேர்தல் நடைபெறும் ஆண்டாக இந்த ஆண்டு சரித்திரத்தில் இடம் பிடித்துள்ளது. அந்தளவுக்கு உலகில் பல நாடுகளில் தேர்தல் நடைபெற்றுள்ளது. அந்த வகையில் இலங்கையின் மிக முக்கிய தேர்தல்களான ஜனாதிபதி மற்றும் பாராளுமன்றத் தேர்தல்கள் நடந்து முடிந்துள்ளன.

எதிர்பாராத வெற்றி வாகைசூடிய (ஜே.வி.பி) தேசிய மக்கள் சக்தி கட்சி மாற்றத்தை நோக்கிய பயணம் வெற்றியளித்துள்ளது...மிக நேர்த்தியான ஒழுங்கமைப்பு, திட்டமிடல் போன்றவை அநுரவின் வெற்றிக்கு வழிவகுத்திருக்கின்றது. இதற்கு முன்னரான காலங்களில் பரம்பரையாக நாங்கள் இந்த கட்சிக்கு ஆதரவு எனவே இந்த முறையும் அதே கட்சிகளுக்குத் தான் வாக்களிப்போம் என்ற மரபு மாற்றமடைந்திருந்ததை கண்கூடாக காண முடிந்துள்ளது இந்த தேர்தலில். குறிப்பாக மாற்றத்தை நோக்கிய அநுரவின் பயணம் என்ற கொள்கை நிறைவேறியுள்ளது என்று கூட கூறலாம்.

இலங்கையின் வரலாற்றில் புதிய கட்சியான இடதுசாரி சார்பான கட்சி ஒன்று அரசபீடம் ஏறியுள்ளது. சுதந்திரம் பெற்று 76 வருடங்களாக மாபெரும் கட்சிகளான ஐ.தே.கட்சியும் சிறிலங்கா சுதந்திரக்கட்சி, பொதுசனப்பெரமுனைக் கட்சியினரும்தான் மாறி மாறி அரசியல் தலைவர்களாக இருந்திருக்கிறார்கள். ஆனால் 2024 தேர்தலில் இடதுசாரிக் கட்சி என்று சொல்லப்படும் தேசிய மக்கள் சக்தி கட்சியின் தலைவர் அநுர குமார திஸாநாயக்க இலங்கையின் 9ஆவது நிறைவேற்று அதிகாரமுடைய புதிய ஜனாதிபதியாக 23.09.2024 அன்று பதவி ஏற்றுள்ளார். வரலாற்றில் தோல்விகளை சந்தித்து வந்த ஜேவிபி கட்சியின் சார்பில் போட்டியிட்டு மிகக் குறுகிய காலத்தில் மிகப்பெரிய அணியைத் திரட்டி அரியாசனம் ஏறியுள்ள அநுரவின் இந்த வெற்றி இலங்கையில் மற்றுமொரு அரசியல் புரட்சியாகவே பார்க்கப்படுகின்றது.

இந்த நிலையில் 14.11.2024 அன்று பாராளுமன்றத் தேர்தலும் நடைபெற்று முடிந்துள்ளது. இதிலும் அனுராவின் சூறாவளி, சுனாமி அலை அடித்து மாபெரும் வெற்றியீட்டியிருக்கின்றது. மட்டக்களப்பைத் தவிர அனைத்து (21) தேர்தல் மாவட்டங்களிலும் அனுராவின் கட்சி அமோ வெற்றி பெற்று புதிய அரசை அமைத்துள்ளது. பாராளுமன்றத்திலுள்ள 225 உறுப்பினர்களில் அநுரா கட்சியின் 159 உறுப்பினர்கள் வெற்றி பெற்றுள்ளனர்.பாராம்பரிய வரலாறுகொண்ட கட்சிகளையும் பழமையான கட்சிகளையும் பழம்பெரும் அரசியல் தலைவர்கள், ஜனாதிபதிகள், பிரதமர்கள், அமைச்சர்கள், எம் பிக்கள்,முதலாளிமார்கள் அனைவரும் படுதோல்வியடைந்து முகவரி இழந்து இருக்கிறார்கள். அப்படியான பெரிய தாக்கத்தை தென்னிலங்கை சந்தித்தது.

இலங்கையிலுள்ள 22 தேர்தல் மாவட்டங்களில் மட்டக்களப்பு தவிர்ந்த ஏனைய 21 மாவட்டங்களிலும் அநுரா கட்சி அமோக வெற்றி பெற்றிருப்பது வரலாற்றுச் சிறப்பாகும்.

பெண்களைப் பொறுத்தளவில் அனுரா கட்சியில் 12 பெண்கள் வெற்றி. மூன்று பேர் தமிழ்ப் பெண்கள். அதில் இரு பெண்கள் மலையகப் பெண்கள் என்பதும் மகிழ்ச்சியான விடயமாகும்.

தமிழர் அரசியல் தரப்பை எடுத்து நோக்கினால் வடகிழக்கில் சென்ற தேர்தல் முடிவுகளை விடக் குறைந்த உறுப்பினர்களே வெற்றி பெற்றிருக்கிறார்கள். பல கட்சிகள் பல குழுக்களாகப் பிரிந்து போட்டியிட்டதால் வாக்குகள் சிதறுண்டு பாராளுமன்றப் பிரதிநிதித்துவத்தை இழந்திருப்பது கவலையான விடையமாகும்.

இலங்கை அரசியல் வரலாற்றில் இந்தத் தேர்தலில்தான் தமிழர் பிரதேசங்கள் அனைத்திலும் சிங்களக் கட்சி ஒன்று அமோ வெற்றி பெற்றிருக்கிறது. இது ஏன் என்று பார்த்தால் நம்மிடையே ஒற்றுமை இழந்து, நல்ல தலைமை இழந்து பதவிக்குப் போட்டியிட்டு இன்று பிரதிநிதிகளை இழந்து நிற்கின்றோம்.

அநுரா கட்சியைப் பொறுத்தளவில் இக்கட்சி போட்டியிட்ட அனைத்து மாவட்டங்களிலும் பிரதிநிதித்துவத்தை வென்றிருக்கின்றது. மட்டக்களப்பைத் தவிர மற்றைய அனைத்து மாவட்டங்களிலும் முதலாவது இடத்திற்கு வந்திருக்கின்றது குறிப்பிடத்தக்க விடயமாகும்.

தமிழர் தரப்பில் முன்னாள் அமைச்சர், இராஜாங்க அமைச்சர் உட்பட பல எம் பிக்கள் தோல்வியடைந்துள்ளனர். அநுரா அலையால் முஸ்லீம் கட்சிகள் மலையகக் கட்சிகளும் தோல்வியைச் சந்தித்திருக்கின்றன.

எனவே தமிழ், முஸ்லீம், மலையக தமிழ் தரப்புகள் இந்தத் தோல்வியைப் படிப்பினையாகக் கொண்டு ஒற்றுமை நோக்கிப் பயணிக்க வேண்டும். தவறும் பட்சத்தில் எதிர்காலத்தில் தமிழ் பேசும் மாவட்டங்களில் பிரதிநிதித்துவத்தை முற்றாக இழக்கும் அவல நிலை ஏற்படும் என்பதைச் சகல தரப்பிரும் கருத்திற்கொள்ள வேண்டியது அவசியமான விடயமாகும்....

**ஆசிரியர் - 16.11.2024**

ஜனாதிபதி அநுரா கட்சி அமோக வெற்றி...
ஒற்றுமை இழந்த தமிழர் தரப்பிற்குப் படுதோல்வி...
இலங்கைப் பாராளுமன்றத் தேர்தல் முடிவுகள் - 2024
தேர்தல் முடிவுகளைப் பார்ப்போம்...

| கட்சி | பெற்றவாக்குகள் | ஆசனங்கள் |
|---|---|---|
| 1- தேசிய மக்கள் சக்தி | 68.63.186 | 159 |
| 2- ஐக்கிய மக்கள் கட்சி | 19.68.716 | 40 |
| 3- இல.தமிழரசுக் கட்சி | 2.57.813 | 08 |
| 4- புதியஜனநாயக முன்னணி | 5.00.835 | 05 |
| 5- பொதுஜன பெரமுனை | 3.50.429 | 03 |
| 6- ஸ்ரீலங்காமுஸ்லீம்காங்கிரஸ் | 87.038 | 03 |
| ஏனைய கட்சிகள் | | 07 |
| மொத்தம் | | 225 |

## சிறுவர் வட்டம்...




### ஆத்திசூடி...

## கொள்ளை விரும்பேல்...

பெற்றோருடன் கடைக்குப் போகிறாய், வாங்கவேண்டிய பொருட்களுக்கு அவர்கள் கடைக்காரர்களோடு பேரம் பேசிக் கொண்டிருக்கிறார்கள். உன் கவனம் அங்குள்ள ஓர் அழகான ஊதலின் (விசில்) மீது பதிகிறது. அதை உன்னுடையதாக்கிக் கொள்ள ஆசைப்படுகிறாய். நீ அப்படி ஆசைப்படுவது தவறில்லை. நீ என்ன செய்ய வேண்டும்?..அப்பாவிடம் கூறி அதற்கு விலை கொடுத்து வாங்கிக் கொடுக்கும்படி கேட்க வேண்டும். அதுதான் நேர்மை. ஆனால் யாருக்கும் தெரியாமல் அந்த ஊதலை நீ எடுத்துக் கொள்ளக்கூடாது. இச் செயல் திருட்டு ஆகும். திருடுவது குற்றம் என்று உனக்குத் தெரியும். திருடுவது மட்டுமல்ல திருட நினைப்பதுமே கூடக் குற்றம். பிறர் பொருளை அபகரிக்க ஆசைப்படாதே. கொள்ளை என்றால் திருடுதல் அபகரித்தல் என்று பொருளாகும்.

## கோது ஆட்டு ஒழி...

நண்பர்கள் கூடி இருக்கிறீர்கள். ஒருவரை ஒருவர் கேலியும் கிண்டலும் செய்து மகிழ்கிறீர்கள். இது ஒரு அளவோடு இருக்க வேண்டும். நீ உன் நண்பன் ஒருவனை மிகவும் அதிகமாகப் பரிகாசம் செய்கிறாய். அதனால் அவனுக்கு உன்மீது வெறுப்பும் கோபமும் வளரும். உன் மீது வஞ்சம் தீர்த்துக் கொள்ள உனக்கு இன்னல் செய்ய முற்படுவான். அதனால் நீ துன்பத்துக்குள்ளாவாய். இது தொல்லை தானே?.. எதுவும் அளவோடு இருந்தால் ஆபத்து இல்லை. அளவுக்கு மீறினால் அமிர்தமும் விஷமாகும் இல்லையா?.. ஆகவே இம்மாதிரியான எல்லை மீறிய விளையாட்டுக்கள் குற்றமாகும். இதை விட்டுவிட வேண்டும் என்கிறார் தமிழ்ப்பாட்டி....
(கோது ஆட்டு என்றால் குற்றமான விளையாட்டு என்று பொருள்)

# நல்நெறிபற்றி........

- வி நந்தகுமாரன் -

## மலரும் மனாங்கள்

அறிவுரைகள் மன அழுக்கை அலசிக் கழுவுகிறது.
ஆத்திரம் அடக்குபவன் அதிக பலசாலி.
இசைந்து இணைந்து வாழ்தல் இல்லறம் சிறக்கும்.
ஈவும் இரக்கமும் இதயத்தில் இன்பங்களைக் குவிக்கும்.
உத்தமர்கள் உயர்வது உலக நியதி.
ஊக்கம் குறையாத உழைப்பு உயர்ந்த சக்தி.
எண்ணியதை வண்ணமாகவே வடிவமைத்துக்கொள்.
ஏழ்மையிலும் தூய்மையான எண்ணங்களை ஏற்படுத்து.
ஜனனத்தில் தொடங்கும் விதி முடிவையும் தீர்மானிக்கிறது.
ஒழுக்கம் ஒரு ஒப்பற்ற வாழ்க்கை முறை.
ஓர் இனத்தின் ஒற்றுமை பெரும் பலத்தைப் பெறுகிறது.
புணிவும், பண்பும், பண்பாட்டின் பக்கபலம்.
கட்டுப்பாடில்லாத எதுவும் கவலைக்கிடமாகிறது.
சகல கட்டுப்பாட்டிலும் தெய்வீகம் உள்ளது.
தெளிவாகத் தேர்ந்தெடு, வளமாக வளர்த்தெடு.
அன்பும், அடக்கமும் இல்லத்தின் இன்பங்கள்.
சந்தோஷமாக வாழ், சந்தேகமாக வாழாதே.
மனம்தான் மனிதனாகவும் மூடனாகவும் மாறுகிறது.
சிந்தனைகள் தெளிவானால், செயல்கள் துணிவாகும்.
வடிகட்டியபின் வார்த்தைகளை வெளியில் விடு.
பஞ்சம் பசியானாலும் படிப்பை பாழாக்காதே.
முன்னேற்றமான யோசனைகளை முன்பே செய்.
மதிநுட்பம் வாய்ந்தவன் மனிதனாகிறான்.
மனப்பக்குவத்தில் மனிதவாழ்வு மலர்கிறது.
கணவன் மனைவி பந்தம் கண்ணியமானது.
சுகத்தைவிட சுற்றம் சூழ வாழ்தல் சிறப்பு.
முயற்சியைத்தேடு, உயற்சி உன்னைத்தேடி வரும்.
தெளிந்த அறிவில் துணிந்த செயல்கள் துளிர்விடுகிறது.
சிந்தனைகளைத் தூண்டாமல் சிறப்பைப் பெறமுடியாது.
திறமை எங்கேயோ அங்கே ஜெயமும் உண்டு.

# உயிர்களைக் காப்பாற்றிய நாய்கள்......



1976ம் ஆண்டு யூலை மாதம் 28ம் திகதி அதிகாலையில் சீனாவில் உள்ள ஒரு நகரில் காட்டு நாய்கள் காணுமிடம் எல்லாம் வெறித்தனமாக குரைக்கத் தொடங்கின. அமைதியான காலைப் பொழுதில் நாய்களின் சத்தம் நகரவாசிகளுக்கு ஒரு தொல்லையாக இருந்தது.

நாய்களுக்கு ஏதோ பித்துப்பிடித்துவிட்டது, அதற்காக நகரசபை நடவடிக்கை எடுக்கும்வரை உடனடியாகச் சுமார் 90 ஆயிரம் மக்களை வீடுகளைவிட்டு அதிரடியாக வெளியேற்றிவிட நகரசபை தீர்மானித்தது.

ஒருநாள் காலை நேரத்தைக் குழப்பிய இந்தக் கேவலமான நாய்கள் தங்களை விழுங்க வந்த பூமியிடமிருந்து காப்பாற்றும் என்று அந்த நகர மக்கள் கற்பனைகூட செய்திருக்கமாட்டார்கள்.

குடியிருப்பாளர்கள் வெளியேறிய சில மணி நேரத்திற்குப் பிறகு (டாங்ஷான்) நிலநடுக்கம் ஏற்பட்டது இது அதிகாலை 3.42 மணியாகும். சீனா கண்ட மிகப்பெரிய நிலநடுக்கம். நகரின் அனைத்துக் கட்டிடங்களையும் அழித்துத் தரைமட்டமாக்கியது. இந்த நகரத்தில் வசித்த சுமார் 90.000 பேரின் உயிர்கள் காப்பாற்றப்பட்டன.

குரைக்கும் நாய்கள் ஒரு பேராபத்தை உணர்ந்து தடுக்கும் என்று அவர்கள் கனவில்கூட நினைத்திருக்கவில்லை. நாம் பார்க்கும் துன்பங்களுக்குப் பின்னால் நாம் அறியாத பல நிகழ்வுகள் மறைந்திருக்கலாம். எல்லாவற்றிற்கும் பின்னால் கருணைப் பார்வை இருப்பது நமக்குத் தெரியாமல் இருக்கலாம். பேராபத்துக்களை தடுக்க சிறு ஆபத்துக்கள் ஒரு காரணியாகவும் இருக்கலாம். இந்த உலகில் நடப்பதெல்லாம் நமது நன்மைக்காகத்தான் என்றும் நம்புங்கள்.

ஆகவே நாய்கள் போன்ற நன்றியுள்ள பிராணிகளை நமது வீட்டுப் பிள்ளைகள் போல் பெணிப் பாதுகாத்து உணவளித்து வளர்ப்பது நம் ஒவ்வொருவரின் நேயம் மிக்க கடமையாகும்!..




# முல்லாவின் கதை

## முல்லாவின் புத்திசாலித்தனம்!

ஒரு பெரிய செல்வந்தனிடம் கொஞ்ச காலம் முல்லா வேலை பார்த்து வந்தார்.ஒரு நாள் முல்லா தொடர்ந்து மூன்று தடவை கடைத் தெருவுக்குச் சென்று வந்ததை அவருடைய முதாளி கண்டு அவரைக் கூப்பிட்டு விசாரித்தார்."நீர் ஏன் மூன்று தடவை கடைக்குச் சென்றீர்?" என்று கேட்டார் அவர்." கோதுமை வாங்குவதற்காக ஒரு தடவை கடைக்குப் போனேன். அடுத்த தடவை நான் போனது முட்டை வாங்குவதற்காக மூன்றாவது தடவையாக எண்ணெய் வாங்கச் சென்றேன் " என்றார் முல்லா.

அதைக் கேட்டு முதலாளி கோபம் அடைந்தார்." கடைக்குச் செல்லுவதற்கு முன்னால் என்னென்ன தேவை என்பதைப் பற்றி முன்னதாகவே தீர்மானித்துக் கொள்வது அல்லவா புத்திசாலித்தனம்? ஒவ்வொரு பொருளையும் வாங்க ஒவ்வொரு தடவை கடைக்குச் செல்வது எவ்வளவு பெரிய மடத்தனம். இனி இந்த மாதிரித் தவறைச் செய்யாதே" என்று முல்லாவை எச்சரித்து அனுப்பினார்.

ஒரு தடவை முல்லாவின் முதலாளியான செல்வந்தருக்கு உடல் நலம் பாதிக்கப்பட்டு விட்டது. அவர் முல்லாவை அழைத்து உடனே சென்று மருத்துவரை அழைத்து வா என்று உத்தரவிட்டார்.முல்லா விரைந்து சென்றார். சற்று நேரங்கழித்து முல்லா வீடு திரும்பிய போது அவருடன் மூன்று மனிதர்கள் வந்திருந்தனர்.

" இவர்கள் எல்லாம் யார்? எதற்காக வந்திருக்கிறார்கள்?" என முதலாளி ஆச்சரியத்துடன் கேட்டார்."இதோ இவர் மருத்துவர் அதோ அந்த மனிதர் மதகுரு" அந்த மூன்றாவது ஆள் சமாதிக் குழி தோண்டுபவர் " என்றார் முல்லா."நான் மருத்துவரை மட்டுந்தானே அழைத்து வரச் சொன்னேன் " என்றார் முதலாளி.

" நீங்கள் சொன்னது போலத்தானுங்க செய்தேன். ஒவ்வொரு விஷயத்துக்கும் ஒவ்வொரு தடவை போகக் கூடாது. ஒரே தடவை திட்டம் போட்டு எல்லா காரியங்களையும் செய்துவிட வேண்டும் என்று சொன்னீர்களே" என்று கேட்டார் முல்லா. " ஆமாம், அப்படித்தான் சொன்னேன் " .

அதற்கும் இதற்கு என்ன தொடர்பு? என்று ஆச்சரியம் தோன்ற கேட்டார் முதலாளி.

" ஐயா, உங்களுக்கு உடல்நலம் சரியாக இல்லை. நோய் முற்றி இறந்து விடுகிறீர்கள் என்று வைத்துக் கொள்வோம். இறுதிப் பிரார்த்தனை செய்வதற்காக மதகுருவை ஒரு தடவை அழைக்கப் போக வேண்டும். பிறகு உங்கள் உடலைச் சமாதியில் வைப்பதற்காக புதைகுழி தோண்டுபவனை அழைக்க ஒரு தடவை போக வேண்டும். இவ்வாறு மூன்று தடவை மூன்று காரியங்களுக்காக நடப்பதற்கு பதில் ஒரே நேரத்தில் மூன்று ஆட்களையும் அழைத்து வந்து விட்டேன்" என்றார் முல்லா.

முதலாளியின் முகத்தில் ஈயாடவில்லை.......

..........................................................................................................................................

## அன்பு!..

அன்பு என்பது நெருக்குமான உள்ளப் பிணைப்பாகும். பாசம், பக்தி, நட்பு, காதல், கருணை என அன்பு பல பரிணாமங்களில் வெளிப்படுகின்றது. "அன்பின் வழியது உயிர்நிலை" என்கிறார் வள்ளுவர். எல்லா உயிர்களுக்கும் அன்பும் பாசமும் உண்டு. குணம், பணம், நிறம், இனம், அழுகு கண்டு அன்பு வருவதில்லை. அன்பை விலை கொடுத்து வாங்கமுடியாது.

எவ்வித பிரதி பலனும் எதிர்பார்க்காமல் தன்னலமற்ற தூய அன்பு செலுத்தும் அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வங்கள். ஒரு குழந்தை நன்றாக வளர்வதற்கு பெற்றோரின் அன்பு மிக..மிக முக்கியமானது.. எம்மை அன்பாகவும் பண்பாகவும் வாழக் கற்றுக் கொடுக்கும் தெய்வங்களே அவர்கள்.

எல்லா மதங்களும் அன்பையே வலியுறுத்துகின்றன. அன்பு செலுத்துவதற்கு வரைமுறை எதுவும் கிடையாது. அது எந்த நேரத்திலும் எந்த வடிவத்திலும் வெளிப்படும் மனமுடைந்து இருப்பவருக்கு சொல்லப்படும் ஆறுதல் வார்த்தைகள் பசித்த முகம் பார்த்து உணவு கொடுப்பது என்பன அன்பின் சில வடிவங்களே..நேசிப்பவரை நேசிப்பது மட்டும் அன்பன்று வெறுப்பவரையும் நேசிப்பதுதான் உண்மையான அன்பு.

மனிதனின் எல்லாப் பிரச்சனைகளுக்கும் தீர்வை அளிக்கக்கூடியது அன்பு மட்டும்தான். அன்பிற்கு அடிமையாகாதவர்கள் இவ்வுலகில் எவரேனும் உண்டோ?..உயிர்களிடத்தில் " அன்பு வேண்டும் அது உண்மை என்று தானறிதல் வேண்டும் " என்றார் பாரதியார். எனவே இனம், மதம், நிறம், மொழி பாராது எல்லா உயிர்கள் மீதும் உண்மையான அன்பு ெய்வோம் அன்பாய் ஒற்றுமையாக வாழ்வோம்.. அன்பே சிவம்!..

**(யேர்மனி - எசன் நகர தமிழ் மொழிச்சேவை கலாச்சார மன்றத்தின் பேச்சுப் போட்டியில் மாணவர் ஒருவரால் பேசப்பட்டது இவ்விடயம்)**

# நகுலின் குட்டிக் கதைகள் - 8

## ஒரு நாயும் சாப்பாடும்



ஒரு குட்டி நாய் சாப்பிட்டுக் கொண்டு இருந்தது. அப்போ பெரிய நாய் வந்து சாப்பாட்டை எடுத்துக்கொண்டு ஓடியது. குட்டி நாயும் பின் ஓடியது. ஒரு பாலத்தில் இருந்து பெரிய நாய் சாப்பிடும் போது அது கடலுக்குள் விழுந்து. அதனால் பெரிய நாய் தண்ணீருக்குள் பாய்ந்தது. குட்டி நாய் பெரிய நாய் விழுவதைக் கண்டு கத்தியது. அருகில் நின்றவர்கள் பெரிய நாயை காப்பாற்றினார்கள். உதவி செய்த குட்டி நாயை நன்றியுடன் பார்த்து பெரிய நாய். இருவரும் சாப்பாட்டை பகிர்ந்து நண்பர்கள் ஆகினார்கள். எனவே இக்கதைமூலம் " நாம் பகிர்ந்து உண்ண வேண்டும். " என்ற சிந்தனையைப் பெற்றுக்கொள்ளல் வேண்டும். சிறியவர்களை ஏமாற்றக் கூடாது.என்பதையும் கற்றுக் கொள்வோம்!..

**செல்வன் நகுல் துரையரங்கன்**
**எசன் - தமிழ் பாடசாலை.**

1.) **அம்மா...**

என் உயிர் அம்மா
என்னை காப்பாற்றும் தெய்வம்
குழந்தையிலிருந்து என்னை
வளர்த்து தோகை
விரிக்க பறக்க
உந்துதல் தந்த அம்மா.

2.) **மனம்...**

அழகான கண்கள்
என்னை பார்த்ததும்
விரிந்து மலர்ந்தது
என் மனம்...

3.) **நான்...**

அடர்ந்த காட்டிலே
வெளிச்சம் போல
இருண்ட மேகத்தில்
நட்சத்திரங்கள் போல
காய்ந்த செடிக்குள் மலர் போல
இவ் உலகில் நான் ஒளிர்கின்றேன்.

4) **அன்பு...**

அதிகாலையில் உதித்த சூரியன்
மாலையில் மறைவதைப் போல
கோபம் அதனை என்றும்
அன்பாலே நாம் மறைத்திடுவோம்.

**செல்வி அனுஸ்கா ராகவன்**
**எசன் - தமிழ் பாடசாலை.**

## அம்மா எங்கள் அம்மா!..

காலைத்தூக்கி கண்ணில் ஒற்றி
கட்டிக் கொஞ்சும் அம்மா
பாலைக் காய்ச்சி சீனி போட்டு
பருகத் தந்த அம்மா!..

புளுதி தடைத்து நீருமாட்டி
பொட்டு வைக்கும் அம்மா
அழுதிடாமல் பள்ளிக்கூடம்
அடையச் செய்யும் அம்மா!.

பள்ளிக்கூடம் விட்ட நேரம்
பாதி வழிக்கு ஓடி வந்து
துள்ளிக்குதித்த என்னைத்தூக்கி
தோளில் போடும் அம்மா!..

என்னைத்தூக்கிக் கண்ணில்ஒற்றி
கட்டிக் கொஞ்சும் அம்மா
பாலைக் காய்ச்சி சீனிபோட்டு
பருகத் தந்த அம்மா!...




## பாவம் போக்கும் பாலகன் இயேசு பிறந்தார்!..



எல்லையில்லா ஒரு தீபம்
எங்கள் முன் நிற்கின்றதே

கருணை என்னும் கண் திறந்து
காட்சி தர வந்ததுவே

மின்னொளிபோல் வந்தெமக்கு
மீட்பை இங்கு தந்ததுவே

மாட்சிமை கொண்டெமக்கு
மகிழ்ச்சி ஊட்டி நின்றதுவே

கனிமழலை குரல் கொடுத்து
கல்வி தர வந்ததுவே

பாலன் இயேசு பாடத்திலே
புத்தி யூகம் வந்ததுவே

காவல் என்னும் கைநீட்டி
காத்து நிற்க வந்ததுவே

வேதனைகள் விலக்கிடவே
வானம் வழி வந்ததுவே

கவலை தீர்க்க எம்மிடத்தில்
கை கொடுக்க வந்ததுவே

இருளை நீக்கி இன்பஒளி
இங்கு தர வந்ததுவே!...

**- வி நந்தகுமாரன் -**

# தெரிந்துகொள்வோம்..

01- தயிராக மாற்றமுடியாத பால் - ஒட்டகப்பால்
02- பின்புறமாக ஏறும் உயிரினம் - கரடி
03- கருப்பு நிறத்தில் முட்டையிடும் பறவை - காட்டுவாத்து
04- நாய்களின் கண்களுக்குத் தெரியாத நிறம் - சிவப்பு
05- கண்ணீர் புகைக் குண்டுகளால் பாதிக்காத விலங்கு - குதிரை
06 வரிக்குதிரைக்கும் மனிதர்களுக்கும் கழுத்து எலும்புகளின் எண்ணிக்கை சமம்.

07- அதிக அளவில் சைவ உணவை உண்ணும் நாட்டவர்கள் - இந்தியா
08- ஆயிரம் ஏரிகள் கொண்ட நாடு - பின்லாந்து
09- தேசியக் கொடி இல்லாத நாடு - வடக்கு அயர்லாந்து.
10- தண்ணீரைவிட பெற்றோல் மலிவான நாடு - வெனிசூலா
11- சுவீங்கத்தை அறிமுகப்படுத்திய நாடு - அமெரிக்கா

12- முத்தம் கொடுக்கும்போது முகத்தில் 34 தசைகள் உட்பட 126 தசைகள் வேலை செய்கின்றன.
13- மனதுக்கு அமைதியை தரும் நிறம் நீலம்.

## Do you know?...

மாணவர்களே இதில் ஒரு பட்டம் ஆவது பெறவேண்டும் என்று முயற்சி எடுத்துப் படியுங்கள்.. உங்கள் விடா முயற்சி ஏதாவது ஒரு பட்டத்துக்கு ஆளாக்கும் என்பதை மறந்துவிடாதீர்கள்...

01- B.A - Bachelor of Arts - இளங்கலைமாணி
02- B,Sc - Bachelor of Science - இளங்கலை விஞ்ஞானமாணி
03- B.Com - Bachelor of Commerce - இளங்கலை் வர்த்தகமாணி
04- LLB - Bachelor of Laws - இளங்கலை சட்டமாணி
05- M.A - Master of Arts - முதுகலைமாணி
06- M.Sc - Master of Science - முதுகலை விஞ்ஞானமாணி
07- M.Com - Master of Commerce - முதுகலை வர்த்தகமாணி
08- LLM - Master of Laws - முதுகலை சட்டமாணி
09- M.E - Master of Engineering - முதுகலை பொறியல்மாணி
10- B.Tech - Bachelor of Technology - இளம்கலை தொழில்நுட்பமாணி
11- M.Tech - Master of Technology - முதுகலை தொழில்நுட்பமாணி
12- B.Ed - Bachelor of Education - இளங்கலை கல்விமாணி
13- M,Ed - Master of Education - முதுகலை கல்விமாணி
14- M.Phil - Master of philosophy - முதுகலை தத்துவமாணி
15- PHD - Doctor of philosophy - கலாநிதி, முனைவர்

# சுடுக்கோ புதிர்ப்போட்டி இலக்கம் - 46

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | | 7 | | | 6 | 4 | 5 | |
| | 2 | 5 | 3 | 4 | | | | 8 |
| | 6 | | | | 1 | | 7 | |
| | 5 | 3 | | | | | 2 | 9 |
| 6 | 1 | | | | 9 | 8 | | |
| | | | 6 | | 2 | | | 7 |
| | | 1 | | 9 | 3 | 2 | | |
| | | 8 | | | | | | |
| | 4 | | | 7 | 8 | 5 | 9 | 1 |

# சிறுவர் குறுக்கெழுத்துப் போடி 139
## ( கார்த்திகை - மார்கழி 2024 )

| | | | |
|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 |
| 5 | 6 | 7 | 8 |
| 9 | 10 | 11 | 12 |
| 13 | 14 | 15 | 16 |

இவ
01-04 உலக கிறிஸ்தவர்களின் திருநாள்.
09-10 பாலில் இருந்து தயாரிக்கப்படும் உணவுப்பொருள்.
வ-இ
08-06 நம் பெயருக்கு உரித்தானவர்.
11-10 நம் ஊரில் இதிலும் படுத்துறங்குவார்கள்.
கீ-மே
14-10 பழம் கனியமுன் வரும் பருவம்.
16-04 மனிதருக்கு நல்ல போதனைகளைப் போதித்தவர்.
மே-கீ
01-13 ஔவையார் அருளிய நூல் ஒன்று.
11-15 ஊட்டச் சத்துள்ளது.

முயற்சித்துப் பாருங்கள். விடை தெரியாவிடின் பக்கங்களைப் புரட்டுங்கள் விடை கிடைக்கும்.

## கணனி தொழில் நுட்பம் அறிந்துகொள்ளச் சில விடயங்கள்..

Computer, Mobile & Network Full Forms..

01- PC - Personal Computer
02- CPU - Central Processing Unit
03- RAM - Random Access Memory
04- IT - Information Technology
05- USM - Universal Serial Bus
06- UPS - Uninterruptable Power Supply
07- CD - Compact Disk
08- DVD - Digital Versatile Disk
09- LCD - Liquid Crystal Display
10- LED - Light Emitting Diode
11- MP3 - MPEG -3 Audio File
12- MP4 - MPEG -4 Video File
13- LAN - Logal Area Network
14- 5G - 5th Generation
15- GPS - Global Position System

Full Form of Computer....

C - Common
O - Operating
M - Machine
P - Purposely
U - Used for
T - Technological
E - Educational
R - Research




**Sozial Media Year and Company Founder..**

### சமூக ஊடகங்கள் ஆரம்பித்த ஆண்டும், ஆரம்பித்தவர்கள் பெயரும்...

01. Yahoo - 1994 - Jerry Yang, David Filo
02. Google - 1998 - Larry Page Sergey Brin
03. SKype - 2003 - Pritt Kasesalu + Jaan Tallinn
04. Facebook - 2004 - Mark Zuckerberg
05. Youtube - 2005 - Jawed Karim
06. Twitter - 2006 - Jack Dorsey
07. Whatsapp - 2009 - Jan Koum
08. Instagram - 2010 - Kevin Systrom
09. Snap Chat - 2011 - Reggie Brown+Bobby Murphy+Evan Spiegel
10. Microsoft - 1975 - Bill Gates
11. Amazon - 1994 - Jeff Bezos

### Symbols..குறியீட்டு வடிவங்கள்

01- Question Mark - கேள்விக்குறி
02- Quatation Mark - மேற்கோள்குறி
03- Exclamation Mark - ஆச்சரியக்குறி
04- Ellipsis - நீள்வட்டக்குறி
05- Squave Bracket - சதுரஅடைப்புக்குறி
06- Curly Brocket - அடைப்புக்குறி
07- Apostrophe - ஒற்றை மேற்கோள்குறி
08- Percent - சதவீதம்
09- And - & மற்றும்
10- Greater then-விடப்பெரியது(அதிகமான)
11- Lessthen - இழப்பு, இன்னும்
12- At the rote - வழியே
13- Equal - சமம்
14- Hash - சிறு..சிறு

## Counting

### எண்கள்

1 -One
10 -Ten
100 - One haudred
1000 - One thousand
10.000 -Ten thousand
100.000 - haudred thousand
1.000.000 - One Million
10.000.000 - Ten Million
100.000.000 - haudred million
1.000.000.000 - One billion
10.000.000.000 - Ten billion
100.000.000.000 - haudred billion
1000.000.000.000 - One trillion

## No of Sides in 8 hapes

### பக்கங்கள்

01- Triangle - 3 முக்கோணம்
02- Quadribteral - 4 சதுரம்
03- Pentagon - 5 ஐங்கோணம்
04- Hexagon - 6 அறுங்கோணம்
05- Heptagon - 7 எழுகோணம்
06- Octagon - 8 எண்கோணம்
07- Nonagon - 9 நவகோணம்
08- Decagon -10 தசகோணம்

## உங்களுக்குத் தெரியுமா?..

| | |
|---|---|
| - Largest Country - Russia | - மிகப்பெரிய நாடு |
| - Tallest Building - Burj Khalifa | - மிகஉயர்ந்த கட்டிடம் |
| - Tallest Statue - The Statue of unity | - மிகப்பெரிய சிலை |
| - Tallest River - The Nile River | - மிகநீளமான நதி |
| - Longest Canal - The Grand canal | - மிகநீளமான கால்வாய் |
| - Largest Desert - Antarctic | - மிகப்பெரிய சமுத்திரம் |
| - Largest Wall - The Great wall | - மிகநீளமான சுவர் |
| - Longest river bridge - | - மிகநீளமான ஆறு |
| The Danyang Kunshan Grand Bridge | - மிகப்பெரிய பாலம் |
| - Largest Lake - Caspian Sea | - மிகப்பெரிய ஏரி |

## செம்மொழி!.....முதலெழுத்து 30, சார்பெழுத்து 10

முதலெழுத்து (30) = உயிரெழுத்து - 12 + மெய்யெழுத்து - 18
உயிர்க் குற்றெழுத்து - 5 (அ, இ, உ, எ, ஒ)
உயிர்நெட்டெழுத்து - 7 (ஆ, ஈ, ஊ, ஏ, ஐ, ஓ, ஔ)
வல்லின மெய்யெழுத்து - 6 (க், ச், ட், த், ப், ற்)
மெல்லின மெய்யெழுத்து - 6 (ங், ஞ் ண், ந், ம், ன்)
இடையின மெய்யெழுத்து - 6 (ய், ர், ல், வ், ழ், ள்)


சார்பெழுத்து - 10

1- உயிர்மெய்
2- ஆய்தம்
3- உயிரளபெடை
4- ஒற்றளபெடை
5- குற்றியலுகரம்
6- குற்றியலிகரம்
7- ஐகாரக் குறுக்கம்
8- ஔகாரக் குறுக்கம்
9- மகரக் குறுக்கம்
10- ஆய்தக் குறுக்கம்

## நீளம் - பல்வேறு அளவுகள்...

- ஒரு மைல் - 1.609.34 மீட்டர். - Meter
- ஒரு கிலோ மீட்டர் - 1.000 மீட்டர். - Meter
- ஒரு மீட்டர் - 100 சென்டிமீட்டர். - Centimeter
- ஒரு மீட்டர் - 3.28 அடி. - Feet
- ஒரு மீட்டர் - 39.37 அங்குலம் - Inch
- ஒரு அங்குலம் - 2.54 சென்டிமீட்டர் - Centimeter
- ஒரு அடி - 12 அங்குலம் - Inch
- ஒரு அடி - 30.48 சென்டிமீட்டர். - Centimeter
- ஒரு சென்ட் - 40.47 சதுரமீட்டர். - Squaremeter
- ஒரு சென்ட் - 435.6 சதுரஅடி - Squarfeet
- ஒரு காணி - 132 சென்ட் - Squarfeet
- ஒரு கிரவுண்ட் - 2.400 சதுரஅடி - Squarfeet
- ஒரு ஏக்கர் - 1.075 சதுரஅடி - Squarfeet

## புதிர்ப்போட்டி....






**புதிர் - 1**

- சுடோக்கோ...ஒரே நேர் கோட்டில் ஒரே விளையாட்டுப் பொருட்கள் வரக்கூடாது.
- ஆறு சதுரங்களிலும் ஆறு விளையாட்டுப் பொருட்கள்கள் இடம்பெற வேண்டும்..

**புதிர் - 2**

இதில் காணப்படும் எண்களைக் கண்டுபிடியுங்கள் பார்க்கலாம்...

**விடைகள் இன்னொரு பக்கத்தில்....**

## அறிந்துகொள்வோம்....Top-10

உலகில் சனத்தொகை கூடிய நாடுகளில் முதல் பத்து இடங்கள்..

01- இந்தியா - 145 கோடி

02- சீனா -143 கோடி

03- அமெரிக்கா - 34 கோடி

04- இந்தோனிஷியா - 27 கோடி

05- பாக்கிஸ்தான் - 24 கோடி

06- நைஜீரியா - 22 கோடி

07- பிறேசில் - 21 கோடி

08- பங்களாதேஷ் - 17 கோடி

09- ரஷ்ஷியா - 14 கோடி

10- மெக்ஸிக்கோ - 12 கோடி (ஒரு கோடி - 1.00.00.000)

# காசிஆனந்தனின் சிந்தனைகள்...



## தளிர்ப்பு...

இலையுதிர் காலம். மரம் மொட்டையாக நின்றது. புல் மேய்ந்த மாடுகள் மரத்தை இரக்கத்தோடு நோக்கின. " உன் இலைகள் விழுந்து கொண்டிருக்கின்றன உன்னைப் பார்த்தால் அழவேண்டும் போல இருக்கின்றது. " என்று ஒரு மாடு தழுதழுத்த குரலில் கூறியது. மரம் சொன்னது.. " நான் அதைப்பற்றிக் கவலைப்படவில்லை. புதிய தளிர்களுக்காக அவை விழத்தான் வேண்டும் " நிமிர்ந்தே நின்றது மரம்..அது சொன்னது...

**" விழுவதற் கெல்லாம் அழுவதற்கில்லை "**

## இயக்கம்...

இரவு நேரம்..கடலில் வந்துகொண்டிருந்த படகுகளில் ஒன்று மற்றதைப் பார்த்துக் கேட்டது. " அதோ கடற்கரையில் தன்னந்தனியாக நின்று ஒளி வீசும் கலங்கரை விளக்கத்தைப் பற்றி நீ என்ன நினைக்கிறாய் " தெரியவில்லையே... என்றது இரண்டாம் படகு. முதற் படகு சொன்னது " கூட்டமாகத்தான் பணிகள் ஆற்றலாம் என்பதில்லை.. தன்னங்தனியாகக் கூட ஒருவர் தொண்டாற்றலாம் என்று நமக்கு அது கூறவில்லையா? " வார்த்தைகளை அது நறுக்கி வைத்தது...

**" தனி என்றிருப்பினும் பணி என்றிரு "**

# குறளும் பொருளும்...

## அவையஞ்சாமை:-

721 - வகையறிந்து வல்லவை வாய்சோரார் சொல்லின்
றொகையறிந்த தூய்மை யவர்.

722- கற்றாருட் கற்றா ரெனப்படுவர் கற்றார்முற்
கற்ற செலச்சொல்லு வார்.

723 - பகையகத்துச் சாவா ரெளிய ரரிய
ரவையகத் தஞ்சா தவர்.

724 - கற்றார்முன் கற்ற செலச்சொல்லித் தாங்கற்ற
முகிகாருண் மிக்க கொளல்

725 - ஆற்றி னளவறிந்து கற்க வவையஞ்சா
மாற்றங் கொடுத்தற் பொருட்டு.

726 - வாளொடென் வன்கண்ண ரல்லார்க்கு நூலொடெ
னுண்ணவை யஞ்சு பவர்க்கு.

727 - பகையகத்துப் பேடிகை யொள்வா ளவையகத்
தஞ்சு மவன்கற்ற நூல்.

728 - பல்லவை கற்றும் பயமிலரே நல்லவையு
ணன்கு செலச்சொல்லா தார்.

729 - கல்லா தவரிற் கடையென்ப கற்றறிந்து
நல்லா ரவையஞ்சு வார்.

730 - உளரெனினு மில்லாரொ டொப்பர் களனஞ்சிக்
கற்ற செலச்சொல்லா தார்.

# குறளும் பொருளும்...

## சபையில் அஞ்சாமல் சொல்வது..

721- சொற்களின் தொகுதி அறிந்து தூய்மை உடையவர் சபையின் வகையினை அறிந்து, கற்ற வல்லவர் உள்ள சபையில் வாய் சோர்ந்தும் வழுபடச் சொல்லார்.

722- "கற்றவருள் இவர் நன்கு கற்றவர்" எனப்படுபவர் கற்றவர் சபையில் தாம் கற்றதை அஞ்சாமல் அவர்களின் மனதில் பதியும்படிச் சொல்வார்.

723- பகைவருடன் போரிட்டுச் செத்தவர் உலகில் பலர். ஆனால் சபையில் அஞ்சாமல் பேசப் புகும் வல்லவர் சிலரே ஆவார்.

724- கற்றவர் சபையில் தான் கற்றதைக் கேட்பவர் மனதில் பதியும்படிச் சொல்லித் தன்னைவிட அதிகம் கற்றவரிடம் இருந்து மிகுதியாக அறிந்து கொள்ள வேண்டும்.

725- சபையில் சொற்போரில் வெல்லும் ஆற்றலைப் பெறக் கற்கும் நெறியில் அளவை நூல்களை அறிந்து கற்க வேண்டும்.

726- வலிமை அற்றவர் கையில் வைத்துள்ள வாளினால் தொடர்பு இல்லை அதுபோல அறிஞரின் சபையைக்கண்டு அஞ்சுபவர் கற்ற நூலினால் தொடர்பு இல்லை.

727- பகைவர் நடுவில் பேடி பிடித்த கூர்வாள் போன்றது. அறிஞர் சபையைக்கண்டு அஞ்சுபவன் கற்ற நூல்.

728- நல்ல அறிஞர்கள் சபையில் நல்ல பொருள்களை அவர்களுக்கு ஏற்றபடி அச்சத்தால் சொல்லமுடியாதவன் பல நூல்களைப் படித்தும் உலகிற்குப் பயன் இல்லை.

729- நூல்களைக் கற்றறிந்த போதிலும் அறிஞர் உள்ள சபையில் பேச அஞ்சுபவர் கற்காதவரைவிடக் கீழானவரே.

730- சபையைக் கண்டு அஞ்சித் தான் கற்றதைச் சொல்ல முடியாதவர் உயிருடன் இருந்தாலும் இறந்தவராகவே கருதப்படுவர்.

# குறுக்கெழுத்துப்போட்டி-202
## (கார்த்திகை - மார்கழி 2024)

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 |
| 8 | 9 | 10 | 11 | 12 | 13 | 14 |
| 15 | 16 | 17 | 18 | 19 | 20 | 21 |
| 22 | 23 | 24 | 25 | 26 | 27 | 28 |
| 29 | 30 | 31 | 32 | 33 | 34 | 35 |
| 36 | 37 | 38 | 39 | 40 | 41 | 42 |
| 43 | 44 | 45 | 46 | 47 | 48 | 49 |

இ-வ
01-04 இலங்கையில் இவ்வாண்டு இரு பெரும் இது நடைபெற்றது.
15-18 காதலிக்கு எதிர்ச் சொல்.
37-40 வீட்டிலும் காட்டிலும் வளரும் மிருக இனம்.
43-45 பிரமாண்டமான கட்டிடம்.
46-49 படித்து இது பெறுவது அவசியம்.

வ-இ
07-04 ஆக்கவும் அழிக்கவும் பயன்படும் ஆயுதம்.
11-09 பெரும் கொடையாளியை இப்படி அழைக்கலாம்.
26-22 யாழ்குடாவில்"பாய்" என்று முடியும் ஊர்களில் ஒன்று.
32-30 நம் ஊரில் நீர் சேகரித்து வைத்திருக்கும் பாத்திரம்.
34-32 நம் வீட்டுப் பாவனைப் பொருள் இது.
42-40 போக்குவரத்துச் சாதனங்களில் ஒன்று.

கீ.மே
26-12 பழங்களில் ஒன்று.
34-13 சிலருக்கு இப்படி சுற்றுவது அலாதிப் பிரியம்.
43-22 காயாகவும் வத்தலாகவும் பழமாகவும் இதை உண்ணலாம்.
46-25 மாதங்களில் ஒன்று.

மே-கீ
01-22 பிட்டுக்கும் சம்பலுக்கும் ருசிக்குப் பயன்படுவது.
07-35 நேற்று, இன்று, நாளை எப்போதும் பயன்படும் சிறந்தநூல்.
11-25 பெண்களின் ஒரு பருவம்.

(விடைகளை கண்டு பிடியுங்கள். முடியாவிடின். பக்கங்களைப் புரட்டுங்கள் விடை கிடைக்கும்)

## மாவீரர்!...

மண்ணுக்காய். முளைத்த
முத்துகள்
கண்ணாய் எமைக்காத்த
சொத்துகள்
விண்ணில் உலா வரும்
நட்சத்திரங்கள்
பண்ணில் உருவான
பலவித வர்ணங்கள்
நாட்டுக்காக நலன்
புரிந்த நலமணிவீர்ர்கள்
ஏட்டுக்காய் வரலாறுக்காய்
படைக்கப்பட்ட மாவீர்ர்கள்
வீட்டுக்காய் உழைக்காத
உத்தமர்களாக
சாட்டுக்காய் இன்றி
தன்மானத்துடன்
களம் சென்ற
தன்மான வீர்ர்கள்
சுயநலம் பாராத பொதுநலம்
பேணிய வேங்கைகள்
கடமை கண்ணியம்
கட்டுப்பாடு
காத்த நம்வீர்ர்கள்
மீளாத்துயிலிலும்
கனவு காண்டிடும்
காவலர்கள்
தமிழ்ஈழம் கிடைக்க வேண்டும்
என்ற கனவுடன்
நம்பிக்கை நாற்று
துளிர்விட்டுவளர
மீளாத் துயிலில் இவர்கள்
மாவீர்ரே உம் கனவு
பலிக்கட்டும்
அமைதியாகத் தூங்கும்!

**- கெங்கா ஸ்ரான்லி -**



## மார்கழியின் மைந்தன்!..

மார்கழியில் மலரும்
மரியாளின் மடியும்
மாட்டுத்தொழுவமும்
பெற்றுத் தந்த பாலனே
மானிடரை மீட்க மனுவெடுத்த
மாபரனே
மார்கழி மாத்திலே மனுமகன்
பிறந்தார்
மாபரனின் மகன் அவர்
மானிடரானார்
ஆண்டான் அடிமை போக்கி
ஆள வந்தார்
அருள் மழை பொழிந்திட
அகிலம் பிறந்தார்
வாழ்வழிக்கும் மீட்பராக
மனங்களில் திகழ்ந்தார்
பாவம் என்னும் இருள் போக்க
பகலவனாய் ஒளியாய் மிளிர்ந்தார்
மக்கள் அனைவரதும்
உள்ளமதில் மலர்ந்திட
மரியாள் மனம் மகிழ
மண்ணுயிர் காத்திடவே
மாவேந்தராய் மனுமகனாய்
வந்துதித்தார்
பூத்துக் குலுங்கும் பூ
மலரை வாருங்கள வாழ்த்தி
வணங்குவோம்

**ஜெயா நடேசன்**

## அழகிய உலகில்...

உன் அடிமை நாட்களை
மறந்துவிட்டாயா?
உன் உழைப்பைச்
சில்லறைகளில் கறந்த
சுதந்திரத் தந்திரம்
நினைவில் உள்ளதா?

உன்னிதய உணர்வுகளுக்கு
முதலாளி ஊசி போட்ட
பழையக் கதை
நினைவில் உள்ளதா?

நீ பேசும் வார்த்தைகள்
தெய்வ வாக்கென நம்பு
நீதிக் குரலைக்
கூண்டில் அடைத்து
ஒலிபெருக்கிச் சத்தம்..

சுதந்திர நாளில்
உன் பிணத்தை வாழ்த்தி
உன் உரிமைகள்
வெள்ளித் திரையில்
அடாவடியாய்த் திணிக்கப்பட்டன..

அழகிய உலகில்
ஆறாத உன் சப்தம்
வீதிகளில் ஒலிக்கிறது,
உன் உழைப்பின் சுவாசம்
கடலின் சுழல் போல மாறுகிறது..

நீதிக் கண்கள் திறக்க,
மறுக்காமல் போராடு
உன் அடிமைத்தனம்
மறக்காமல் நீயே எழுது!

**சத்யா பிரான்சிஸ்-மலேசியா**

## நத்தார் தினம்...

தரணி மீதிலே
தாமரை போலவே
இயேசு பாலன் பிறந்தாரே
விண்தூதர் பாடவே - புது
விடியலைக்காணவே
ஆயர்கள் விரைந்தனரே...

வெண்பனித் தூறலில்
விடி வெள்ளி தோன்றலில்
தன்னிகரற்ற தேவகுமாரன்
இறை மகன் இயேசு
காசினி அவதரித்தார்..

மின்னலின் பிழம்பாய்
மிளிரும் பொன் ஒளியாய்
வடித்த நல் ஓவியமாய்
அன்னை மரி மடியில் இயேசு
அன்பின் வடிவமதாய்
சிந்தும் புன்னகையை
ஆயர் கண்டு களித்தனரே...

விண்ணோர் போற்றிடவே
வையகம் மகிழ்ந்திடவே
ஆதியே ஜோதியாக
அன்பே சொரூபியாக
ஆதவன் அவதரித்தார்...

அன்பெனும் ஒளியேற்றி
அகிலமும் மகிழ்ந்திட
அமைதி நிலைத்திட
இதயங்கள் மலர்ந்திட
வந்த திருநாளிதுவே...

மண்ணில் மனிதம் வளர்ந்திடவே
மக்கள் மாண்புற வாழ்ந்திடவே
வாழ்வு எல்லாம் வளம்பெறவே
இனிதே வாழ்த்துகிறேன்
இனிய நத்தார் வாழ்துக்கள்...

**சந்திரா - டென்மார்க் -**

# ஒரு நாள் இறந்து போனது.

செ.சுதர்சன்
-பேராதனை-

"திருநாள் வரும்போது
என்ன செய்தீர்கள்...?"
என்றோர் செய்தியை
வானம் நோக்கி ஊதி எறிந்தேன்...
பறந்தலைந்த அதுவோ....
சில சனங்களின் வாய்ப்பட்டது!
உழத்தியின் வாய்ப்பட்டபோது...
அவளோ சொன்னாள்:
"போர்ப் பேய் மேய்ந்த
அவரது கால்களாய்
ஆழ்சேற்றில் நான் புதைகிறேன்...
ஆகையால்...
என் பிள்ளையின் கல்வி
இன்னுமோர் வயலாகும்!"
மலையேறுவோளின்
வாய்ப்பட்டபோது...
அவளோ சொன்னாள்:
"ஏறுவதால் என் பிள்ளைகள்
உலகத்தையே
உலகின் மேலிருந்துதான்
பார்க்கிறார்கள்.."
ஜோசியக்காரியோ சொன்னாள்:
"தாயம் உருட்டுவதற்கு முன்னரே
விழிகளற்ற தெருவில்
அவர்களே
விழுந்து உருள்கிறார்கள்.!"
மீன்காரியின் வாய்ப்பட்டபோது
அவளோ சொன்னாள்:
"அவன் ஓட்டி வந்தான்
இப்போதோ....
காணாமல் போனான்....
நானோ விற்பதை வாங்கி விற்கிறேன்...
பிள்ளை வளர்கிறாள்..
என்னை வெடுக்காய்
இன்னும் எறியவில்லையே...!?"
ஒரு அப்பம் விற்பவளை
"திருநாள்" எப்படி என்றேன்...
அவளோ சொன்னாள்:
"அரச உதவியே இல்லாமல்
நான் விற்கும் அப்பத்தின் மீதும்
சம்பலின் மீதும்
சினிமாப் பாடல்களால் எத்தி
நடனமாடிப் போனாள் என்மகள்..."
"அவளின் ஆடலால்
பிய்ந்து சிதறிய அப்பம்....
துண்டு துண்டாய்ப் பறந்து
சைக்கிள் தேங்காய் வியாபாரியான
இறந்து போன என் கணவரின்
புகைப்படத் தலையிலும்...."
"நான் முதுமையிலும் இடித்துப்
புளி சேர்த்த
காரச் சம்பல்....
என் முகத்திலும்...."
"கொட்டியும் அப்பியும் பறந்தும்
போனதால்...
நாளைக்கென இந்தத் திருநாளில்
என்னதான் இருக்கிறது?"
ஊதி எறிந்த எனது வாசகமோ
அவியுண்ட கல்லாய்...
எரிந்து தேய்ந்து கருகி,
தூசியாய்ப் பரவியபோதோ...
என் அம்மாவும்
என் அம்மாவின் அம்மாவும்
அவர்களது அம்மாவும்
இன்னும்..
எல்லோரது அம்மாக்களும்
மூச்சுத் திணறினார்கள்!
இறந்து போன அப்பாவும்
அப்பாவின் அப்பாவும்
அவர்களின் அப்பாவும் என
எல்லா அப்பாக்களும்
இறந்து போனார்கள்....!
பலத்த கை தட்டல் கேட்டது!
பின்னணியில்...
அவனுக்கும் அதுவுக்கும்
அவைக்கும் அவர்களுக்கும்...
இன்றும் இனியும்...
அடிமையாகும்.... அடிமையாக்கும்
வரிகளோடு....
அதிர்ந்தது சினிமாப் பாடல்...!
மேடையே ஆடத் தொடங்கியது...!
உரிமையைப் பேசும் காலை
ஊனமுற்றுப் பிறந்த
அப்போதுதான்...
ஒரு நாள் இறந்து போனது!

# மருந்தும்
# மருத்துவமும்....

-வே புவிராஜ் - நோர்வே -

.
மறந்தேனும்
போய்விடாதீர்
யாழ்ப்பாண
மருத்துவ
மனை நோக்கி .
அது மயானத்துக்கு வழிகாட்டும்
சூனிய சதுக்கம் .பாமரர்
குடிகளை வறுமையின்
வர்க்கத்தை ஆய்வுக்கு
உள்ளாக்கும் ஆராச்சி கூடம் .
சிலர் அங்கங்கள் அரிந்தெடுத்து
செல்வந்தர் விலை மதித்து பண
பட்டாக்கள் கை மாறும் பாழ்
பட்டோர் பள்ளியறை .
யாழ் போதனா மருத்துவமனை .
போரின் பாடறியோம்
கொரோனா தொற்றறியோம்
பாடாய் கிடந்தாலும்
பிணியால் சீரழியோம்.
ஆனால் இன்று
விழுப்புண் வீக்கம்மென்றால் .
வீதி விபத்தென்றால்
ஆவி துடிக்குதென்றால்
சுடு காட்டில்
தோண்ட வேண்டும்
ஆறடி குழி .
மருத்துவம் பொய்ததின்று
மனிதம் விலை
இல்லாப் பொருளாச்சு .
ஆடறுத்து
தொங்கவிடும்
கசாப்பு கடையாய் மாறிவிட்டது
மருத்துவ மனை .

நோய் அறிந்து
மருந்து செய்த காலம்போய் .
நோய் அறிய
மனித உடல் அறுத்தாயப்படுகிறது .
பணம் பிடுங்கும் தொழிலாய்
மருத்துவம் ஆனபின்னர் .
முட்சந்தி மூலைக்கொன்றாய்
மனித உடல் அறுத்தாயப்படுகிறது .
முளைத்திருக்கு
தனியார் மருத்துவம் .
அரச மருத்துவம் அவர்களின்
ஆய்வு கூடம்
ஆண்டி
அநாதை எல்லாம்
ஆய்வுக்கு வந்த ஆடுமாடுகள் .
கவனிப்பார் இல்லை .
கருணை காட்டுவார்
இல்லை .
மரணப்படுக்கை ஆனபோதும்
மனம் இரங்கி
துடிப்பார் இல்லை .
மனிதம் செத்து
மடிந்த பின்னர் .
கடவுள் மேல்
பழிபோடும் மனிதர் எல்லாம் பேய்கள் .
அரசன்
அன்றறுப்பான்
இறைவன்
நின்றறுப்பான்
என முன்னோர் எழுதிவைத்த
சொல்லடை
ஏட்டில் மட்டும்

இருக்கிறது.
அரசன் அறம்
மறந்தான்
அரியாசனை நாடி.
இறைவன்
தனை மறந்து
தவி தவித்தான்
பரிகாரம் என்ற
கையூட்டு வாங்கி .
காசு பணமே
கடவுள் ஆனபின் கடவுளுக்கும்
தெரியும் காசின் பெறுமதி .
யாரை நொந்து
யாரிடம் அழுவது
கையால் ஆகா
மனிதரின் கண்ணீர்
என்று கரைக்கும்
பண முதலைகள் நெஞ்சை....
..................................................................



## விடியுமா தேசம்...

காலங்கள் ஓடியது
கவலைகள் கூடியது
தேவைகள் வருடவே
வாடிய மனதிலே
மூடிய வாசல் எப்போ
திறக்குமென்ற ஆவல்
விடியலைத் தேடியது ?

ஒரு பிடியாவது கிடைக்குமா ?
விடிவைத் தேடிய மண்ணின்
மைந்தர் நேர்மை போராடியும்
நய வஞ்சர் எட்டப்பனாலேயே
அநியாயமாக மடிந்தது
உலகறிந்த உண்மையே...

அன்றைய காலம் ஆங்கிலேயர்
செய்த தவறினால் வந்த வினையே
உரிமை,உறவு, சொந்த பந்தம்
எல்லாமே தமிழனில் தொலைய
எங்கெல்லாமோ அலைந்திட
நித்திரையின்றி மனந் துடித்தது...

தொடரும் பதிவில் மோசஞ் செய்த
சதியினரை வீழ்த்தி
வென்ற அதிபர்க்கு
வாழ்த்துக் கூறும் வேளையிலே
இவர் தமிழனில் பாசங் காட்டி
வேஷம் போட்டு ஏமாற்றுவாரா ?
அல்லது தமிழனின் தாயகமதில்
இனியாவது விடியுமா தேசம்?.... .

**- ராணி சம்பந்தர் -**

## தொடர்நவீனங்கள்..

தொன்மை துலங்கும் தொல்பொருள் ஆராய்ச்சி
தொடரியல் வாழ்வின் அழிவற்ற சாட்சி
முந்தைய வாழ்வின் முதன்மைச் சாட்சி
முதற்குடி என்பதன் உலக அத்தாட்சி

இன்றைய சூழலும் வளர்ச்சியின் புரட்சி
வருங்கால எழுச்சிக்கு ஆதார அத்தாட்சி
மாற்றத்தின் திறவுகோல் மனிதத்தின் ஏணி
மனிதத்தின் நேயத்தை மாசற்றுக் காப்போம்

உலகியல் உதயத்தின் தமிழே வாழ் நீ
உனக்குள்ளே உராய்ந்திட்ட சான்றோர்கள் தாய் நீ
வளமிக்க மொழியின் வரலாற்றுப் பதியம்
வருங்கால உயர்வில் தன்யாற்றல் இமயம்

நவீன வளர்ச்சிக்குள் வற்றாத சுரங்கம்
திருக்குறளாய் தேசமெங்கும்பரவிடும் தேட்டம்
ஆதியின் மூலமாய் அனுதின வேகமாய் வென்றுயர் தமிழே
வீரரின் ஏந்தலாய் வெற்றியின் மகுடமாய் நவீனம் சூடிடு
நற்றமிழ் ஈழமே நமக்கென நாடிடு!

**- வசந்தா ஜெகதீசன் -**

## பெண்களுக்கு...

ஒரு பெண் எவ்வளவுவசதியாக இருந்தாலுமகணவன் மட்டும் சரியாக அமைய வில்லை என்றால் அவள் எங்கிருந்தாலும் ”அனாதைதான்”

## ஆண்களுக்கு...

ஒருஆண் எவ்வளவு கஸ்டமான சூழ்நிலையில் இருந்தாலும் மனைவி என்பவள் சரியாக அமைந்துவிட்டால் அவனைப்போல அதிஸ்டசாலி இவ்வுலகில் யாருமில்லை.

# போற்றி வணங்கிடுவோம்!...



சொல்லுக்குள் அடங்காத சுதந்திர வீரரிவர்
சொரிந்தனரே ஆவியினை ஈகையாக எமக்கா!
வல்லபடை நடத்திட்ட வரலாற்றின் ஏடுகாளாய்
வம்சத்தில் நிலையான வாகையின் சுடர்களிவர்!
எல்லைகளைக் காத்திட்ட எங்களது சாமியிவர்
ஈழமண்ணே மூச்சாகிப் முரசறைந்த மறவரிவர்!
கல்வெட்டில் நிலையான கார்கால மேகமெனக்
காலத்தின் காவியமாய்க் கண்கண்ட நாயகர்கள்!



மண்மீட்பு ஒன்றினையே மந்திரமாய்ச்செபித்தவர்கள்
மனுக்குலமே காணாத மாசற்ற தியாகங்கள்!
கண்ணான ஈழத்தைக் கனவாகிச் சுழன்றவர்கள்
காட்டினிலும் மேட்டினிலும் காற்றாகிஅலைந்தவர்கள்!
விண்ணாகி உயர்திட்டு வியப்பாகி நிலைத்தவர்கள்
விடுதலையே. வாழ்வாகி வீழ்ந்திட்ட விருட்சங்கள்
எண்ணாத போதினிலே எரிதணலாய்ப் போனவர்கள்
எப்போதும் நெஞ்சினிலே எழிலாகி நிறைந்தவர்கள்!

கார்மேகம் நீர்தூவிக் கடமையாய்ச் சீராட்டக்
கல்லறைகள்விழிதிறக்கும்கார்த்திகைமலர்ந்திருக்கும்!
சோர்ந்திடாத தீரரினைச் சுத்ந்திரரை வணங்கியுமே
சுடரேந்திப் புகழ்பாடி சொரிகிறது விழிமலர்கள்!
ஊர்போற்றும் உத்தமரை உன்னதரைக் காவியமாய்
உணர்வோடு போற்றுகின்ற உயர்வான மாதமிதில்
பார்முழுதும் ஏற்றியுமே பவித்திரமாய்ப் போற்றியுமே
பணிவுடனே வணங்கிடுதே ஈழத்தின் நேசர்களை!

- கீத்தா பரமானந்தன் -



# கலக்கமுறும் கருவறைகள்....

- இரா . சம்பந்தன் -



மேச்சல் தரைக்குச் சென்ற
கறவைகளும் விரைந்து
கன்றுகளைத் தேடியே
தொழுவம் நோக்கிச் செல்லும் .

இரைதேடிச் சென்ற பறவைகளும்
கூடுகளை யடைந்து
குஞ்சுகளுக்கு உணவளித்துக்
குதூகலமாய் வாழ்ந்திருக்கும் .

கோழிகளும் சேவலோடு
கூடிக் குலாவியே
குப்பையைக் கிளறும் .

காகங்களும் மாலையிலே
கரைந்து கரைந்து ஒன்றிணைந்து
துயில்கொள்ளச் செல்கின்றன !
சோகமில்லா வாழ்க்கை
சுதந்திர வானம் .

சந்தியிலே பயணப்படும்
ஆதவனும்
தன்பணி தான்முடித்து
அந்தியிலே துயில்கொள்ளச்
செல்கின்றான் .

இத்தனையு மிப்புவியில்
இனிதாய் நிகழ்கையில்
சொத்தனைய முத்துக்களைக்
கண்முன் காணாமல்
கண்ணயர முடியாமல்
கலக்கமுறும் கருவறைகள் !

காலை புலர்ந்தாலும்
இருள்விலகாத வாசல்கள்
நேசமிகு உறவுகளை
நாளும் எதிர்பார்க்கும் .

வலிந்து கவ்விச் சென்ற
வல்லூறுகளின் பிடியிலிருந்து
மீள்வார்களென்ற நம்பிக்கையிலே
காலம் நகர்கின்றது .

சுதந்திரம் மறுக்கப்பட்ட
ஓரினத்திற்கு தோல்வியும்
வலிகளும் வடுக்களும்
நிரந்தரமாய்ப் போனது !

எங்கே யெங்கேயென்று
எதிர்பாக்கும் விழிகளிலே
ஏக்கம் மட்டுமே
தேங்கி நிற்கின்றது .

சீர்மிகுந்த வாழ்வதனைச்
சிதைத்துவிட்டார் சினந்து !
தேரிழுத்து நின்றவர்
திசையெங்கும் சென்றுவிட்டார் .

வேரிழந்து சென்றாலும்
விம்முகின்ற உறவுகள்
ஊரின் நினைவுகளோடு
உயிர்சுமந்து வாழ்கின்றார் .

சகல இனங்களுக்குமான
சமாதான சகவாழ்வைக்
காலமெல்லாம் யாசித்தாலும்
யோசிக்க முயலாத வன்கண்ணார் !

## பலஸ்தீனம் - இஸ்ரேல்!...

இஸ்ரவேல் என்று ஒரு இல்லாத புராணப் புதிர்ப்பிம்பம்
தேடிக் கண்டடைந்து பலஸ்தீனமே என ஏமாற்று ஜம்பம்
வல்லவர்கள் ஒன்று சேர்ந்து பலஸ்தீனத்தை அழித்தொழிக்கும்
பொம்மலாட்டம் நடக்கிறது ரொம்பக் கொடுமையாக இருக்கிறதே!..

இது ஒரு குடி கெடுக்கும் குடியென குடியேற்றவாசிகள் குட்டினர்
எதுவழியென யாதொரு வழியுமற்ற இஸ்ரேலியரை அணைத்து
குருதியோடும் குமுறலோடும் நின்றவர் தம் துயர் துடைத்து இரங்கி
அல்லாவும் யேசுவும் நம் அன்பின் வழினெ நேசம் கொண்டனர்!..

இரக்கத்தை நினைப்பவன் சிரமத்திற்கு ஆளாவது என்பதும்
எல்லோர்க்கும் நல்லவன் உடுக்கையைக்கூட இழப்பதென்பதும்
மானிடம் வாழ ஆனதன்றோ அல்லல்படத் தொடங்கியதன்றோ
இந்த இலக்கணம் பலஸ்தீனியர்களுக்கு மட்டும் விதிவிலக்கா என்ன!..

திறமையும் விவேகமும் கை வந்தவனுக்கு உலகம் அவன் காலடியில்
இயற்கை ஒருவகையில் பகட்டை நெஞ்சில் பலமாக அமர்த்தும்
அறிவும் செயலும் ஆளம்கண்டுவிட்டால் அவன் பிழையும் சரியாகும்
வணக்கமும் வாழ்வும் வலியே வந்து தோளில் ஏறிச்சுவைக்கும்!..

எல்லாத் தாக்குதல்களைவிட இம்முறை இஸ்ரேல் மிகமிக அதிகம்
அதையே காரணமாக்கி பலஸ்தீனம் மிகப்பெரிய அடியும் வாங்கியது
சொந்த மண்ணை இழந்து மக்கள் அகதிகளாய் நாடுதாண்டி பெருவெள்ளம்.
யார் காட்டுவார் இந்த அப்பாவிப் பொதுமக்கள் மீது அன்பு உள்ளம்!..

உயிரைத் தவிர இழக்க எதுவுமில்லை என்பது மக்கள் உரிமைகீதம்
அழிப்பவன் பெரியவன் என்பதைவிட எம் உரிமை பெரியது என்பது திண்ணம்
நாங்களும் நியாயத்தின் பக்கம் நிற்பது என்பது இலட்சியப் பெருவேட்கை
கொடுமைகள் கூட்டிலிட்டால் அடிமைகள் நாம் ஆகவேண்டும் என எதிர்பார்ப்பு!

**- ப.பசுபதிராசா -**

........................................................................................

## குழந்தைகள்!..

குப்பைத் தொட்டியில்
குப்பைகளை மட்டும்
போட்டுவிடுங்கள்
குழந்தைகளை அல்ல...

**- சிவா -**

## சிறுவர்கள்!..

கணனி வலைகளில்
எலிகள் மாட்டுவதில்லை
காமுகர்களின் பதிவேற்றம்
சிறார்களும் சின்னாபின்னம்!..

# மண் இதழிலக்கம் 227 இற்கான அட்டைப்படக்கவிதை.




## தனிநாயகம் எனும் தனிப்பெரும் நாயகம்.

காலங்களே கரைத்திடாத கன்னித் தமிழுடன்
கலந்தவரைப் போற்றிடுவாய் மனமே
ஞாலத்தில் தாய்மொழியை நட்டுவைத்த சேவியரை
நாளெல்லாம் ஏற்றிடுவாய் கனமே
மூலத்தின் வேர்களையே முழுவுலகமும் ஆய்ந்த
முதல்வரைச் சாற்றுவோம் தினமே
சீலத்தில் சிறப்புறவே சேவையினைப் புரிந்தவரின்
சேவடியை வணங்கிடுவாய் ,னமே.

மூச்சில்கலந்த காற்றோடு முழுவுலகும் நிறைந்திருக்கும்
முத்தமிழாய் வாழ்ந்தது நனவே
பேச்சினிலும் செயலினிலும் பெரும்பணி யாற்றியவர்
பேரறிஞர் தனிநாயகம் எனவே
பாய்ச்சலுடன் தேசமெலாம் பைந்தமிழ் மரபினைப்
பறைசாற்றியது அடிகளார் கனவே
கூச்சலற்ற செயலராயக் குவலயத்து உறவினைக்
கூட்டிணைத்தது மாநாட்டின் தினவே.

நூற்றாண்டு கடந்தும் நூதனத்துப் பதிவுகளாய்
நூல்களில் வாழுகின்றார் நாயகனாய்
ஏற்றத்தோடு அடியெடுத்து எல்லைகளையும் கடந்து
ஏற்றாரே ஆய்வரங்கு முதல்வனாய்
ஊற்றாகப் பரவியே உலகெல்லாம் போற்றிடவே
உன்னத ,லச்சியத்தின் காவலராய்
நாற்றாய் நட்டுவைத்த நற்றமிழ் மொழியதோ
ஏற்றியதே அடிகளாரைக் காவியமாய்.

**-அம்பலவன்புவனேந்திரன்..**

# தீயின்றி எரிகின்ற தீபங்கள் !..



தெய்வங்களாய் மனங்களில் தீபங்களாய் ஒளிர்பவரை
நெய்விளக்கு ஏற்றியே தொழுவாய் - எங்கள்
தேசத்தின் விடுதலைக்காய்த் தியாகத் தீயானவரை
நேசத்தில் நிதமும் நினை.

வையகத்தில் முதன்மையில் வரலாறாய் ஆனவரைக்
கைகூப்பிக் கார்த்திகையில்போற்றிடுவாய் - மண்ணில்
வித்தெனவே விழுந்தங்கு விருச்சங்களாய்விரிந்தவரை
நித்தமுமே நெஞ்சினில் நிறுத்து.

வருடங்கள் கடந்தாலும் வற்றிடாத நினைவுகளின்
நெருடர்கள் நெஞ்சினிலே தைக்குதே - உங்கள்
சத்தியத்தின் உயர்வைச் சகமெல்லாம் வியந்தின்னும்
பத்தியத்தை ஏற்றுதே பார்.

மாவீரர்களாய் மனங்களில் மரித்திடாது வாழுகின்ற
காவியத்து நாயகர்களைத் துதித்திடு - சிங்களம்
என்னும் உழலுகின்ற சுடர்களில் ஒளிந்திடினும்
தின்னுமே கண்ணீரின் தீ.




பொய்யர்கள் பூமியிலே போரென்ற போர்வையினில்
மெய்களும் மூச்சயர்ந்து கிடக்குதே - எனினும்
உறைந்திட்ட உண்மைகள்உயர்ந்துநின்று உச்சத்தில்
அறையுமே அறத்தை ஆங்கு.

கரிகாலன் வாரிசுகளாயக் கனைகளோடு உரமேறிய
விரிகதிராய் ஒளிவீசியபடி விரைந்தீரே - தமிழர்
அல்லல்கள் நீங்கிடவே ஆகுதியாகியதைக் கண்டு
வல்லமையைப் பாடுதே வான்.

**- அம்பலவன்புவனேந்திரன் -**

..........................................................................................

## நிலம்!..

அமைதியான வீடுகள்
மனிதர்களற்ற தெருக்கள்
சத்தமில்லாத பூமி தேசம்
முள்ளிவாய்க்கால் பெருநிலம்!..

## சமுத்திரம்!..

சாதிச் சாக்கடைகளால்
கறைபடாத பிஞ்சுகளும்
கறைபட்டுப் போனது
மானிடச் சமுத்திரம்!..

**- சிவா -**

# தமிழ் மொழியில் சோறு!......

தமிழ் மொழியில் " சோறு" என்பதற்கு 27 விதமான பெயர்கள் இருப்பது தெரியாமல்... தமிழர்களோ, White Rice, Fried Rice, Biriyani Rice, Egg Rice என ஆங்கிலத்தில் பல்வேறு பெயர் வைத்து அழைத்துக்கொண்டு இருக்கிறோம்..

நம் உணவுக்கு சோறு என்பது அந்த 27 பெயர்களில் ஒன்று என்று சூடாமணி நிகண்டு சொல்லுகிறது.

இனி பெயர்கள் அகர வரிசையில்:

1. அசனம்,
2. அடிசில்,
3. அமலை,
4. அயினி,
5. அன்னம்,
6. உண்டி,
7. உணா,
8. ஊண்,
9. ஓதனம்,
10. கூழ்,
11. சரு,
12. சொன்றி,
13. சோறு
14. துற்று,
15. பதம்,
16. பாத்து,
17. பாளிதம்,
18. புகா,
19. புழுக்கல்,
20. புன்கம்,
21. பொம்மல்,
22. போனகம்,
23. மடை,
24. மிசை,
25. மிதவை,
26. மூரல்,
27. வல்சி

.................................................................................................................................

# அன்னமும் பாலும்...

இவ்வளவு நாளா எந்த பள்ளிக்கூடத்திலயும் சொல்லித்தரலயே.... யாரோ புத்திசாலி ஆதாரப்பூர்வமாக சொல்லியிருக்கிறார்..."அன்னமும் பாலும்"அன்னம் பாலையும் தண்ணீரையும் பிரிக்கும் என்பது நமக்குப் பள்ளிக் கூடத்தில் சொல்லிக் கொடுக்கப்பட்ட விஷயம்.

ஏதோ அன்னப்பறவை என்று ஒன்று அந்தக்காலத்தில் இருந்ததாகவும்,அது தண்ணீர் கலந்த பாலை வைத்தால் தண்ணீரைப் பிரித்து அப்படியே பாலை மட்டும் உறிஞ்சிவிடும் என்றும் சொல்லி இருக்கிறார்கள்.

நான் சில மிருகக்காட்சி சாலைகளில் அன்னப் பறவையைப் பார்த்தேன். அவற்றைப் பராமரிப்பவரிடம் இந்த அன்னத்திற்குப் பால் வைக்கிறீர்களா? என்று கேட்டபோது, அவர் கிண்டலாகச் சிரித்தார்.







அன்னம் நீரில் உள்ள மீன்களையும் புழு பூச்சிகளையும் தின்று வசிக்கும் ஒரு உயிரினம் என்றும், பாலைச் சாப்பிடாது என்றும் தெரிவித்தார்.எனக்கு ஒரு குழப்பம். நம் முன்னோர்கள் தப்பாகவா சொல்லியிருப்பார்கள் என்று. சில நாட்கள் இதைப் பற்றியே சிந்தித்தேன்.

ஒரு நாள் சாப்பிடும்போது தோன்றியது அடடா, "அன்னம் என்பதற்கு" "அரிசிசாதம்" என்றும் ஒரு பொருள் உண்டே. இதை நாம் சிந்திக்கவில்லையே என்று யோசித்தேன். பிறகு கொஞ்சம் சுடு சோறு கொண்டு வரச்சொல்லி,அதில் கொஞ்சம் நீர் கலந்த பாலை ஊற்றினேன். அப்படியே வைத்துவிட்டு 5 நிமிடம் கழித்துப் பார்த்தபோது,

என்ன ஆச்சரியம்..!! பால் முழுவதையும் சாதம் உறிஞ்சிக் கொண்டிருந்தது. தெளிந்த நீர் மட்டும் சாதத்தைச் சுற்றியிருந்த இடத்தில் வடிந்திருந்தது. உண்மையில் நான் கலந்த நீரைவிட அதிகமாகவே வடிந்திருந்தது. சரி நாம் உபயோகித்த பாலில் ஏற்கெனவே எவ்வளவு தண்ணீர் இருந்ததோ என்று நினைத்தேன். இதுதான் அன்னம் பாலையும் தண்ணீரையும் பிரிக்கும் கதை.

நீங்கள் யார் வேண்டுமானாலும் எப்போது வேண்டுமானாலும் உங்கள் வீட்டிலேயே செய்து பார்க்கலாம். மறுபடி சிந்தித்தபோதுதான் அடடா, அன்னம் என்று தான் சொன்னார்களே தவிர, அன்னப்பறவை என்று ஒரு இடத்திலும் சொல்லவில்லை.அது நாமாக செய்து கொண்ட கற்பனைதான் என்று புலனாயிற்று.அன்னம் பாலையும் தண்ணீரையும் இப்படித்தான் பிரிக்கும் எனத் தெரிந்து கொண்டேன்.

படித்ததில் உணர்ந்தது....

## உலகத் தமிழாராய்ச்சி மகாநாடு நடைபெற்ற ஆண்டுகளும் நாடுகளும்..




1வது - கோலாலம்பூர் - மலேசியா - 1966

2வது - சென்னை - இந்தியா - 1968

3வது - பாரிஸ் - பிரான்ஸ் - 1970

4வது - யாழ்ப்பாணம் - இலங்கை - 1974

5வது - மதுரை - இந்தியா - 1981

6வது - கோலாலம்பூர் - மலேசியா - 1987

7வது-போர்ட்லூயிஸ் - மொரிஷியஸ் - 1989

8வது - தஞ்சாவூர் - இந்தியா - 1995

9வது - கோலாலம்பூர் - மலேசியா - 2015

10வது - சிக்காக்கோ - அமெரிக்கா - 2019

11வது - கோலாலம்பூர் - மலேசியா - 2023

.............................................................................................................................

## திருமண அழைப்பிதழ்.....

இப்படியும் ஒரு விடயம் இருக்கின்றதா...இதுதான் தமிழ் மொழியின் சிறப்பு..

திருமண அழைப்பிதழில் மணமக்கள் பெயருக்கு முன்னால்...

- திருவளர்ச்செல்வன், செல்வி என்றால் அது அந்தக் குடும்பத்தின் மூத்த மகன், மகளின் திருமணமாகும்.

- திருநிறைச்செல்வன் செல்வி என்றால் இளைய மகன் மகளின் திருமண-மாகும்.

- திருவளர்ச்செல்வன், செல்வி எனும்போது திருமணம் நிகழவிருக்கும் எங்கள் மகன், மகளுக்கு, இளைய சகோதர , சகோதரிகள் உள்ளனர். இது எங்கள் இல்லத்தின் முதல் திருமணம் ஆகும்.

- எங்கள் இளைய குமாரன், குமாரிக்குத் திருமண வயது நிரம்பும் போது, உங்கள் மகன், மகளுக்கு திருமண வயது நிரம்பி இருந்தால், வரன் கேட்டு வரலாம். என்பதைப் பெரியவர்கள் நினைவில் கொள்ள மறைமுகமாகத் தெரிவிப்பதாகும்.

- திருநிறைச்செல்வன், செல்வி என்றால் எங்கள் இல்லத்தில் திருமணங்கள் நிறைவுற்றன. இத்திருமணமே இறுதியானதாகும். இனி எங்கள் இல்லத்தில் மணமக்கள் யாரும் இல்லை என்று பொருள்படும்.

# திருமந்திரம்....

பாடல் 254: - முதல் தந்திரம் - 16.
அறஞ்செய்வான் திறம் (தரும வழியில் நிற்பவர்களின் பெருமை)

அழுக்கினை ஓட்டி அறிவை நிறையீர்
தழுக்கிய நாளில் தருமமுஞ் செய்யீர்
விழித்திருந் தென்செய்வீர் வெம்மை பரந்து
இழிக்கஅன் றென்செய்வீர் ஏழைநெஞ் சீரே.

விளக்கம்:
மனத்திலுள்ள அழுக்குகளை அழித்துவிட்டு உண்மை ஞானத்தை தேடி அறிவை நிரப்ப மாட்டீர்கள்
கல்வியும், இளமையும், செல்வமும் நிறைந்து இருக்கும் நாட்களில் தருமம், அறம் செய்ய மாட்டீர்கள்
தினமும் தூங்கி விழித்து நாள்தோறும் என்ன செய்கின்றோம் என்பதை ஆய்வு செய்ய மாட்டீர்கள்
உங்கள் உடலில் இருந்து உயிர் பிரிந்தபின் உடலை தீயின் வெப்பம் பரந்து சுட்டெரிக்கும் நேரத்தில் என்ன செய்யப் போகின்றீர்கள் ஏழை மனதிற்கு சொந்தக்காரர்களே?...

**இதை பாரதியார் வேறு விதமாக சொல்கின்றார்.**

தேடிச் சோறு நிதந்தின்று - பல
சின்னஞ் சிறுகதைகள் பேசி - மனம்
வாடித் துன்பமிக உழன்று - பிறர்
வாடப் பலசெயல்கள் செய்து - நரை
கூடிக் கிழப்பருவ மெய்தி - கொடுங்
கூற்றுக் கிரையெனப்பின் மாயும் - பல
வேடிக்கை மனிதரைப் போலே - நான்
வீழ்வே னென்று நினைத் தாயோ?

பலவித உணவு வகைகளை தேடி தேடி .. கடல் உணவு, மிருக உணவு, பிச்சா , கொத்துரொட்டி பிரியாணி. தினந்தோறும் உண்கின்றோம் அந்த நடிகருக்கும் இந்த நடிகைக்கும் கள்ள தொடர்பு, அந்த தலைவர் அப்படி, இவர் இப்படி என்று எதற்கும் பயனற்ற ஆன்ம ஞானத்திற்கு, தேவையற்ற விடுவிடுப்புகள், குசுகுசுப்பு கள் கதைக்கின்றோம்
உலக பற்றுகளினால் மனம் வருந்தி துன்பத்திலும் கவலைகளிலும் வாடுகின்றோம் ,

அவனை அப்படி வருத்துவேன், கொல்வேன் அந்த இனத்தை வாட்டுவேன் , அழிப்பேன் , துன்பப்பட வைப்பேன் என்று ஆணவத்தில் பல கொடுமைகள் செய்கின்றோம் தலை நரைத்து, வாலிப பருவம் கடந்து,

உடல் நோய்வாய்ப்பட்டு தோல்கள் சுருங்கி கிழவனாகி நோய் வாய்ப்பட்டு , காலதேவன் இழுப்பில் மாடு வைக்கோலை இழுத்து உண்பதுபோல் அழிந்துபோகும் வேடிக்கையான மனிதர்களைப்போல் நானும் இறப்பேன் என்று நினைத்தாயோ?

சிந்தியுங்கள் தமிழ் மனிதர்களே. தமிழராகப் பிறந்து ஞானம் போதித்த சித்தர்களின் போதனைகளை நாம் உலகிற்கு சொல்ல முயற்சிக்க வேண்டாமா?..

.......................................................................................................................................

## வாழ்க்கையே புரியாத புதிர்...

1- பணம்:-

-பணம் இல்லாத போது ஹோட்டலில் வேலை செய்தாலும் வீட்டில் வந்து சாப்பிடுகிறான.

-பணம் இருக்கும்போது வீட்டில் சமைத்தாலும் ஹோட்டலில் போய்ச் சாப்பிடுகிறான்.

-பணம் இல்லாபோது வயதை நிரப்பு சைக்கிளில் போகின்றான்.

-பணம் இருக்கும்போது வயதைக் குறைக்க சைக்கிளில் போகின்றான்.

-பணம் இல்லாதபோது சோற்றுக்கு அலைகின்றான்.

-பணம் இருக்கும்போது சொத்துக்கு அலைகின்றான்.

-பணம் இல்லாதபோது பணக்காரனாக நடந்துகொள்கிறான்.

-பணம் இருக்கும்போது ஏழையாகக் காட்டிக்கொள்கிறான்.

-நிம்மதியாக இருக்கும்போது பணத்தைத் தேடுகிறான்.

-பணம் இருக்கும்போது நிம்மதியைத் தேடுகிறான்.

## மனிதன் மனிதனாக வாழ 17 அம்சங்கள்..

01- மிகவும் மதிக்கப்பட வேண்டியவர்கள் - தாய், தந்தை.
02- மிக மிக நல்ல நாள் - இன்று.
03- மிகப்பெரிய வெகுமதி - மன்னிப்பு.
04- மிகவும் வேண்டியது - பணிவு.
05- மிகவும் வேண்டாதது - வெறுப்பு.
06- மிகவும் பெரிய தேவை - நம்பிக்கை.
07- மிகக் கொடிய நோய் - பேராசை.
08- மிகவும் சுலபமானது - குற்றம் காணல்.
09- கீழ்த்தரமான விடயம் - பொறாமை-
10- நம்பக் கூடாதது - வதந்தி.
11- ஆபத்தை விளைவிப்பது - அதிக பேச்சு.
12- செய்யக் கூடாதது - நம்பிக்கைத் துரோகம்.
13- விலக்க வேண்டியது - சோம்பேறித்தனம்.
14- உயர்வுக்கு வழி - உழைப்பு.
15- நழுவவிடக் கூடாதது - வாய்ப்பு.
16- பிரியக் கூடாதது - நட்பு.
17- மறக்கக் கூடாதது - நன்றி.

# அஞ்சலி !.....

## (முதலாவது சிறுகதை)

- செல்வி சாமினா சிவதாசன் -
எசன் - யேர்மனி

மண் சஞ்சிகையில் பல்வேறு ஆக்கங்களை எழுதிவரும் இவரின் முதலாவது சிறுகதை இதுவாகும். தற்போது பல்கலைக் கழகத்தில் படித்துக்கொண்டு தமிழுக்கு அணிசேர்க்கும் இந்த எழுத்தாள இளையவரை வாழ்த்தி வரவேற்கின்றோம். மேலும் பல படைப்புகள் எழுதி வளர வாழ்த்துகின்றோம்

அஞ்சலி எழுந்து வெளியே பார்த்தாள். அன்று மார்கழி மாதத்தின் அமைதியான ஓர் காலைவேளை. வீட்டுக்கூரைகள், மரங்கள், வீதிகள் என அனைத்து இடங்களும் பனியால் மூடப்பட்டிருந்தன. நத்தார் தினத்திற்கு இன்னும் சில நாட்கள் தான் இருக்கிறது என குதூகலமாக எண்ணினாள்.

அவள் தனது பெற்றோருடன் சேர்ந்து வண்ணநிற மின்குமிழ்களாலும் அழகிய அலங்காரப்பொருட்களாலும் வீட்டை அலங்கரித்தாள். வரவேற்பறையின் ஒரு மூலையில் அலங்கரிக்கப்பட்ட நத்தார் மரம் பளபள என கண்ணுக்கு கவர்ச்சியாக தோன்றுகிறது. அத்துடன் கறுவா, கராம்பு மற்றும் வனிலா போன்ற வாசனைத்திரவியங்கள் கமகம என வீடு முழுவதும் மூக்கைத் துளைத்துக் கொண்டிருக்கிறது.

வரவிருக்கும் நத்தார் தினத்திற்கு எல்லாம் தயாராக இருக்கிறது. இருப்பினும் சில பரிசுப்பொருட்கள் வாங்க வேண்டிய சூழ்நிலை இருக்கிறது. இன்று அஞ்சலி தனது அம்மாவுடன் மிகுதிப் பரிசுப்பொருட்கள் வாங்க வேண்டுமென முடிவெடுத்து கடைகளுக்குச் சென்றாள். ஏறி இறங்கி, அங்கும் இங்கும் அலைந்து திரிந்து ஒருவாறு அனைத்துப்



பொருட்களையும் வாங்கி முடித்தாள். ஓரளவு ஆயத்தங்கள் நிறைவேறினாலும் ஓர் விடயம் அவளது மனதை உறுத்திக்கொண்டு இருக்கின்றது.

வீதிகளில் நடந்து செல்லும் போது கடைகளின் ஓரங்களில் வீடற்றமக்கள் இருந்ததை கவனித்தாள். ”நான் இங்கு அலங்கரிக்கப்பட்ட வீட்டில் எனது அன்பான குடும்பத்துடன் நத்தார் தினத்தை கொண்டாட இருக்கின்றேன். ஆனால் வீடற்றமக்கள் நத்தார் தினங்களில் என்ன செய்வார்கள்?” என்ற யோசனை அவளுக்கு தோன்றியது.

நாட்கள் பல கழிந்தாலும் அவளால் இந்த எண்ணங்களை மறக்க முடியவில்லை. தனது எண்ணங்களை பெற்றோருடன் கலந்து ஆலோசித்து ஒரு நல்ல முடிவுக்கு வந்தாள். நத்தார்தினத்திற்கு சில நாட்களுக்கு முன் அவள் தனது பெற்றோருடன் கடைக்கு சென்று போர்வைகள், ஆடைகள் மற்றும் சில அத்தியவசியமான பொருட்கள் வாங்கினாள்.

அத்துடன் வீட்டில் தனது சிறிய கைகளால் செய்த இனிப்புப் பண்டங்களையும் சேர்த்து வீடற்றமக்களுக்கு வழங்கினாள். அத்தகைய மக்களுக்கு தனது செயல் நிரந்தரமான உதவி இல்லை என்பது அவளுக்கும் தெரியும். ஆனாலும் தன்னால் முடிந்த ஒரு உதவியை செய்து அவர்களுடைய முகத்தில் சிறிய புன்னகையை பார்க்க விரும்பினாள்.

நத்தார் என்பதன் உண்மையான அர்த்தங்களில் இதுவும் ஒன்று. நத்தார் என்பது உங்கள் சுற்றுப்புறங்களை பிரமாண்டமாக அலங்கரிப்பது மற்றும் மிகப்பெரிய பரிசுப்பொருட்களை கொடுப்பது அல்லாமல், எம்மை சுற்றியிருக்கும் ஏழைகள் மற்றும் வறிய அன்பு நேசங்களுக்கு இதயத்தில் மகிழ்ச்சியான தருணங்களை நிலைக்கவும், அவர்களுடைய முகத்தில் புன்னகையை ஏற்படுத்துவதே நத்தார் பண்டிகையின் உண்மையான நோக்கம் ஆகும்.

இந்த சிறப்பான காலத்தில் நாம் அனைவரும் தினசரியிலிருத்து சிறிய நேரத்தை ஒதுக்கி, உதவி தேவைப்படுவர்களுக்கு உதவி செய்து நத்தார் பண்டிகையின் உண்மையான நோக்கத்தை வெளிப்படுத்துவோம். நத்தாரின் நிஜ அழகை வெளிப்படுத்திய அஞ்சலி மனதில் பூரிப்படைந்தாள்...

எமது மண் சஞ்சிகை குடும்பத்தினருக்கும் அனைத்துலக வாசகர்களுக்கும் எனது நத்தார்தின மற்றும் புத்தாண்டு நல்வாழ்த்துக்கள்.

## 16ம் பக்க கணக்குப்புதிர் விடை...



**காணப்படும் எண்கள்...**

0, 1, 2, 4, 6, 8, 9

# சிறுவர் குறுக்கெழுத்துப்போட்டி முடிவு

| | | | |
|---|---|---|---|
| ந | த் | தா | ர் |
| ல் | தை | ந் | த |
| நெ | ய் | பா | த் |
| றி | கா | ல் | பு |

# குறுக்கெழுத்துப்போட்டி முடிவு

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| தே | ர் | த | ல் | ள | ள் | வ |
| ங் | தி | த் | க | ளை | லா | ள் |
| கா | த | ல | ன் | து | று | ளு |
| ய் | பா | ப் | னி | மா | ற் | வ |
| கா | ம் | ட | கு | ள | சு | ர் |
| ங் | கு | ர | ங் | கு | ட | ப |
| மா | ட | ம் | ப | ட் | ட | ம் |

# சுடோக்கோ போட்டி முடிவு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | 3 | 7 | 9 | 8 | 6 | 4 | 5 | 2 |
| 9 | 2 | 5 | 3 | 4 | 7 | 1 | 6 | 8 |
| 8 | 6 | 4 | 5 | 2 | 1 | 9 | 7 | 3 |
| 7 | 5 | 3 | 8 | 1 | 4 | 6 | 2 | 9 |
| 6 | 1 | 2 | 7 | 3 | 9 | 8 | 4 | 5 |
| 4 | 8 | 9 | 6 | 5 | 2 | 3 | 1 | 7 |
| 5 | 7 | 1 | 4 | 9 | 3 | 2 | 8 | 6 |
| 2 | 9 | 8 | 1 | 6 | 5 | 7 | 3 | 4 |
| 3 | 4 | 6 | 2 | 7 | 8 | 5 | 9 | 1 |

# நான்தான்!... மதவடி மயிலன்!...



நான்தான் மதவடியான் மீண்டும் வந்திருக்கிறன்... வணக்கம்!...வணக்கம்!... எல்லாரும் சுகம் என்று நினைக்கிறன்..

கோடைகாலத்தில் பலபேர்தாய் நாட்டுக்குப் போய் வந்திருப்பியள் தானே. பலர் கண்டதெல்லாததையும் திண்டு கொழுத்து நிறைகூடியும் வந்திருப்பிள். இனி என்ன பிரசர், சீனி வருத்தம் கொலஸ்ரோல் என டொக்டர்களிடம் மாறி..மாறிச் செல்ல வேண்டியதுதானே...

ஊருக்குச் சென்றவர்கள் அங்கு பந்தா காட்டி, தண்ணியடித்து கூழும் கும்மாளமும் அடித்தவர்கள் தமது பிள்ளைகளுக்குச் சாமத்தியச் சடங்கு கலியாணம் தமது சாதி, சமயம் பார்த்துச் செய்து வைத்தவர்கள், 40, 50, 60, 70 எனப்பிறந்தநாள் கொண்டாடியவர்கள் பல ரகத்தினர் செய்த அட்டகாசங்களோ கண்கொண்டு பார்க்க முடியாது. அந்தளவுக்குக: கொண்டாட்டங்கள் களைகட்டி இருந்ததை உடனுக்குடன் தமிழ் ஊடகங்கள் காட்டிக்கொண்டுதான் இருந்தன பாருங்கோ..

நம்மட நாட்டில பொருளாதாரப் பிரச்சனையால் பெரும் நெருக்கடி. இதனால் நாட்டைவிட்டுத் தப்பி வெளிநாடுகளுக்கு எப்ப ஓடலாம் என்று பல்லாயிரக் கணக்கானோர் படாத பாடுபடுகுதுகள் பாருங்கோ.. வேலை வெட்டி ஒன்றும் இல்லாமல் வெளிநாடுகளில் இருந்து வரும் பணங்களை நல்லாய் அனுபவிக்கும் கூட்டத்தினர் மிக அதிகம் பேர்.

அது அப்படி இருக்கையில் ஜனாதிபதி தேர்தல் , பாராளுமன்றத் தேர்தல் சூடுபிடித்து அரசியல் குழப்பங்கள் முட்டி மோதி எங்கும் எப்போதும் பிரச்சனை..பிரச்சனை என்றே மக்கள் படும்பாடு அல்லோல கல்லோலம்தான். பாராளுமன்றக் கதிரைகளையும் உள்ளூராட்சி மன்றக் கதிரைகளையும் பிடித்து சொகுசுவாழ்வு வாழ எத்தனைப்பேர் வாக்களார்களைவிட வேட்பாளர்கள் கூடப்பேர் கண்டியளோ.அந்தளவுக்கு கதிரைச் சண்டை முற்றிவிட்டது. யாராவது நாட்டின் பொருளாதாரத்துக்கு நல்ல தீர்வை வைப்பார்கள் என்றால் இது கிடையாது பாருங்கோவன்.

நம்மட அரசியல் வாதிகளும் நாளுக்குநாள் பல பிரச்சனைகளைக் கிழப்பிக் குளிர்காயும் படலம் தொடர்கதைதான் பாருங்கோ..நாடு எக்கேடு கெட்டாலும் பறவாயில்லை நாங்கள் எங்கட பணம் பண்ணும் வேலையில்தான் குறிக்கோளாக இருப்பம்..அதுமட்டுமல்லாமல் அரசியல் கதிரைகளைப் பிடித்து சொகுசு வாழ்வு வாழப் பலர் துடியாய்த் துடிக்கினம் பாருங்கோ. 14ம் திகதி நடக்கும் தேர்தலில் வாக்காளர்களைவிட வேட்பாளர்கள் மிகக்கூடதல் என்று எனது ஊர் நண்பன் கூறினான் பாருங்கோவன்...

சரி..சரி.. இப்படியே அடுக்கிக் கொண்டு போகலாம் பல கதைகள். என்ர கனகாலத்து நண்பன் ஒருவன் ஊரில் வாழ்ந்துகொண்டு இருக்கிறான். அவனுக்கென்ன ஐந்து பிளளைகளையும் ஐந்து கண்டங்களுக்கும் அனுப்பிப்போட்டு சொகுசு வாழ்வுதான். அவன் அடிக்கடி எனக்குத் ரெலிபோன் எடுப்பான். பலதும் பத்தையும் என்னோடு பகிராவிட்டால் அவனுக்கு நித்திரையே வராது கண்டியளோ..

சென்றவாரம் நான் ஒருக்கா கதைப்பம் என்று எடுத்தன். அவன் ஒரே பிசியாம்.. என்ன மச்சான் உன்னைப் பிடிக்கேலாது என்றேன். ஓமடாப்பா நான் படு பிசிதான்ரா.. என்னடா என்றேன்.. மச்சான் இப்ப தேர்தல் திருவிழா மச்சான்.. அதுக்கென்னடா என்றேன். இப்ப உழைக்க வேண்டிய காலம் மச்சான் சும்மா வாற காசையும் போத்தலையும் ஏன்ராப்பா விடுவான். என்றான் எனக்கு விளங்கவில்லை என்னடா விசயம் என்றேன்....

மச்சான்.. இங்க எத்தனை கட்சி, எத்தனைபேர் எந்தக்கட்சி, யார் நல்லவர், யார் வல்லவர், யார் கொள்கை நல்லது ,கூடாது. விடிவு வருமா?..வராதா?..ஒன்றும் தெரியாமல் மக்கள் அல்லோலகல்லோலம். நூற்றுக்கணக்கான கட்சிகளும் ஆயிரக்கணக்கான போட்டியாளர்களும் களத்தில் குதித்து விளையாடுகினம். வெல்லப் போவது யார் என்று ஒருவருக்கும் தெரியாது. அதுதான் மச்சான் நான் ஒரு யுத்தியைப் பாவிக்கிறன் என்றான்..என்டா யுத்தி புத்தி என்கிறாய்..என்றேன். யார் வென்றாலும் தோற்றாலும் ஒண்டும் ஆகப்போறதில்லை..எல்லாரும் குத்துக்கரணமடிக்கும் வீரர்கள்தான் மச்சான் என்றான்.

பொறு மச்சான் இதற்குள் என்ர குத்துக்கரணத்தை கேள் மச்சான் என்று அவன் விடாமல் தொடர்ந்தான்.

மச்சான் எனக்குத் தெரிந்த வேட்பாளர தலைவர்கள் (தறுதலைகள்) அனைவரின் போட்டோக்களையும் கலர் புள்ளாகப் பிறிண்ட் பண்ணி வைத்திருக்கிறன். எங்கட ஊருக்க எந்த அரசியல் வாதி வாறார் என்று கண்காணிப்பில் இருப்பேன் . எப்போதும் ஒழுங்கையை நோட்டம் விட்டுக்கொண்டு இருப்பேன். ஒரு வர் வருகிறார் என்றால் ஓடிப்போய் அவரின் படத்தை வீட்டில் ஒட்டிவிடுவேன். அவர்கள் வீட்டுக்குள் வந்ததும் ஐயா உங்களுக்குத்தான் எங்கட வோட்டுப் போடுவேன் என்று எனது போலி விசுவாசத்தை எடுத்துவிடுவேன் அவரும் அவரோட வந்த பரிவாரங்களும் சந்தோசத்தில் ஏதோ ஏதோ எல்லாம் உளறி மகிழ்ச்சியில் பொக்கற்றுக்கேம் காசு வைத்திட்டுப் போக இன்னும் ஒரு சிலர் பார் பக்கம் வாரும் கவனிப்பம் என்றும் சொல்லிப்போட்டுப் போவினம்.

அப்ப.. ஒவ்வொருதரும் வீட்டுக்குவர ஒவ்வொருவருடைய படத்தையும் மாறிமாறி ஒட்டித்தான் மச்சான் பிழைப்பு போகுது. 14ம் திகதி மட்டும் பிழைப்பு பறவாயில்லாமல் போகும். பல ஏழைகள் இன்றும் வாழ முடியாமல் கஸ்டப்பட இவங்கள் சொகுசு வாழ்க்கைக்கு அடிபட்டு, போலி வாக்குறுதிகளை அள்ளிக் கொட்டுகிறாங்கள் உவங்களுக்குப் வோட்டுப் போட்டு என்ன?..போடாமல்விட்டால் என்ன?.. பலருக்குக் கட்சிகளின் பெயரே தெரியாமல் திண்டாடுகிறார்கள் மச்சான் என்றான்.

என்னடா இப்படிச் சொல்கிறாய் என்றேன். வேறு என்னத்தைச் சொல்ல என்று சலித்தான். வாக்கு என்பது மிகப்பெரி சக்தி என்றேன். தலைவிதியை மாற்றும் என்றேன். உண்மைதான் அனுரா ஜனாதிபதியாக வந்து சில கள்ளர் பிடிபட்டிருக்கினம். கொஞ்சம் பொறுப்போம். பாராளுமன்றத் தேர்தலில் அனுரா கட்சி வெற்றால் கள்ளக்கோஸ்டிகள், மாபியாக் குழுக்கள் எல்லாருக்கும் சங்குதான். எல்லாக் கோஸ்டிகளும் கொள்ளையடித்த காசுகள் இந்த நாட்டுக்குப் பத்து வருடத்துக்குச் சாப்பாடு போடக் காணும் மச்சான் என்றான்.

உண்மைதான் துடிப்புள்ள இளைஞர்களை எம்பியாக அனுப்புங்கோ என்றால் பழுத்த தலைகள் விடுகுதுகள் இல்லை. சம்பந்தரைப் போல சாகும்வரை எம் பியாக இருக்க வேணும் என்று மண்டையைப் போட்டு உடைக்கிறாங்கள். மீண்டும் மீண்டும் வென்று பணம், புகழ் சம்பாதிக்க அலையுதுகள் மச்சான் என்றான்.

அடுத்தது .பெண்களுக்குச் சமஉரிமை அது இது என்று வாயால் வடைசுடுவதுதான் அரசியல் வாதிகளின் வேலை மச்சான். யாராவது எந்தக் கட்சியாவது ஒரு பெண்ணையாவது முதன்மை வேட்பாளராகத் தெரிவுசெய்தாங்களா?.. கடைசி வேட்பாளராகப் போட்டுவிட்டு இறுதியில் உங்களுடைய வாக்கு காணாது என்று கதையை முடிப்பினம். உண்மையாகச் சொல்லுறன் மச்சான் ஒரு பெண்ணைக்கூட எம் பியாக்கமாட்டாங்கள். இருந்துபார் இது உண்மை என்றான்...

சரி மச்சான் நீ சொல்வது சரிதான் நாட்டில் நானும் இருந்தால்தான் எல்லாருடைய திருகுதாளங்களும் விளங்கும். உன்னுடையதும்தான் என்றபோது அமைதியானான். இல்லை மச்சான் நாட்டின் நிலைமை அப்படி. அப்படித்தான் வாழவேண்டும். லக்சன் முடியட்டும் இன்னும் கனக்கச் சொல்லுவேன் என்றான். யாரை நோவது?..யார்க்கெடுத்துரைப்பது... உங்களைத்தவிர!.. அப்ப அடுத்த விடயத்தோட இந்த மயிலன் வருவான்!..

## வாழ்க்கைக்கு நிம்மதி தரும் மந்திரங்கள்....

- உங்களைக் கோபப்படுத்தும் போது மௌனமாக இருங்கள்.
- விலக்கி வைக்கும் போது சற்று விலகி இருங்கள்.
- பெருமைப் படுத்தும் போது துள்ளி எழாதிருங்கள்.
- உதாசீனப் படுத்தும் போது உடைந்துவிடாமல் இருங்கள்.
- அவமானப் படுத்தும் போது தவறியும் அழாமல் இருங்கள்.
- தோல்வி அடையும் போது துணிந்து எழுங்கள்.
- வெற்றி பெறும் போது பணிந்து இருங்கள்.
- காயப்படுத்தும் போது கண்டும் காணாமல் இருங்கள்.

# சினிமாவில்!...

தென்னிந்திய தமிழ்ச் சினிமாவின் இயக்குனர்களும் அவர்களின் முதல் படங்களும்...

1965 - கே பாலச்சந்தர் - நீர்க்குமிழி
1977 - மகேந்திரன் - முள்ளும் மலரும்
1979 - பாரதிராஜா - பதினாறு வயதினிலே
1979 - பாலுமகேந்திரா - அழியாத கோலங்கள்
1979 - பாக்கியராஜா - சுவரில்லா சித்திரங்கள்
1981 - சந்திரசேகர் - சட்டம் ஒரு இருட்டறை
1981 - வாசு - பன்னீர்ப் புஸ்பங்கள்
1982 - சுந்தரராஜன் - பயணங்கள் முடிவதில்லை
1982 - சுரேஸ்கிருஸ்ணா - சத்தியா
1982 - மனோபாலா - ஆகாயக் கங்கை
1985 - மணிவண்ணன் - கோபுரங்கள் சாய்வதில்லை
1985 - மணிரத்தினம் - பகல் நிலவு
1989 - பார்த்திபன் - புதியபாதை
1990 - ரவிக்குமார் - புரியாத புதிர்
1991 - ராஜ்கபூர் - தாலாட்டு கேட்குதம்மா
1993 - சங்கர் - ஜென்டில்மேன்
1995 - சுந்தர்ஜி - முறைமாமா
1997 - சேரன் - பாரதி கண்ணம்மா
1999 - பாலா - சேது
1999 - பிரபு சாலமன் - கண்ணோடு காண்பதெல்லாம்
1999 - சூரியா - வாலி
1999 - தரணி - எதிரும் புதிரும்
2001 - கௌதமேனன் - மின்னலே
2001 - முருகதாஸ் - தீனா
2001 - ஹெரி - தமிழ்
2002 - அமீர் - மௌனம் பேசியதே
2002 - செல்வராகவன் - துள்ளுவதே இன்பம்
2003 - சமுத்திரக்கனி - உன்னைச் சரணடைந்தேன்



2005 - பேரரசு - திருப்பாச்சி
2006 - மிஸ்கின் - சித்திரம் பேசுதடி
2007 - வெங்கட் பிரபு - சென்னை
2007 - வெற்றிமாறன் - பொல்லாதவன்
2007 - பிரபுதேவா - போக்கிரி
2007 - விஜய் - கிரீடம்
2009 - பாண்டியராஜன் - பசங்க
2009 - ராஜேஸ் - சிவா மனசுல சக்தி
2012 - ரஞ்சித் - அட்டகத்தி
2013 - அட்லி - ராஜா ராணி
2014 - விநோத் - சதுரங்க வேட்டை
2016 - லோகேஸ் கனகராஜ் - அவியல்
2018 - நெல்சன் - கோலமா கோகிலா



## சினிமா!...சினிமா!...

தமிழ்ச்சினிமாவில் குறைந்த வயதில் நடிப்புக்கு வந்த சில நடிகைகள்...

01- ஸ்ரீதேவி - 13 வயது
02- ஹன்சிகா - 14
03- ரம்மிய கிஸ்ணன் - 15
04- திரிஷா - 15
05- பாவனா - 15
06- ரம்மிய நமீசன் - 15
07- துளசி நாயர் - 15
08- மீனா - 16
09- ராதா - 16
10- ரம்பா - 16
11- சந்தியா - 16
12- பானுப்பிரியா - 16
13- ராதிகா - 16
14- அசின் - 16
15- லைலா - 16
16- ஜெலிலியா - 16 வயது
17- சுனைனா - 16
18- ஸ்ரீதேவி விஜயகுமார் - 16
19- தமன்னா - 17
20- ரேவதி - 17
21- நளினி - 17
22- ஜெயலலிதா - 17

# சுகாதாரச் செய்திகள்..

## நாம் உண்ணும் உணவுகள் சில சமிபாடு அடைய (ஜீரணமாக) எவ்வளவு நேரம் ஆகும் தெரியுமா?..

01- ஒரு கிளாஸ் பால் - (4 - 5 மணி) 240 - 300 நிமிடங்கள்
02- பழச்சாறுகள் (யூஸ்) - 20 - 30 நிமிடங்கள்
03- பீற்றூட் - 40 - 50 நிமிடங்கள்
04- கோவா வகைகள் - 40 - 50 நிமிடங்கள்
05- வாழைப்பழம், அப்பிள் போன்ற பழங்கள் - 20 . 30 நிமிடங்கள்
06- உருளைக்கிழங்கு - 50 - 60 நிமிடங்ள்
07- பச்சையாகச் சாப்பிடும் கரட் 50 - 60 நிமிடங்கள்
08- முந்திரி, பாதாம், பிஸ்தா போன்றவை (3 மணி) 180 நிமிடங்கள்

## சில குறிப்புகள்...

01- வாழை வாழ வைக்கும்.
02- அவசரச் சோறு ஆபத்து.
03- ஆறிய உணவு மூட்டு வலி உண்டாக்கும்.
04- இரைப்பைப் புண்ணுக்கு எலுமிச்சைச் சாறு.
05- இரத்தக் கொதிப்புக்கு அகத்திக் கீரை.
07- இருமலைப் போக்கும் வெந்தயக்கீரை.
08- உஷ்ணம் (வெப்பம்) தவிர்க்க கம்பங்களி.
09- கல்லீரல் பலம் பெற கொய்யாப் பழம்.
10- குடற்புண் நலம்பெற அகத்திக்கீரை.
11- கொலஸ்ரால் குறைக்க பன்னீர் திராட்சை.
12- சித்தம் தெளிய வில்வம்.
13- சிறுநீர்க் கடுப்புக்கு அன்னாசி.
14- சூட்டைத் தணிக்க கருணைக் கிழங்கு.
15- ஜீரண (சமிபாடு) சக்திக்கு சுண்டக்காய்.
16- தலைவலி நீக்க முள்ளங்கிச் சாறு.
17- இரத்தத்தைத் தூய்மையாக்க தேனுடன் இஞ்சி.
18- பென்சிலின் சக்திக்குப் (உள்ளி) பூண்டு.
19- மூலநோய் தீர வாழைப்புக்கூட்டு.
20- வாந்திக்கு மருந்து மணத்தக்காளி.
21- வாதநோய் தடுக்க அரைக்கீரை.
22- வாய்த் துர்நாற்றம் தீர்க்க ஏலக்காய்.
23- உடற்பருமன் குறைய முட்டைக்கோவா.
24- பித்தம் தணிக்க நெல்லிக்காய்.

உணவு மருந்தாக இருக்க வேண்டும். இல்லாவிட்டால் மருந்தே நமக்கு உணவாகிவிடும்...

# அப்பிள் பழம்...



அப்பிள் சாப்பிடுபவர்களுக்கு இந்த பிரச்சனைகள் கிட்டவே நெருங்காதாம்!

அப்பிள் உடலுக்கு பல வரப்பிரசாதங்களை வழங்கின்றது. ஆனால் இன்றை குழலில் பெரும் பாலானவர்கள் ஆப்பிள் சாப்பிடுவதில்லை. சிலருக்கு ஆப்பிள் சாப்பிடவே பிடிக்காது என கூறுபவர்களும் இருக்கின்றனர். ஆனால் குழந்தைகள்ம் முதல் பெரியவர்களை வரை அப்பிள் சாப்பிடுவதனால் பல நன்மைகளை பெறலாம்.
அப்பிள் சாப்பிடுபவர்களுக்கு இந்த பிரச்சனைகள் கிட்டவே நெருங்காதாம்! Lifestyle Cholesterol Control Apple Health அப்பிள் சாப்பிடுவதால் கிடைக்கும் நன்மைகள்...
- அப்பிள்கள் புற்றுநோய், நீரிழிவு மற்றும் இதய நோய் அபாயத்தைக் குறைக்கும்.
- அப்பிள்கள் மூளை ஆரோக்கியத்தையும் எடை இழப்பையும் மேம்படுத்த உதவும்.
- அப்பிளில் பெக்டின் என்றும் கரையக்கூடிய நார்ச்சத்து அதிகம் உள்ளதால் உடலில் உள்ள கெட்ட கொலஸ்ட்ராலானது கரைந்துவிடும்.
- அப்பிளில் ஊட்டச்சத்துக்கள் அதிகம் உள்ளதால் இதய நோய் ஆபத்து குறைவாக உள்ளது.
- அப்பிள்களை சாப்பிடுவது Level -2 நீரிழிவு நோய் அபாயத்தைக் குறைக்கிறது.
- அப்பிளில் உள்ள ஆக்ஸிஜனேற்றிகள் நுரையீரல், மார்பக மற்றும் செரிமான பாதை புற்றுநோய்களை எதிர்த்து போராடுகின்றன.
- அப்பிள்கள் ஆக்ஸிஜனேற்ற அழுத்தத்தால் மூளையில் ஏற்படும் சேதத்திலிருந்து பாதுகாக்கின்றன.
- அப்பிளை சாப்பிட்டால், அதில் உள்ள ஆன்டி-ஆக்ஸிடன்ட்டால், கண்புரை நோய் ஏற்படுவதைத் தடுக்கலாம்.

## HumanBody-மனிதஉடலில்சில

எலும்புகள் - Number of bones - 206
தசைகள் - muschles - 639
சிறுநீரகங்கள்- kidneys - 02
முகத்தசைகள்- bones in face - 14
மண்டை ஓட்டுத்தசைகள்- bones in skull - 22
மார்புத்தசைகள்- bones in Chest - 25
கைத்தசைகள் Arms- 06
இதயத்தசைகள்-bones in heart - 02
கால்தசைகள்- bones in foot - 33
மணிக்கட்டுத்தசைகள்-bones in wrist - 08
கைத்தசைகள்- bones in hand - 27
Sibs (12parts)- 24
பாற்பற்கள் - milk feeth 20
இதயஅறைகள்-Chambers in heart - 04
முதுகெலும்புVestebrae in Spine - 33



# நெல்லிக்காயின் பயன்பாடு

.தேவையற்ற கொழுப்பினால் அவதிப்படுகின்றீர்களா? நெல்லிக்காய் செய்யும் அற்புதம் மனிதனுக்கு இயற்கை அளித்த மருத்துவ குணம் மிக்க ஒரு உணவு பொருள் தான் நெல்லிக்காய்.

நெல்லிக்காய்.. ஏழைகளின் ஆப்பிள் என்றும் ஆயுளை வளர்க்கும் கனி என்று குறிப்பிடப்படும் நெல்லிக்காயில் அதிகமான அளவு வைட்டமின் சி சத்துக்கள் நிறைந்துள்ளது.கொஞ்சம் அதிக புளிப்பு, கொஞ்சமான இனிப்பு, எஞ்சிய துவர்ப்பு, சற்றே கசப்பு என்றிருக்கும் நெல்லிக்கனி இன்று பரவலாக எல்லோரது வீட்டிலும் பழங்கள் காய்களுடன் பயன்படுத்தப்படும் ராஜகனியாக அழைக்கப்படுகின்றது.

தேவையற்ற கொழுப்பினால் அவதிப்படுகின்றீர்களா? நெல்லிக்காய் செய்யும் அற்புதம் ’ Good Health For Amla Benefits சமைத்தாலும், வேக வைத்தாலும், காயவைத்தாலும், வெட்டி நறுக்கினாலும் மொத்த பயனையும் வீணாக்காமல் தரும் சத்து மிகுந்த கனி இந்த நெல்லிக்கனி.

நெல்லியில் 80% நீர்ச்சத்து நிறைந்திருக்கிறது. இதனுடன் புரதச்சத்து, மாவுச்சத்து, நார்ச்சத்து, வைட்டமின் இரும்புச்சத்து, பாஸ்பரம், கரோடின் பாலிபினால், வைட்டமின் பி காம்ப்ளக்ஸ் நிறைந்திருக்கிறது.தேவையற்ற கொழுப்பினால் அவதிப்படுகின்றீர்களா? நெல்லிக்காய் செய்யும் அற்புதம் ’ Good Health For Amla Benefits

கொழுப்புகளை கரைக்கும் நெல்லிக்காய்...குறிப்பாக நோய் எதிர்ப்பு சக்தி அதிகரிப்பதுடன் மூளை வளர்ச்சிக்கும் உதவுகிறது, நம் உடலில் தோன்றும் நஞ்சுகளை வெளியேற்றி இளமையாக இருக்க வழி செய்கிறது.

நெல்லிக்காயில் நார்ச்சத்துக்கள் அதிகம் இருப்பதால் நம் உடல் எடை-யை அதிகரிக்காமல் பார்த்துக் கொள்கிறது. உடல் எடையை சீக்கிரமாக குறைக்க விரும்புபவர்கள் நெல்லிக்காய் ஜூஸ் செய்து சாப்பிடலாம் என்று கூறப்படுகிறது.

# விளையாட்டுச் செய்திகள்...



## றொனால்டோ..

1- கால்பந்து உலகில் பல சாதனைகளைப் படைத்த வீரரான கிறிஸ்டியானோ ரொனால்டோ 900 கோல்களை அடித்த முதல் வீரர் என்ற சாதனையைப் படைத்துள்ளார். போர்த்துகல் நாட்டைச் சேர்ந்த கால்பந்து வீரரான இவர் நேஷன்ஸ் லீக் போட்டியில் குரோஷியாவுக்கு எதிராக போர்த்துகல் அணி 2-1 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது. இதன் மூலம் தற்போது வரை கால்பந்து உலகில் 900 கோல்கள் அடித்த முதல் வீரர் என்ற வரலாற்று சாதனையை ரொனால்டோ படைத்துள்ளார். மேலும், இவருக்கு அடுத்தபடியாக மெஸ்ஸி 838 கோல்கள் அடித்து இரண்டாவது இடத்தில் உள்ளார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

2- சமூக ஊடகத்தில் உதைபந்து ஜாம்பவான் றோனால்டோவின்புதிய சாதனை..உலகப் புகழ்பெற்றஉதை பந்தாட்ட ஜாம்பவான் கிறிஸ்டி யானோ றொனால்டோ அனைத்து சமூக ஊடகங்களிலும் 100 கோடி பேர் பின் தொடர் பவர்களைக் கடந்து உலக சாதனை படைத் திருக்கிறார்.இவர் உலக நட்சத்திர வீரர்களில் இன்று முதலி டத்தில் உள்ளார். உதைபந்துப் போட்டியில் மின்னும் நட்சத்திரமாக ஒலித்துக் கொண்டிருக்கிறார். வாழ்த்துகள்!..

## ஹயஸ் வாகனத்தை 100 மீற்றர் தூரம் காதுகளால் கட்டியிழுத்து சாதனை



### காதுகளால் வாகனத்தைக கட்டியிழுத்துச் சாதனைபுரிந்த வீரத்தமிழன்!...

யாழ்-தென்மராட்சியின் சாதனை நாயகன் திரு செல்லையா திருச்செல்வம் 1.500 கிலோ எடைகொண்ட ஹயஸ் வாகனத்தை 100 மீட்டர் துாரத்திற்குத் தனது காதுகளால் கட்டியிழுத்துச் சாதனை படைத்துள்ளார்.

அண்மையில் கொடிகாமம் பகுதியில் நடைபெற்ற இந்தச் சாதனை நிகழ்வை பெருவாரியான மக்கள் கண்டுகளித்து அவருக்குப் பரிசுகளையும் வாழ்த்துகளையும் தெரிவித்தனர். திரு திருச்செல்வம் அவர்கள் 60 வயது நிரம்பிய முதியவர் இந்த வயதிலும் சாதனை என்பது பாராட்டத்தக்க விடயமாகும்.

இவர் முன்னரும் தனது தாடியால் பல தடவைகள் பல்வேறு வகையான வாகனங்களை இழுத்துச் சென்று ”சோழன்” உலகசாதனைப் புத்தகத்தில் இடம்பிடித்தவர் என்பதும் குறிப்பிடத்தக்க விடயமாகும்.



இந்தவருடம் ஆடி மாதம் பிரான்சில் நடைபெற்ற ஒலிம்பிக் போட்டியில் 7 மாத கர்ப்பிணிப் பெண் வாள்வீச்சுப் போட்டியில் பங்குபற்றி சாதனை ஒன்றை நிலைநாட்டியுள்ளார்.

எகிப்து நாட்டவரான ஹமீஸ் என்ற பெயருடைய பெண் தனிநபர் பெண்கள் வாள் வீச்சுப் போட்டியில் வயிற்றில் 7 மாதக் குழந்தையுடன் பங்குகொண்டிருக்கிறார். இவர் தங்கப் பதக்கத்தைப் பெறாவிடினும் போட்டியில் பங்குகொண்டமை ஒரு சாதனையாகவே கருதப்படுகின்றது. தாய்மையிலும் பெண்ணுக்கு எதுவும் தடையில்லை என்பதை நிரூபித்த இந்த வீர மங்கைக்கு வாழ்த்துகள்...

---



## 14 வயது மங்கையின். உலகசாதனை...

இங்கிலாந்து நாட்டைச்சேர்ந்த 14 வயது வீரமங்கை இவர் பெயர் டிவைன் ஐஹேம் என்பவர் 14 வயது. 100 மீட்டர் ஓட்டப் போட்டியில் 10.30 வினாடிகளில் ஓடிமுடித்து புதிய சாதனை ஒன்றை நிலைநாட்டியுள்ளார்.இதற்குமுன் 100 மீட்டர் ஓட்டப்போட்டியில் ஜமேக்கா நாட்டு வீரப்பெண்மணி 10.51 வினாடிகளில் ஓடியிருந்தார். உலக 100 மீட்டர் ஓட்டப் போட்டியில் உலக நட்சத்திர ஜாம்பவான் உசைன் போல்ட் 9.58 வினாடிகளில் ஓடி உலக சாதனையை தக்க வைத்துக்கொண்டிருக்கிறார். இச்சாதனையை விரைவில் இந்தப் 14 வயது இளமங்கை ஓடிச் சாதனை படைப்பார் என ஓட்ட ரசிகர்கள் தெரிவித்துள்ளனர். வெற்றிபெற வாழ்த்துக்கள்.

---



## 1.152 கிலோ நிறையுடைய பூசணிக்காய்..

Mario van Geel என்பவர் பெல்ஜியம் நாட்டு விவசாயி. இவரது தோட்டத்தில் விளைந்த பூசணிக்காய்சாதனை படைத்துள்ளது...வாழ்த்துகள்!..

# நத்தார் மனதைப் பூக்கவைத்தது சோலையாயே!..

- திரேஸ் மரியதாஸ் -
இலண்டன் -சட்டன்




பால்மணம் மாறிக் கொண்டிருந்த பச்சிளம்பருவமதில் எப்போதுமே என் பெற்றோர் என்னப்பம்மா அம்மம்மா அன்றி பெரியம்மா மாமி என்று எல்லோருமே ஒன்றாய் அன்பாய்ப் பாசமாய் நேசமாய் கோவில் பாலன்பிறப்பு என்று வீடே நிறைந்த கலகலப்பும் வாணவேடிக்கைகளும் புதுச்சட்டை தைக்கிறதும் போடுறதுமெண்டு வீடே விழாக்கோலம் பூணும் என்று மனதில் மகிழ்ச்சி மத்தாப் பூவாய் மலர பெருமூச்சு விட்டவளாய்!

இப்போ இலண்டன் வந்திட்டம் ஆனால் அந்தப் பரபரப்பு சந்தோசம் ஏதோ கேள்விக்குறியாய் மனதை வருட கண்களில்க் கண்ணீர் ஆறாய் ஓட! அம்மா அம்மா என்றொரு குரல் எத்தனை மணிக்கம்மா நத்தார்ப் பூசை என்று மகன் கேட்க மெல்லத் தன்னைச் சுதாகரித்தவளாய்க் ஓம் எட்டு மணிக்கென்றவளாய் எழுகிறாள்.

மீண்டுமாய்த் திரும்ப அதே இடத்திற்குத் திரும்பியவளாய் இயேசுவே நீர் மரியன்னை வயிற்றில்க் கருத்தரித்து கடவுளான உமக்கு மனிதனாய்ப் பிறக்கக்கூட இடமில்லாமல்ப் போயிட்டுதே அதே மார்கழி இருபத்தைந்தா இன்று என்று நினைவுகள் நிழலாட...

நீர் சென்றவிடமெல்லாம் நன்மை செய்தீரே! பலரும் இவர் யார் கடவுளுடைய மகன் என வியந்தனரே! சூசை இவரது தந்தையே என்றனரே நன்றாய்ப் புதுமைகள் பல புரிந்தாரேயென மகிழ்ந்து நெகிழ்ந்தே போகிறாள்.இயேசு சீடரிடம் மக்கள் என்னை யார் என்று கூறுகிறார்களென்றும் கேட்கிறார். அப்போ பேதுறு நீர் மெசியா கடவுளின் மகன் என்றாரே தன்னைத்தானே பெருமை பாராட்டாமலே கண்ணால்க் கண்ட கடவுளே உன்னை எண்ணி இதயம் மகிழ்கிறதே என்று நெகிழ்ந்தவளாயே!

அன்னையும் சகோதரரும் என்றாரே! என்ன பணிவு எனக்கந்தப் பணிவைத் தரமாட்டாயா என்னையும் உன்னைப்போல மாற்ற மாட்டாயா என்று ஏங்கியவளாய்க் காதைச் சற்றுத் திருப்புகிறாள் " நீங்க மட்டும் இல்லேன்னா எங்கோ நான் சென்றிருப்பேன்.".. பாடல் வரிகள் வந்து விழுகிறது அதை முணுமுணுந்தவளாய் அதில் மூழ்கிப்போகிறாள் தொடர்ந்தும் அழகாய் நிற்க்கும் யார் இவர்கள்?..

உயர்வினிலிம் தாழ்வினிலும் ஊக்கமாகச் செபித்தவர்கள் யாசித்தாலும் போசித்தாலும் லாசருபோல் வாழ்ந்தவர்கள்....இப்படி இயேசுவே உன்னைப் பின்பற்றுமளவுக்கு உலகில் இத்தனை ஆயிரம் இயேசுக்கள் இருக்க நான் வார்த்தையில் வாழ்கிறேனா?.. வாழ்க்கையில் வாழ்கின்றேனா?.. செயல்கள் ஊடாக என்று என்னையே கேட்க்கிறேன் என்று நினைக்கிறாள்!

எப்படி என்னை மாற்றி உன்னைப்போல பணிகள் ஆற்றி என்று எண்ண தோற்றுப்போனவளாய் அல்லவா வாழ்கிறேனே?என்று மனங்கனக்க, சவால்கள் வந்தபோது கர்த்தர் பணியைக் கருத்துடன் ஏற்றுச் செய்யக் கலங்கிப் பின்வாங்கியவளாய் வாழ்ந்தேனல்லவா...பலவேளைகளில்ப் பக்குவமற்று என்று தொடர்ந்து சிந்தித்தவளாய் கடவுள் கொடுத்த கொடைகளையும் ஆற்றல்களையும் மக்களுக்கு நல்லது செய்து அன்பு ஒற்றுமை சமாதானத்தை அறுவடை செய்ய நீர் பாய்ச்சினேனா எனத் தன்னையே சுய பரிசோதனை செய்கிறாள் இயேசு அவதரித்த இந்த நாளில் நான் மாறவேண்டும் என்று முடிவெடுத்தவளாய்...

டிங் டிங் - - - என்று வீட்டு அழைப்பு மணியும் அவளுக்காகவே அடித்ததுபோல பச்சைக்கொடி காட்ட சோர்வோடு இருந்தவள் மனதில் கடவுளின் வார்த்தை வருகிறது " ஆண்டவரில் நம்பிக்கை வைப்போர் கழுகுபோல இறக்கை விரித்து உயரப் பறப்பார் ஓடுவார் களைப்படையார் நடப்பார் சோர்வடையார் "என்ன அற்ப்புதமான வரிகள் நெஞ்சுக்குள்ளே எழவைத்த பூரிப்பாய் மாற பாலன் பிறப்புத் திருப்பலிக்காய் ஆயத்தமாகுகிறாள் பூரிப்புடன்.

அவர்பிழை இவர் பிழை என அடுத்தவர்களுடைய பிழைகளைக் கணக்கிட்டுப் பட்டியலாக்குவதை நிறுத்தி என் கண்ணில் இருக்கும் மரக்கட்டையை எடுக்காமல் அடுத்தவர் கண்ணில் இருக்கும் துரும்பை எடுக்க முனைகிறேன் அல்லவா! என்று எண்ணியவளாய் இந்த 2024 உடன் இயேசுவுக்காய் இல்லாதது பொல்லாதது எதுவென தீர அறியாமல் அடுத்தவரைக் குறை குற்றம் காணக்கூடாதென எண்ணி " எப்பொருள் யார் யார் வாயால்க் கேட்டாலும் உண்மையான விடயத்தைத் தீர ஆய்ந்தறிந்து வாழ்வதே உண்மையான அறிவும் ஞானமுமெனத் தெளிந்தவளாய் மீள்கிறாள் மகிழ்ந்து உள்ளத்தில் அகமகிழ்ந்தாள்!..

**நத்தார்ப் பூப் பூத்தார் மனதிலென மனம் மலரட்டும்!..**



# யேர்மனியில் சகோதரிகளின் அரங்காற்றுகை...

(கலைவாணி. ஏகானந்தராஜா)

யேர்மனி எசன் நகரத்தில் வாழ்ந்துவரும் திரு.திருமதி ரவீந்திரசிவம்.கலையரசிதம்பதிகளின் புதல்விகளானகலைவாணி, ரவீனா. ரவீந்திரசிவம் சகோதரிகளின் அரங்காற்றுகை நிகழ்வு 12.10.2024 அன்று எசன் நுண்கலைக் கல்லூரியின் பொறுப்பாளர் திரு நயினை விஜயன் அவர்கள் தலைமையில் மிக சிறப்பாக நடந்தேறியது.

எசன் நுண்கலைக் கல்லூரியின் இசை ஆசிரியை இசைக்கலைமணி சங்கீத கலா விதுஷி. ஞானாம்பாள். விஜயகுமார் அவர்களின் மாணவிகளாவர்.

கலைவாணி, ரவீனா சகோதரிகள் 8 ஆண்டுகளுக்கும் மேலாக வாய்ப்பாட்டு இசையை ஞானாம்பாள் ஆசிரியையிடமும் வயலின் வீணை போன்ற பாடங்களை இசைக்கலைமணி.செல்வி. சாயினி. நயினை விஜயன் அவர்களிடமும் கற்றுத் தேர்ந்துள்ளார்கள். யேர்மன் அரசால் அங்கீகரிக்கப்பட்ட TCFA பரீட்சையில் 8 ம் தரத்தில் (Dip.in. Music) திறமைச்சித்தி பெற்றுள்ளார்கள். இவர்களின் அரங்காற்றுகை வைபவத்தை சரியாக 3.30 மணிக்கு பிரதம விருந்தினர்கள் விளக்கேற்றி ஆரம்பித்து வைத்தனர். ஆசிரியை திருமதி.ஞானாம்பாள் இறை வணக்கம் செய்து மாணவர்களை ஆசீர்வதித்தார்.

முதலாவதாக காணடா ராகத்தில் அடதாள வர்ணத்தை இருவரும் மிக சிறப்பாக முதலாம் இரண்டாம் காலங்களில் ஸ்வர தாள சுத்தமாக பாடி சபையோரின் பாராட்டைப் பெற்றனர். தொடர்ந்து திலங் ராகத்தில் ஶ்ரீ கணேசா சரணம் எனும் முத்துசாமி தீட்சிதரின் கீர்தனையை அழகாக பாடியிருந்தனர். தியாகராஜரின் ஶ்ரீ ராகத்திலமைந்த பஞ்சரத்தின கீர்தனையை ராக தாள சுருதி சுத்தமாக பாடியபோது இசைக் கச்சேரி களை கட்டியது .சபையோரின் கரகோஷத்தைப்பெற்றனர்.





எசன் தமிழாலய ஆசிரியை திருமதி.பாக்கியலட்சுமி. நவரத்னம் அவர்களின் வாழ்த்துரையைத் தொடர்ந்து பந்துவராளி ராகத்தில் நாரதமுனி என்ற கீர்த்தனையை சங்கதிகள் சுத்தமாக பாடியிருந்தனர்.

அடுத்து அரங்கேற்றத்தின் உயிர்நாடியாக மனோதர்மத்தை வெளிப்படுத்தும் வகையில் ராகம் தாளம் பல்லவி நிரவல் ஸ்வரம் என்பவற்றையும் முறைப்படி கல்யாணி ராகத்தில் பாடினார்கள். ராக ஆலாபனையை இருவருமே நேர்தியாக விஸ்தாரம் பண்ணினார்கள். இதிலும் கலைவாணி மத்தியஸ்தாயிகாந்தா ரத்திலிருந்து தாரஸ்தாயி காந்தாரம் வரை மிக லாவகமாக பாடினார். ராகவி மத்தியஸ்தாயி மந்திரஸ்தாயியில் கல்யாணி ராகத்தின் ரஞ்சகப்பிரயோகங்களை பாடி அசத்தினார். அரை இடம் தள்ளி அமைந்த பல்லவியை மூன்று காலங்களிலும் பாடி கற்பனாஸ் வரத்தையும் கச்சிதமாக பாடி முடித்தனர்.

இந்த இடத்தில்பக்க வாத்திய கலைஞர்களின் ஒத்துழைப்பு பாராட்டப்பட வேண்டிய தாகும். வயலின் கலைஞர் சாயினி. நயினைவிஜயன் கல்யாணிராக ஸ்வர ஸ்தானங்களை வருடிக்கொடுத்து மிக அற்புதமாக நேர்தியாக வாசித்து சபையிலிருந்த கலைஞர்கள் ரசிகர்களின் பாராட்டை பெற்றார். மிருதங்க லய கான வாருதி அனுசாந் நயினைவிஜயன் பாடகிகளுக்கு அனுசரணையாக வாசித்ததுடன் தாளவாத்திய கச்சேரி ஒன்றையும் நிகழ்த்தினார். அவருக்கு சளைத்தவரல்ல என நிருபிக்க லய கான வாருதி நகுஷாந். நயினை விஜயன் கடம் வாத்தியத்தில் ஜதிகளை பேசவைத்தார். அவர்களுக்கு ஈடு கொடுத்து லய காண வாருதி ராகுலன். ராமநாதனும் சேர்ந்து மக்களை இசையரங்கில் கட்டிப்போட்டனர்.

இடைவேளையின் போது ரசிகர்களை உபசரித்து பசிபோக்கினர் திரு.திருமதிரவீந் திரசிவம். தொடர்ந்து நாட்டிய கலாவிதுஷி.சாவித்திரி.சரவணன் அவர்களும் ஜேர்மன் தமிழ் கல்விச்சேவை தலைவர். சிறீஜீவகன் அவர்களும் நடன ஆசிரியை திருமதி.சாந்தினி.துரையரங்கன் அவர்களும் அரங்கேற்ற நாயகிகளை வாழ்த்தியதுடன் பக்கவாத்திய கலைஞர்களின் சிறப்புகளையும் எடுத்தியம்பி பாராட்டினார்கள்.

இடைவேளையைத் தொடர்ந்து அரங்கேற்ற நாயகிகள் தாம் கற்ற இசை வாத்தியங்களை கலைவாணி வயலின் வாத்தியத்தையும் ராகவி வீணை வாத்தியத்தையும் மீட்டினர். பௌளி ராகத்தில் பிரம்மம் ஒன்றுதான் கீர்தனையை இணைந்து

வாசித்து சபையோரை தாளம் போட்டு தலையாட்டி ரசிக்க வைத்தனர். அத்துடன் தாயகப்பாடல் "அழகான அந்தப் பனைமரம் " பாடலை சிறப்பாக வாசித்து அசத்திவிட்டனர். ராகவி "குறை ஒன்றுமில்லை" கீர்த்தனையை இராகமாளிகையாக மிக இனிமையாக உருகிப் பாடி ஏகோபித்த பாராட்டை கரகோஷமாகப் பெற்றார். தொடர்ந்து கலைவாணியும் ராகமாளிகையாக "சின்னஞ்சிறுகிளியே" பாரதிபாடலை மிக ராக பாவமாக பாடி ரசிகர்களின் மனதிலும் இடம்பிடித்தார் .தொடர்ந்த கரகோஷம் மக்களின் பாராட்டை பறைசாற்றியது. ஒரு அரங்கேற்றத்துக்கு உரிய உருப்படிகளான அஷ்டபதி தில்லானா போன்ற உருப்படிகளையும் பாடி தமது பாண்டித்தியத்தை பறைசாற்றினர் எனலாம்.

பிரதம விருந்தினராக வருகை தந்திருந்த சங்கீத கலா விதுஷி திருமதி கலைவாணி .ஏகானந்தராஜா அவர்கள் பேசும்போது அரங்கேற்றநாயகிகள் மேல்நாட்டுச் சூழலில் பிறந்து வளர்ந்திருந்தாலும் தாயக கலை கலாச்சாரங்களை பின்பற்றி இசைக்கலையை இவ்வளவுதூரம் கற்று இன்று அரங்கேற்றம் கண்டமை போற்றப்படவேண்டியதொன்றாகும் என்றார். ஆத்துடன் அவர்களின் இசைத்திறமையை பாராட்டியதுடன் குறை நிறைகளை சுட்டிக்காட்டி அவர்கள் மென்மேலும் கேள்வி ஞானத்தினாலும் அனுபவத்தினாலும் முன்னேற்றம் காணவேண்டும் என வாழ்தியதுடன் ஆசிரியைக்கு கௌரவமளித்து பாராட்டினார். பக்கவாத்திய கலைஞர்களின் திறமைகளை எடுத்துக் கூறி பாராட்டி வாழ்தினார். நிறைவாக திருப்புகளுடன் அரங்கேற்ற விழா 8.30 மணிக்கு நிறைவுபெற்றது.

## All-Time Biggest Donors to Charity




உலகில் பல நூற்றுக்கணக்கான கோடீஸ்வரர்கள் வாழ்ந்துகெண்டிருக்கிறார்கள். இவர்களில் வருடாவருடம் அதிகூடிய பணத்தை (102 பில்லியன் டொலர் ) அறக்கட்டளைக்கு வழங்கி ரத்தன் டாட்டா முதலிடத்தில் இருக்கின்றார்.டாட்டா தனது வருமானத்தில் சுமார் 60-65% தொண்டுக்கு நன்கொடையாக அளித்து, உலகின் மிகப்பெரிய பரோபகாரர்களில் ஒருவராக இருக்கிறார்.

# யேர்மனிய தமிழ்பெண் எழுத்தாளர்கள் விபரம்..

- தொகுப்பு சாந்தினி துரையரங்கன் -

## யேர்மனி தமிழ்ப் பெண் எழுத்தாளர்கள்... தொடர்ச்சி - 34



**பெயர் - திருமதி சிபோ சிவகுமாரன்**

பிறந்த இடம் - கொக்குவில்.
தற்போதய வதிவிடம் - Dortmund
தந்தை,தாய் - திரு திருமதி பரமானந்தம் தங்கராணி
கல்வி - Hunsrück Grundschule Berlin (1-4 வகுப்பு)
- Goethe Gymnasium Berlin (5-10 வகுப்பு)
- Leibniz Gymnasium Duisburg (11-13 வகுப்பு)
-Abitur in German Literatur.
தொழில் துறை படிப்பு - 1. SAE Institute Frankfurt இல்
Diplom in Digital Film Animation.
- 2. Comcave College Dortmund இல்
Media Designing in Digital & Print.
- 3. Frankfurt Airport ,y; Profile Agent ஆக
வேலை பார்க்கும் போது (1999 - 2006 வரை) Diploma in Passenger Profiling முடித்துள்ளார்.
Duisburg நகர தமிழ் பாடசாலையில் தமிழ் படித்து பின்னர் Frankfurt தமிழாலயத்தில் தமிழ் படித்து Lodon-Cambridge University உயர்கல்வி தேர்வில் A* சித்தி பெற்றார்.

தனது மூன்று வயதிலேயே பெற்றோருடன் யேர்மனி நாட்டுக்கு புலம்பெயர்ந்து வந்தவராவார். தனது கல்வியை கரை சேர்ந்த நாட்டிலேயே பயிலத் தொடங்கி யேர்மனிய இலக்கியத்தில் பட்டப்படிப்பினை முடித்துக்

கொண்டு இவருக்குள் துளிர் விட்ட சினிமாத்துறையின் ஆர்வத்தினால் Digital Film Animation பட்டப் படிப்பினை தொடர்ந்தார். அதே சமயத்தில் எமது தாய் மொழியின் பற்றுதலினால் தமிழ்க் கல்வியையும் தொடங்கியவர் Cambridge University Tamil Assignment உடன் Diplom In mediadesign துறையிலும் கற்றுத் தேர்வானார்.

இவரே பல வசனங்கள், கதைகளை எழுதி அவற்றை நாடகம், குறும்படம், முழுநீள திரைப்படம், தொலைக்காட்சி நிகழ்ச்சிகள் எனப்பலவித வடிவங்களில் வெளியிட்டுள்ளார்.ஆரம்பத்தில் 25 இக்கு மேற்பட்ட மேடை நாடகங்களை எழுதி இயக்கி அரங்கேற்றியவரின் தாகம் தணியவில்லை.

**குறும்படங்கள்**

- இனிமேல்... - அலை
- தடுமாற்றம் - மாசு படுத்துதல்
- மனமாற்றம் - மாயை என ஆறு குறும்படங்களையும் இயக்கியுள்ளார்.

**தொலைக்காட்சி நிகழ்ச்சிகள்**

- அவளுக்கு நிகர் அவளே
- திரைப் பிம்பங்கள்
- இப்படிக்கு நாங்கள்
- மின்மினி பூக்கள்

என 45க்கும் மேற்பட்ட தொலைக்காட்சி நிகழ்ச்சிகளையும் தயாரித்தளித்துள்ளார்.

நம்மவர் வலிகளையும் கதைகளையும் நாமே எடுத்துரைக்க வேண்டும் என்ற எண்ணக் கோட்பாட்டில் நூற்றுக்கும் மேற்பட்ட மூன்று தலைமுறைக் கலைஞர்களை உள்வாங்கி நாளைய நாம் எனும் நெடும் தொடரை இயக்கி 65 வாரங்களாக ஒளிபரப்பாக்கி பல்லாயிரம் ரசிகர்களை தனதாக்கியவர்.

அத்துடன் நாளைய மாற்றம் எனும் முழு நீள திரைப்படத்தினை உருவாக்கி தற்போது பல நாடுகளில் திரையிடப்பட்டுக்கொண்டுவருகின்றது. இப்படத்தின் ஒளிப்பதிவினை இவரது துணைவர் சிவஞானம் சிவகுமாரன் மேற்கொள்ள ஒரு படத்தின் முழுமைக்கான அனைத்துப் பணிகளையும் இவரே பொறுப்பேற்றவராக கதை திரைக் கதை படத்தொகுப்பு இசைத் தொகுப்பு என நிறைவேற்றி தனது தனித்துவத்தை நிரூபித்துள்ளார். இத்திரைப்படத்தில் தாயகம் யேர்மனி மற்றும் பிரான்ஸ் என பலதரப்பட்ட தமிழ்க் கலைஞர்கள் பங்கு பற்றி சிறப்பித்துள்ளார்கள் என்பது கண்கூடு.

**திரைப்படங்கள்**

- சலசலப்பு (2003)
- நாளைய மாற்றம் (2024)

**விருதுகளும் கௌரவிப்புகளும்**

1.யேர்மனியில் ஈழத்து குறுந்திரை வாணி,

2.சென்னையில் நந்தவனம் Foundation சாதனைப் பெண்,

3.சென்னையில் இயங்கும் உலகத் தமிழ் பேரவையினரால் கலைத் தாரகை,

4.யேர்மனியில் இயங்கும் வான் அவை அமைப்பினராலும்கனடாவில் இயங்கும் விழித்தெழு பெண்ணே எனும் அமைப்பினராலும் சாதனைப் பெண்,

5.France Ithazl Tntr Média சுயம்பு, Holland Tamilan நிறுவத்தினர் தமிழ் ஆளுமை, போன்ற விருதுகள் வழங்கி கௌரவிக்கப்பட்டார்.

6. கனடா வென்மேரி அறக்கட்டளை நிறுவனத்தினர் 2024 ஆண்டுக்கான சிறப்பு விருதுக்காக அழைத்து கௌரவித்தனர்.

இவர் மேலும் பல படைப்புகளை வெளியிட்டு ஈழத்து கலைத்துறையில் தனக்கென ஒரு இடத்தினை தக்க வைத்து சிறப்புகள் பெற எம் வாழ்த்துகள். வளமுடன் வாழ்க வாழ்க.

.........................................................................................................................

## " நாளைய மாற்றம்" திரைப்பட விமர்சனம்

எம்மவர் திரைப்படம் என்று நினைக்காது சென்று பாருங்கள் வியந்து போவீர்கள். தியேட்டரிலிருந்து வெளியே வரும்போது மனதில் மகிழ்ச்சி மட்டும்தான் சிம்மாசனமிட்டு உட்காரந்திருக்கும். நாளைய மாற்றம் திரைப்படத்தை நான் தியேட்டரில் பார்த்தேன். சிறப்பான கதை அம்சமுள்ள படம். ஜேர்மனியிலும் பாரீசிலும் இலங்கையிலும் படப்பிடிப்பைச் செய்துள்ளார்கள். மிக சிறப்பாக கதையை ஒட்டிய சூழலில் எமது உணர்வுடன் கலந்ததாக இருந்தது. தாயகத்திலிருந்து வெளிநாடுபுறப்பட்ட ஒரு பெண்ணின் அவலநிலை, ஊர்ச் சனங்களுக்கு பயந்து தன் பிள்ளையின் வாழ்க்கையை சீரழித்த தாய், தஞ்சம் என்று ஒதுங்கிய இடத்தில் ”வேலியே பயிரைமேயக் காத்திருக்கும் அவல நிலை” நிகழ்காலத்தில் தாயகத்தில் நடைபெறும் எம்மவரின் தவறான செயற்பாடுகள், மூட நம்பிக்கைகள் சமூக வேறுபாடு என யதார்தங்களை வெளிக்கொணர்ந்த அருமையான படம்.

பாடல்கள், இசையமைப்பு குரலிசை பாடல் வரிகள் சிறப்பு. மொத்தத்தில் இரண்டு பாடல்களுமே தரமானவை தாயக நிலமையும் 2009 கடைசிப் போர்ச்சூழலும் அதனால் தந்தையின் இழப்பு தாய்மாமன் பிள்ளையின் இழப்பு என்பன கண்களில் நீரை வரவழைத்தது. சிறிய, பெரிய பாத்திரங்கள்வரை நடிப்பு இயல்பாகவும் உணர்வுபூர்வமாகவும் அமைந்திருந்தன. .இயக்குனர் திருமதி சிபோ.சிவகுமார் முதல் படத்திலேயே பெருவெற்றியை அடைந்துள்ளார். மனைவிக்கு உறுதுணையாக இருந்து கைகொடுத்த திரு. சிவகுமாரை பாராட்டுகிறோம். அத்துடன் நடிகர்கள்,இசையமைப்பாளர்கள், பாடகர்கள், ஒலிப்பதிவில், படப்பிடிப்பில் உதவிய அனைவரையும் மனதார பாராட்டி மகிழ்கிறோம். இந்தப்படம் தாயகத்தில் காட்டப்பட்டு அங்கு உள்ள மக்களில் பத்து வீத மக்களாவது நாளைய மாற்றத்தை ஏற்படுத்துவார்களேயானால் அதுவே சிபோ.சிவகுமாரன் அவர்களுக்கு மாபெரும்வெற்றியாக அமையும்... **- கலைவாணி ஏகானந்தராசா-**



# ஆடல்கலாலயத்தின் 35 ஆவது ஆண்டு விழாவில் உலக சாதனை நிகழ்த்தப்பட்டது.

## 12 மணித்தியாலங்கள் தொடர்ச்சியாக இடம்பெற்ற நடனவிழா... 6 வயதிலிருந்து 60 வயதுவரை நடனம்புரிந்த நடனமணிகள்...

யேர்மனி - கிறீபீல் நகரத்திலுள்ள ஆடல்கலாலயத்தின் 35 வது ஆண்டு விழா 14.09. 2024 சனிக்கிழமை அன்று ஜெர்மனி டியூஸ்பேக் நகரத்தில் மிகச் சிறப்பாக நடைபெற்றது. நேரடி பக்கவாத்தியக் கலைஞர்களின் பின்னணி இசையுடன் , ஆசிரியர், ஆசிரியமாணவர்களின் நட்டுவாங்கத்துடன் 30 நடன நிகழ்வுகள் நடைபெற்றமை இந்நிகழ்வின் தனித்துவமான அம்சமாகும்.

ஆடற்கலைமணி திருமதி றெஜீனி சத்தியகுமார் அவர்கள் பதித்த விதை இப்போ கிளைகள் பரப்பி பெரு நிறுவனமாக வளர்ந்து வருகின்றமை கண்கூடு. புலம்பெயர் தேசத்தில் பிறந்து வளர்ந்த இளையவர்கள் முன்னின்று நடாத்திய ஒரு பெரு விழா. பற்பல துறைசார்ந்தவர்கள் அவையை அலங்கரித்திருந்தனர். ஒவ்வொரு நிகழ்ச்சிகளும் அழகாக ஒழுங்கமைக்கப்பட்டிருந்தன.

நடனமணிகளின் பெற்றோர்கள் புடைசூழ நடன ஆசிரியர் திரு திருமதி சத்தியகுமார் தம்பதிகள், பிரதமவிருந்தினர் செல்வி சிம்ரன் சிவகுமார் (இந்தியா), சிறப்பு விருந்தினர் நடன ஆசிரியர் திருமதி சாந்தினி துரையரங்கன் (யேர்மனி) சகிதம் அரங்கிற்கு அழைத்து வரப்பட்டனர். மங்கள விளக்கை மண் சஞ்சிகையின் பிரதம ஆசிரியர் திரு வை.சிவராசா சமூக ஆர்வலர் திரு எஸ் கந்தசாமி மற்றும் பிரமுகர்கள் ஏற்றி, இறை வழிபாட்டுடன் நிகழ்ச்சிகள் ஆரம்பமாகின.

புஷ்பாஞ்சலி ,விநாயகர் ஸ்துதி, அலாரிப்புடன் தொடங்கிய நடன நிகழ்ச்சி நாட்டிய மார்க்கத்தின் அமைப்பில் தொடர்ந்து நடைபெற்றன. இடையே சிறுவர்களுடைய நடனங்களும் இடம் பெற்றன.




சப்தம், கீர்த்தனைகள், திருப்புகழ், கௌத்துவம் , வர்ணம், கோலாட்டம், தாயகப்பாடல், குறத்தி நடனம், நாச்சியார் திருமொழி, தில்லானா எனத் தொடர்ந்திருந்தன. நடன ஆசிரியர்களான செல்வன் நிமலன், திருமதி தீபனா குரலில் லய கவிதை நிகழ்ச்சி ஸ்வரம், ஜதி கலந்து இராகமாளிகை தாளமாளிகையாக அமைந்திருந்தமை வித்தியாசமான ஒரு நிகழ்வாக இருந்தது.

ஸ்வரக்குச்சா என்ற நிகழ்வில் ஆசிரிய மாணவர்களும் பிரதம நடன ஆசிரியர் றெஜினி சத்யகுமார் அவர்களும் இணைந்து அழகாக ஆடிய நிகழ்ச்சியை மிருதங்க கலைஞன் நட்டுவாங்கம் செய்தமையும் தனித்துவ அம்சமாகும். ஒரு இளம் மிருதங்கக் கலைஞன் நட்டுவாங்க கலைஞராக மேடையை அலங்கரித்தமை யேர்மனியில் நான் அறிந்த முதல் மேடை நிகழ்ச்சியாகும். கடல் பற்றி அமைந்த நிகழ்ச்சி, வர்ணம் போன்றன இந்நிகழ்வின் தனித்தன்மை எடுத்துக்காட்டின.

பல வழக்கமான வர்ணங்கள் நாயகி நாயகனைப்பற்றி சகியிடம் கூறுவதாக அமைந்திருக்கும். அன்றைய வர்ணத்தில் ”என்னை வரச் சொல்லி ஏங்க வைத்து அவள் எங்கே சென்றாளடா.....” என்று நாயகியை விழித்து பாடுவதாக அமைந்திருந்தமை வித்தியாசமாக அமைந்திருந்தது. ,தன் நட்டுவாங்கத்தினையும் ஜதிச் சொற்கட்டுகளுடன் மிக லாவகமாக லகிபன் செய்திருந்தார். நிமலன், தீபனா உட்பட அரங்கேற்றம்கண்ட பதினொரு ஆற்றுகைக்கலைஞர்கள் அழகாக அபிநயித்து ஆடியிருந்தமை மிக அழகாக இருந்தது.

பக்கவாத்திய கலைஞர்களின் பங்களிப்பு இந்நிகழ்வின் இன்னுமொரு சிறப்பம்சமாகும். இளம் கலைஞர்களான லகிபன், அனுஷாந் தாளவாத்தியங்களையும், பிரசாந்த் வயலினையும், நிருஜன் , தாரணி குரல் இசையையும், வர்ணன் புல்லாங்குழல் இசையையும் லாவகமாக, சிறப்பாக வழங்கியிருந்தார்கள்.சில நடன நிகழ்சிகளை ஹரிஷ் ரஞ்சித் அவர்களின் சுரத்தட்டு இசையும் இணைந்து மெருகேற்றியிருந்தன. பக்கவாத்தியங்கள் , நட்டுவாங்கத்தின் ஒருங்கிணைந்த தன்மை ஆற்றுகை செய்த கலைஞர்களுக்கு உந்துசக்தியைக் கொடுத்து மெருகேற்றின என்றால் அது மிகையாகாது. அது அவையோரையும் பரவசப்படுத்தியது எனலாம். ஆடற்கலாலயத்தில் றெஜினி ஆசிரியரிடம் பயின்று இப்பொழுது ஆசிரியர்களாக கடமையாற்றுகின்ற தீபனா





அபிரா, ரோஷிகா, ராதிகா, தர்ஷிகா,சுவேதா, ராஸ்மிகா ஆகியோர் இணைந்து நிகழ்வுகளை தயாரித்து, நட்டுவாங்கம் செய்தமை பாராட்டுதற்குரிய விடயமாகும். இது இக்கலாலயத்தின் வளர்ச்சியின் அடுத்த கட்ட படிநிலை எனக் கூறலாம். பிரதவிருந்தினர் சிம்ரன் சிவகுமார் அவர்கள் தன் உரையில் நிகழ்ச்சிகள் சிறப்பாக உள்ளன. நட்டுவாங்கம் , பக்கவாத்தியக்காரர்களின் பங்களிப்பு அருமையாக உள்ளன என்று பாராட்டினார். புலம்பெயர் தேசத்தில் பரத நாட்டியம் அழகா வளர்கின்றது என்றும் தன்னை இங்கு அழைத்தமைக்கு நன்றியும் கூறினார். தொடர்ந்து அவர் ஒரு பதத்தினை அழகான பாவத்துடன் ஆற்றுகை நிகழ்த்திக் காட்டினார்.

சிறப்புவிருந்தினர் சாந்தினி துரையரங்கன் நடந்த நிகழ்ச்சிகைளை தொகுத்து கூறியதுடன் அவற்றில் உள்ள சிறப்புத்தன்மைகளையும் எடுத்துக் கூறினார்.ஆடற்கலாலயத்தின் 35 வது ஆண்டு விழா கிட்டத்தட்ட 12 மணித்தியாலங்களாக சிறப்பாக நடைபெற்றது. ஒரு நடன நிறுவனத்தின் ஆண்டுவிழா தொடர்ச்சியாக நீண்டநேரம் இடம்பெற்றமை என்பது தனித்துவமே. அதுவும் 6 தொடக்கம் 60 வயதுவரையிலான நடனத்தாரகைகள் நடனம் புரிந்தது ஒரு உலக சாதனை என்றே கூறலாம்கலைஞர்களின் ஒப்பனை, ஆடைகளின் வடிவமைப்புகள் நேர்த்தியாக இருந்தன. அரங்க ஒலி ஒளி அமைப்புகள் நன்று. ஆசிரியர்கள், பெற்றோர்கள்,பிள்ளைகள் எல்லோரினதும் உற்சாகமாக பங்களிப்பு போற்றுதற்குரியதாகும். பார்ப்பதற்கு கண்ணுக்கும் செவிக்கும் விருந்தாக நிகழ்வுகள் அமைந்திருந்தன.

உண்மையில் எல்லோருடைய பங்களிப்பினாலும் சிறந்த அர்பணிப்பான ஆசிரியரின் குடும்ப ஒருங்கிணைப்பினாலும் விழா மிகச் சிறப்பாக நடைபெற்றது. இளம் பரதநாட்டிய ஆசிரியர் நிமலன் சத்தியகுமார் அவர்களின் நன்றியுரையுடன் இனிதே விழா நிறைவு பெற்றது. இந் நிகழ்வை தமிழில் ரமேஷ் ஜெயக்குமார் அவர்களும், யேர்மன் மொழியில் கினால் யால்சின் ( ர்யைெட துயடளாைை) அவர்களும் அழகாக தொகுத்து வழங்கினார்கள். திரு திருமதி சத்தியகுமார் அவர்களுக்கும் அவருடன் இணைந்த நிமலன், தீபனா மற்றைய ஆசிரியர்களுக்கும், தம் திறமைகளை வெளிப்படுத்திய அத்தனை நடக்கலைஞர்களுக்கும், பக்கவாத்தியக்கலைஞர்களுக்கும் எம் வாழ்த்துகள். வாழ்க கலை.!..வளர்க உங்கள் கலாலயம்!..

**தொகுப்பு:- திருமதி சாந்தினி துரையரங்கன். நடன ஆசிரியர்**

## தாயகச் செய்திகள் சில...

01.10.24- வடக்கு-கிழக்கு மிதிவெடி அகற்றல் நடவடிக்கைக்கு யப்பான் 30 கோடி ரூபாவை வழங்கியுள்ளது. கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களில் 31.43.871 ச.பரப்பில் 77.908 அபாய கண்ணிவெடிகள் அகற்றப்பட்டுள்ளன.

02.10.24- பாராளுமன்றம் 24.9.24ல் கலைக்கப்பட்டதால் எம் பிக்கள் 85பேர் ஓய்வூதியம் பெறமுடியாது என அரசு அறிவித்துள்ளது.

03.10.24- உலகவங்கி, சர்வதேச நாணய நிதியம் போன்ற அமைப்புகள் உள்ளிட்ட பல நாடுகள் புதிய அரசுக்கு நிதி வழங்கவுள்ளன.

04.10.24- புதிய அரச தலைவர் அனுரா புதிய 3 அமைச்சர்கள் 17 புதிய அமைச்சுச் செயலாளர்கள் நியமனம்.

05.10.24- புதிய அரசாங்கம் 9 மாகாணங்களுக்கும் புதிய ஆளுநர்கள் தெரிவு.

06.10.24- அரச வாகனங்களை முறைகேடாகப் பாவித்த மந்திரிகள் மற்றும் உயர் அதிகாரிகளின் பலகோடி பெறுமதியான நூற்றுக்கணக்கான வாகனங்களை தற்போது புதிய அரசு திரும்பப்பெற்றுள்ளது.

07.10.24- தியாக திபம் திலீபனின் நினைவு எழுச்சி ஒரு வாரம் தமிழர் பிரதேசங்களில் நினைவு கூரப்பட்டது.

08.10.202- 2024 செப்டெம்பர் மாதம் மட்டும் 1 லட்சம் சுற்றுலாப் பயணிகள் வருகை. 1 - 9 மாதம்வரை 15 லட்சம்பேர் வருகை தந்துள்ளனர்.

09.10.24- கடந்த 8 வருடங்களில் 43.68.340 கடவுச்சீட்டுகள் விநியோகிக்கப்பட்டதாக அரச புள்ளிவிபரம் தெரிவித்தது.

10.10.24- யாழ் பல்கலைக் கழகம் 50வது பொன்விழாவை 6.10.24ல் கொண்டாடியது. 1974ம் ஆண்டு பிரதமர் ஸ்ரீமாவோ பண்டாரநாயக் காவால் திறந்து வைக்கப்பட்டது

12.10.24- நாட்டில் 15 - 29 வயது இளையோர் 2.63.274 பேர் தொழிலற்றவர்கள் என அரச புள்ளிவிபரம் தெரிவித்துள்ளது.

15.10.24- பல்வேறு காரணங்களால் இந்த வருடம் செப்டெம்பர் மாதம்வரை 277 யானைகள் உயிரிழந்துள்ளன. 2023ல் 488 யானைகள் உயிரிழந்துள்ளன.

17.10.24- இலங்கை இராணுவத்தின் 75 வது ஆண்டு நிறைவையொட்டி 1.412 இராணுவத்தினருக்குப் பதவி உயர்வு வழங்கப்பட்டுள்ளது.

18.10.24-நாட்டில் சீரற்ற மழை வெள்ளக் காலநிலையால் 14 மாவட்டங்களில் 35.000 குடும்பங்களைச் சேர்ந்த 2 லட்சம்பேர் வரை பாதிப்பு.

20.10.24- நாட்டில் பல்வேறு காரணங்களால் தினமும் சராசரியாக 8 பேர் உயிரிழப்பு. அரச வைத்தியர் சங்கம் தெரிவித்துள்ளது.

24.10.24- இணைய மோசடியில் ஈடுபட்டுவந்த 120 சீனர்கள் உட்பட 218 வெளிநாட்டவர்கள் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

28.10.24- நாட்டில் மக்கள் தொகையில் 1 லட்சம் பெருக்கு 1.990 பேர் வாய்ப்புற்று நோயாளர்கள். மார்பகப் புற்று நோயும் அதிகரிப்பு. அத்துடன் கடந்த வருடத்தில் 33.000 பேர் புற்று நோயினால் பாதிப்பு 19.000பேர் பலி.

31.10.24- நாட்டின் புதிய அரசு பதவி ஏற்பின் பின் பெரும் ஊழல்கள் மோடிகள் கொலைக் குற்றச் செயல்கள் வெளிவந்திருப்பதை மக்கள் வரவேற்றுள்ளனர்.

# உலகச் செய்திகள் சில...

01.10.24- கடந்த 6 மாதங்களில் ஆப்கானிஸ்தானில் பசி பட்டினியால் 700 குழந்தைகள் இறப்பு. 3.2 மில்லியன் குழந்தைகள் ஊட்டச்சத்து குறைபாடுகள் காணப்படுகின்றது

05.10.24- வியட்நாமில் மழை வெள்ளம் பாதிப்பு 300 பேர்வரை பலி.

07.10.24- இஸ்ரேலின் கடந்த ஒரு வருட தாக்குதலால் பலஸ்தீனத்தில் 43.000 பேரும் லெபனானில் 4.000 பேரும் பலி 11.000 மாணவர்களும் பலியாகியுள்ளனர். 10லட்சம் பேர் இந்த இரு நாடுகளையும் விட்டு அகதிகளாக வெளியேற்றம்.

09.10.24- மியன்மாரில் புயல்தாக்கம் 250 பேர் இறப்பு.

11.10.24- கிழக்கு ஐரோப்பிய நாடுகளான ஆஸ்திரியா, போலந்து, செக்குடியரசு, ருமேனியா நாடுகளில் மழைவெள்ளம் 20 பேர் பலி லட்சக்கணக் கானோர் பாதிப்பு. ஆயிரக்கணக்கான குடியிருப்புகள் இழப்பு.

14.10.24- பாக்கிஸ்தானில் பொருளாதார நெருக்கடி. இவ்வருடம் மட்டும் 14 மில்லியன் மக்கள் நாட்டைவிட்டு வெளியேறியுள்ளனர்.

16.10.24- ஈரானில் இடம்பெற்ற சுரங்க வெடி விபத்தில்51 பேர் பலி.

20.10.24- இந்தியாவில் கடந்த 7 ஆண்டுகளில் பெண் தொழிலாளர்களின் எண்ணிக்கை இரட்டிப்பாக அதிகரித்துள்ளதாக அரசு அறிவித்துள்ளது.

22.10.24- இந்தியாவில் ஆண்டுதோறும் 1.7 கோடிபேர் இதய நோய்களினால் உயிரிழப்பு மத்திய அரசு தெரிவித்துள்ளது.

24.10.24- சென்னையில் இடம்பெற்ற விமான கண்காட்சி நிகழ்வில் சனநெரிச்சலில் 5 பேர் பலி 300 பேர்வரை காயம்.

25.10.24- அமெரிக்காவில் ஹெலன் சூறாவளி 150 பேர் பலி 20 லட்சம் பேர் பாதிப்பு .1000 வீடுகள்அழிவு.

26.10.24- உலகளாவிய ரீதியில் ஒவ்வொருநாளும் சுமார் 73 கோடி மக்கள் பட்டினியை எதிர்கொண்டு வாழ்கிறார்கள். 280 கோடி மக்களுக்குச் சத்தான உணவு கிடைப்பதில்லை எனவும் உலக உணவுத்திட்ட அமைப்பு தெரிவித்துள்ளது.

28.10.24- உலகில் 370 மில்லின் பெண்களில் 18 வயதிற்குக் கீழ் 8 சிறுமிகளில் ஒருவர் பாலியல் வன்கொடுமைக்கு உள்ளாகுகின்றனர் என ஐக்கியநாடுகள் கல்வி, சிறுவர், அமைப்பு சுட்டிக்காட்டியுள்ளது.

29.10.24- உயிர் காக்கும் மருந்துகளுக்குத் தட்டுப்பாடு பாக்கிஸ்தானில் ஒரு மாதத்தில் 100 குழந்தைகள் உயிரிழப்பு.

30.10.24- நைஜீரியாவில் எண்ணெய் லொறி வெடி விபத்தில் 170 பேர் உயிரிழப்பு. இச்சம்பவம் ஆபிரிக்காக் கண்டத்தில் அதிகமாக இடம்பெறுகின்றன.

31.10.24- உலகிலுள்ள 630 கோடி மக்களில் சுமார் 110 கோடி மக்கள் வறுமையின் பிடியில் உள்ளனர். இந்தியா முதலிடத்திலுள்ளது. உலக உணவுத்திட்ட அறிக்கை சுட்டிக்காட்டியுள்ளது.



## சிறீலங்காவில் புதிய ஜனாதிபதியாக அனுரகுமார!...

எதிர்பாராத வெற்றி வாகைசூடிய (ஜே.வி.பி) தேசிய மக்கள் சக்தி கட்சி மாற்றத்தை நோக்கிய பயணம் வெற்றியளித்துள்ளது...

மிக நேர்த்தியான ஒழுங்கமைப்பு, திட்டமிடல் போன்றவை அநுரவின் வெற்றிக்கு வழிவகுத்திருக்கின்றது. இதற்கு முன்னரான காலங்களில் பரம்பரையாக நாங்கள் இந்த கட்சிக்கு ஆதரவு எனவே இந்த முறையும் அதே கட்சிக்குத் தான் வாக்களிப்போம் என்ற மரபு மாற்றமடைந்திருந்ததை கண்கூடாக காண முடிந்துள்ளது இந்த தேர்தலில். குறிப்பாக மாற்றத்தை நோக்கிய அநுரவின் பயணம் என்ற கொள்கை நிறைவேறியுள்ளது என்று கூட கூறலாம்.

இலங்கையின் வரலாற்றில் புதிய கட்சி ஒன்று அரசபீடம் ஏறியுள்ளது. சுதந்திரம் பெற்று 76 வருடங்களாக மாபெரும் கட்சிகளான ஐ.தே.கட்சியும் சிறிலங்கா சுதந்திரக் கட்சியும்தான் மாறி மாறி அரசியல் தலைவர்களாக இருந்திருக்கிறார்கள். ஆனால் 2024 தேர்தலில் இடதுசாரிக் கட்சி என்று சொல்லப்படும் தேசிய மக்கள் கட்சியின் (ஜே.வி.பி) தலைவர் அநுர குமார திஸாநாயக்க இலங்கையின் 9ஆவது நிறைவேற்று அதிகாரமுடைய புதிய ஜனாதிபதியாகப் பதவி ஏற்றுள்ளார்.

வரலாற்றில் தோல்விகளை சந்தித்து வந்த ஜேவிபி கட்சியின் சார்பில் போட்டியிட்டு மிகக் குறுகிய காலத்தில் மிகப்பெரிய அணியைத் திரட்டி அரியாசனம் ஏறியுள்ள அநுரவின் இந்த வெற்றி இலங்கையில் மற்றுமொரு அரசியல் புரட்சியாகவே பார்க்கப்படுகின்றது

ஐக்கிய மக்கள் சக்தியின் ஜனாதிபதி வேட்பாளர் சஜித் பிரேமதாசவை விட வாக்குகள் அதிகமாக பெற்று அநுர குமார திஸாநாயக வெற்றிபெற்றுள்ளார். அனுரா பெற்ற மொத்த வாக்குகளின் எண்ணிக்கை 5,634,915 ஆகும். 42.31 சதவீதமாக அவரது வாக்குகள் பதிவாகியுள்ளன. இதேவேளை, ஐக்கிய மக்கள் சக்தியின் சார்பில் போட்டியிட்ட சஜித் பிரேமதாச 4,363,035 வாக்குகளைப் பெற்றுள்ளார். 32.76 சதவீதமாக அவரது வாக்குகள் பதிவாகியுள்ளன.

யார்?.........இந்த அநுரகுமார திஸநாயக்க......

இலங்கையின் 9ஆவது நிறைவேற்று அதிகாரமுள்ள ஜனாதிபதியாக தெரிவாகியுள்ள முதியன்சேலாகே அநுர குமார திசாநாயக்க 1968 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 24 ஆம் திகதி இலங்கையின் வடமத்திய மாகாணத்தில் அனுராதபுரம் மாவட்டத்தில் உள்ள தம்புதேகம கிராமத்தில் பிறந்தார்.

அவரது தந்தை ஒரு தொழிலாளி அவரது தாய் ஒரு இல்லத்தரசி. திசாநாயக்க, தம்புத்தேகம காமினி மகா வித்தியாலயம் மற்றும் தம்புதேகம மத்திய கல்லூரியில் தனது கல்வியைப் பெற்று, கல்லூரியிலிருந்து பல்கலைக்கழக பிரவேசத்தைப் பெற்ற முதல் மாணவராக அவர் இருந்திருக்கின்றார்.

பள்ளிப் பருவத்திலிருந்தே மக்கள் விடுதலை முன்னணியின் செயற்பாடுகளால் ஈர்க்கப்பட்டு குறித்த அணியில் இணைந்திருந்த அநுர குமார, 1987இல் ஜே.வி.பி.யில் இணைந்து, மாணவர் அரசியலில் தீவிரமாக ஈடுபட்டார். பேராதனைப் பல்கலைக்கழகத்தில் நுழைந்த அவர் சில மாதங்களுக்குப் பின் அச்சுறுத்தல் காரணமாக வெளியேறினார். ஒரு வருடம் கழித்து 1992 இல் களனி பல்கலைக்கழகத்திற்கு மாற்றப்பட்டார். பின் 1995 இல் பௌதீக விஞ்ஞானத்தில் இளங்கலை பட்டம் பெற்றதோடு அதே ஆண்டில், அவர் சோசலிச மாணவர் சங்கத்தின் தேசிய அமைப்பாளராகவும் ஜேவிபியின் மத்திய செயற்குழுவிலும் நியமிக்கப்பட்டார்.

இந்நிலையில், ஜேவிபி கட்சியின் தலைவர் சோமவன்ச அமரசிங்கவின் கீழ் பிரதான அரசியலில் மீண்டும் பிரவேசித்த ஜே.வி.பி, 1994 இலங்கை நாடாளுமன்றத் தேர்தலில் சந்திரிகா குமாரதுங்கவை ஆதரித்தது, இருப்பினும் விரைவில் குமாரதுங்க நிர்வாகத்தை கடுமையாக விமர்சித்தது. 2000 ஆண்டு நாடாளுமன்றத்திற்கு தெரிவான அவர், ஜனாதிபதி ஆகும்வரை எம்.பியாக இருந்திருக்கிறார்.2004 இல் குருணாகல் மாவட்டத்தில் போட்டியிட்டு அதிக விருப்பு வாக்குகளுடன் நாடாளுமன்றத்துக்கு தெரிவானார்.

. 2008 இல் ஜே.வி.பியின் நாடாளுமன்ற குழு தலைவராக நியமிக்கப்பட்டார். 2010 இல் தேசிய பட்டியல் ஊடாக நாடாளுமன்றத்துக்கு தெரிவானார். 2014 ஜனவரி 2 ஆம் திகதி ஜே.வி.பியின் தலைவராக நியமிக்கப்பட்டார்.அவர் பதவியேற்ற பின்னர் மாகாணசபைத் தேர்தலில் ஜே.வி.பியின் வாக்கு வங்கி அதிகரித்தது. 2015இல் நடைபெற்ற பொதுத்தேர்தலில் கொழும்பு மாவட்டத்தில் போட்டியிட்டு வெற்றிபெற்றார். எதிர்க்கட்சி பிரதம கொறடாவாகவும் செயற்பட்டார்.

2019 ஆகஸ்ட் 18 ஆம் திகதி தேசிய மக்கள் சக்தியின் ஜனாதிபதி வேட்பாளராக பெயரிடப்பட்டார்.

ஜனாதிபதி தேர்தலும் ஜே.வி.பியும்

1982ஆம் ஆண்டு நடந்த முதலாவது ஜனாதிபதி தேர்தலில் ஜேவிபி சார்பில் அதன் நிறுவுனரான றோகண விஜேவீர போட்டியிட்டு, 273,428 வாக்குகளைப் பெற்றிருந்தார். அதன் பின்னர் 1999 ஜனாதிபதி தேர்தலில் ஜேவிபி சார்பில் நந்தன குணதிலக போட்டியிட்டு, 344,173 வாக்குகளைப் பெற்றிருந்தார்.

2010 இல் பொது வேட்பாளராக களமிறங்கிய பொன்சேகாவுக்கு ஆதரவு வழங்கியது. 2015 இல் நடைபெற்ற ஜனாதிபதி தேர்தலில் போட்டியிடவில்லை. எனினும், மகிந்த ராஜபக்சவுக்கு வாக்களிக்ககூடாது என பிரசாரம் முன்னெடுத்தது.

2019இல் ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிட்ட அநுரகுமார திசாநாயக்க மூன்று வீத வாக்குகளை மட்டும் சுமார் நான்கு லட்சத்து எண்பத்து ஐயாயிரம் அளவிலான வாக்குகளை மட்டும் பெற்று மூன்றாவது இடத்தைப் பெற்றிருந்தார். அதன் பின்னரான நாடாளுமன்றத் தேர்தலிலும் 3 எம்பிக்களை மட்டுமே அவர் தரப்பால் நாடாளுமன்றத்திற்கு கொண்டு வரமுடிந்தது.

அதனையடுத்து, இடம்பெற்ற பொருளாதார நெருக்கடி காலமும், அதனோடான போராட்டக் காலமும் இன்றைய அநுரவின் வெற்றிக்கு வித்திட்ட வித்து என்று கூட கூறலாம். கிட்டத்தட்ட, 2019ஆம் ஆண்டு இடம்பெற்ற ஈஸ்டர் ஞாயிறு குண்டுத் தாக்குதல் எப்படி கோட்டாபயவின் வெற்றிக்கு வழிவகுத்ததோ, அப்படியொரு நிலையையே அநுரவின் வெற்றிக்கு அரகலய காலம் வழிவகுத்துக் கொடுத்திருக்கின்றது என்பதும் மறுக்க முடியாத ஒன்று.

குறிப்பாக, இம்முறை முதன்முறையாக வாக்களிக்கத் தகுதிப்பெற்ற இளையோர்களின் முதன்நிலை தெரிவாக அநுர இருந்திருக்கின்றார் என்பதையும் ஏற்றுக் கொள்ள வேண்டியதாக இருக்கின்றது. அத்தோடு, ரணில் இழைத்த தவறுகளும் கூட அநுரவின் வெற்றிக்கு வழி ஏற்படுத்திக் கொடுத்தன. குறிப்பாக அரகலயவின் போது ஆர்ப்பாட்டக்காரர்கள் மீதான தாக்குதல் மற்றும் கைதுகள், ஒடுக்குறைகள் போன்றவை ரணில் மீதான அதிருப்திக்கும், அநுர மீதான ஈர்ப்புக்கும் காரணமாகியிருந்தன.

அத்தோடு, அரச ஊழியர்கள் சம்பள பிரச்சினையின் போதும் போராட்டங்களின் போதும் அதனை கையாள்வதற்கு ரணில் மேற்கொண்ட நடவடிக்கைகள் ரணில் மீதான அரச ஊழியர்களின் வெறுப்புக்கு காரணமாகியதோடு, அது அநுரவை வெற்றிப் பாதைக்கு அழைத்துச் சென்றது. எது எவ்வாறாயினும் மாற்றத்தை விரும்பிய பலருக்கு அநுரவின் வெற்றி சிறிய அல்ல மிகப்பெரிய மாற்றமாகவே அமைந்துள்ளது...இலங்கையின் புதிய அதிபராகப் பதவியேற்ற அநுரகுமார திசாநாயக்கா அவர்களுக்கு வாழ்த்துகள்....



**புதிய பிரதமராக ஹரிணி அமரசூரிய** (Harini Amarasuriya)

மூன்றுபேர்கொண்ட புதிய அமைச்சரவை பதவியேற்பு நிகழ்வு 24.09.2024 ஜனாதிபதி செயலகத்தில் இடம்பெற்றது. புதிய பிரதமராக தேசிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் கலாநிதி ஹரிணி அமரசூரிய பதவிப்பிரமாணம் செய்து கொண்டார். இவர் இலங்கையின் 16வது பிரதமர் ஆவார். அவர் இலங்கையின் பிரதமராக பதவியேற்கும் 3ஆவது பெண் பிரதமர் ஆவார்.

இதற்கு முன்னதாக உலகின் முதல் பெண் பிரதமரான சிறீமாவோ பண்டாரநாயக்க மற்றும் சந்திரிக்கா பண்டாரநாயக்க ஆகியோர் இலங்கையின் பிரதமராக பதவி வகித்துள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது. (முன்னாள் பிரதமர் பண்டாரநாயக்காவின் மனைவியும் மகளும்தான் இவர்கள் இருவரும்)

ஆனால் ஹரிணி அவர்களை நோக்கினால் இலங்கைப் பாராளுமன்ற வரலாற்றில் பரம்பரை ரீதியாக இருந்த இரண்டு பெண் பிரதமர்களைப் போல இல்லாமல் இவர் தனித்து வந்துள்ள முதலாவது பிரதமர் என்பதும் குறிப்பிடத்தக்க விடையமாகும்.

இலங்கை அரசியல் வரலாற்றில் 24 வருடங்களின் பின்பு பெண் பிரதமர் பதவியை ஏற்றுக்கொண்டுள்ளார். இவர் இங்கிலாந்து எடின்பரோ பல்கலைக் கழகத்தில் சமூக மானுடவியலில் முனைவர் பட்டம் பெற்றவர். பின்பு கொழும்பு திறந்த நிலைப் பல்கலைக் கழகத்தில் சமூக ஆய்வுகள் துறையில் மூத்த விரிவுரையாளராகவும் கடமைபுரிந்தார். 2019ல் முதன் முதல் தேசிய மக்கள் சக்தி கட்சியில் சேர்ந்துகொண்டார். 2020 முதல் தேசியபட்டியலில் பாராளுமன்றத்துக்குத் தெரிவாகி இற்றைவரை பதவி வகித்து வந்துள்ளார். வாழ்த்துவோம் புதிய பிரதமரை...

## சிறீலங்கா ஜனாதிபதி தேர்தல் முடிவு - 2024

The 2024 Presidential Election Results - First Preference Votes
by candidate Total: 13,319,616

| | |
|---|---|
| 1. ANURA KUMARA DISSANAYAKE | - 5,634,915 |
| 2- SAJITH PREMADASA | - 4,363,035 |
| 3- RANIL WICKREMESINGHE | - 2,299,767 |
| 4- NAMAL RAJAPAKSA | - 342,781 |
| 5- ARIYANETHIRAN PAKKIYASELVAM | - 226,343 |
| 6- DILITH JAYAWEERA | - 22,396 |
| 7- K.K. PIYADASA | - 47,543 |
| 8- DISSANAYAKA MUDIYANSELAGE BANDARANAYAKE | - 30,660 |
| 9- SARATH FONSEKA | - 22,407 |
| 10- WIJEYADASA RAJAPAKSHE | - 21,306 |

## இலங்கையின் புதிய அரசில் புதிதாக (25.09.2024) நியமிக்கப்பட்ட ஆளுநர்களின் விபரம் வருமாறு,

1. ஹனீப் யூசுப் - மேல் மாகாண ஆளுநர்
2. சரத் பண்டார சமரசிங்க அபயகோன் - மத்திய மாகாண ஆளுநர்
3. பந்துல ஹரிஸ்சந்திர - தென் மாகாண ஆளுநர்
4. திஸ்ஸ குமாரசிரி வர்ணசூரிய - வடமேல் மாகாண ஆளுநர்
5. வசந்த குமார விமலசிறி - வட மத்திய மாகாண ஆளுநர்
6. நாகலிங்கம் வேதநாயகன் - வட மாகாண ஆளுநர்
7. ஜயந்த லால் ரத்னசேகர - கிழக்கு மாகாண ஆளுநர்
8. சம்பா ஜானகி ராஜரத்ன - சபரகமுவ மாகாண ஆளுநர்
9. கபில ஜயசேகர - ஊவா மாகாண ஆளுநர்

வடமாகாணத்தில் பதவி வகித்த ஆளுநர்கள் விபரம்...
List of governors of Northern Province

| | | |
|---|---|---|
| Mohan Wijewickrama (acting) | 1 January 2007 | - 3 July 2008 |
| 1- Victor Perera | 3 July 2008 | - 10 October 2008 |
| 2- Dickson Sarathchandra Dela | 10 October 2008 | - July 2009 |
| 3- G. A. Chandrasiri | 12 July 2009 | - 26 January 2015 |
| 4- H. M. G. S. Palihakkara | 27 January 2015 | - 16 February 2016 |
| 5- Reginald Cooray | 16 February 2016 | - 31 December 2018 |
| 6- Suren Raghavan | 7 January 2019 | - 20 November 2019 |
| 7- P. S. M. Charles | 30 December 2019 | - 11 October 2021 |
| 8- Jeevan Thiagarajah | 11 October 2021 | - 15 May 2023 |
| 9- P. S. M. Charles | 17 May 2023 | - 24 September 2024 |
| 10-Nagalingam Vedanayagam | 25 September 2024 | -Present ........... |

கிழக்கு மாகாணத்தில் பதவி வகித்த ஆளுநர்கள் விபரம்...
List of governors of Eastern Province

| | | |
|---|---|---|
| 1- Mohan Wijewickrama | 22 December 2006 | - January 2015 |
| 2- Austin Fernando | 27 January 2015 | - 1 July 2017 |
| 3- Rohitha Bogollagama | 4 July 2017 | - 3 January 2019 |
| 4- M. L. A. M. Hizbullah | 3 January 2019 | - 3 June 2019 |
| 5- Shan Wijayalal De Silva | 5 June 2019 | - 20 November 2019 |
| 6- Anuradha Yahampath | 4 December 2019 | - 15 May 2023 |
| 7- Senthil Thondaman | 17 May 2023 | - 23. September 2024 |
| 8 Jayantha Lal Ratnasekera | 25 September 2024 | - Present ......... |

வடக்கு, கிழக்கிற்குப் புதிய ஆளுநர்கள் பதவி ஏற்பு..
வடக்கு மற்று கிழக்கு மாகாணங்களின் ஆளுநர்களாக இருவரையும் ஜனாதிபதி நியமித்துள்ளார்.

## பாராளுமன்றத் தேர்தல் 2024 சில குறிப்புகள்...

- தேர்தல் நடைபெறும் திகதி - 14.11.2024
- பாராளுமன்றில் பதவி ஏற்பு - 21.11.2024
- வாக்காளர் எண்ணிக்கை - 1.71.403.54
- தேர்தல் மாவட்டங்கள் - 22
- தேர்தல் மூலம் தெரிவாகும் உறுப்பினர்கள் - 196
- விகிதாசாரத்தில் தெரிவாகும் உறுப்பினர்கள் 19 மொத்தம் 225
- நாடு முழுவதும் 84 கட்சிகள் 764 அணிகளைச் சேர்ந்த 690 குழுக்கள் போட்டி
- நாடு முழுவதும் 196 உறுப்பினர்களைத் தெரிவு செய்வதற்காக 8.352 பேர் போட்டியிடுகின்றனர். ஆகக்கூடுதலாக கொழும்பு மாவட்டத்தில் 966 பேர்.
- குழுக்கள் என்று பார்த்தால் அம்பாறை மாவட்டத்தில்தான் 615 பேர் அதிகூடிய தொகையினர் போட்டியிடுகின்றனர்.
- குறைந்த குழுக்கள் போட்டியிடுவது பொல்லநறுவையிலும் மொனாரா - கலையிலும் தலா 15 குழுக்கள் போட்டியிடுகின்றன.
- அதிகூடிய எம்.பிக்கள் தெரிவு கம்பஹா மாவட்டம் - 19 பேர்
- குறைந்த எம். பிக்கள் தெரிவு திருகோணமலை மாவட்டம் - 4 பேர்
- முழுச்செலவும் 11 மில்லியன் ரூபா என தேர்தல் ஆணையாளர் அறிவித்துள்ளார்.

### தமிழ், இஸ்லாம் மக்கள் அதிகமாக வாழும் தேர்தல் மாவட்டங்கள்

| தெரிவு செய்யப்படும் எம்.பிக்கள் தொகை- 28 | | - போட்டியிடுவோர் |
|---|---|---|
| 1- யாழ்ப்பாணம் + கிளிநொச்சி | - 6 பேர் | - 396 பேர் |
| 2- வன்னி (முல்லை,மன்னார், வவுனியா) | - 6 பேர் | - 423 பேர் |
| 3- திருகோணமலை | - 4 பேர் | - 217 பேர் |
| 4- மட்டக்களப்பு | - 5 பேர் | - 392 பேர் |
| 5- அம்பாறை(திகாமடு) | - 7 பேர் | - 615 பேர் |

- வடமாகாணத்தில் 12 எம் பிக்கள் தெரிவுக்காக 819 பேர் போட்டி
- கிழக்கு மாகாணத்தில் 16 எம்.பிக்கள் தெரிவுக்காக 1.224 பேர் போட்டி

### வடகிழக்கில்..

| | | | | |
|---|---|---|---|---|
| - யாழ் +கிளிநொச்சி | தேர்தல் | மாவட்டம் | - 23 கட்சிகள் + | 21 சுயேட்சைகள் |
| - வன்னி | ” | ” | - 22 ” | 25 ” |
| - மட்டக்களப்பு | ” | ” | - 22 ” | 27 ” |
| - திருகோணமலை | ” | ” | - 17 ” | 20 ” |
| - அம்பாறை | ” | ” | - 32 ” | 31 ” |

### வடகிழக்கில்..தமிழர் கட்சிகள் சில..

1- தமிழசுக்கட்சி (சுமந்திரன், சிறீதரன் அணி)
2- சனநாயக தமிழர் கூட்டமைப்பு (தவராசா)தலைமையில் பிரிந்த அணி
3- ஜனநாயக தமிழ் தேசிய கூட்டணி (Telo, EPRLF, PLOT)
4- தமிழர் விடுதலைக் கூட்டணி (ஆனந்தசங்கரி தலைமை)
5- ஈழமக்கள் ஜனநாயகக் கட்சி (டக்ளஸ் தலைமை)
6- ஜனநாயக தேசிய கூட்டணி (அங்கஜன் தலைமை)

07- தமிழ் தேசிய மக்கள் முன்னணி (காங்கிரஸ்) (கஜேந்திரகுமார் தலைமை)
08- தமிழ் மக்கள் கூட்டணி (மணிவண்ணன் தலைமை) (நீதவான் விக்கி)
9- ஜனநாயகப் போராளிகள் கட்சி (முன்னாள் போராளி சி வேந்தன் தலைமை)
10- ஐக்கிய தேசிய சுதந்திர முன்னணி (ஞா சுலக்ஸன் தலைமை)
11- தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சி (பிள்ளையான் தலைமை)
12- ஜனநாயக முன்னணிக் கட்சி (கருணா தலைமை)
13- அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் (ரிஷாத் பதியுதீன் தலைமை)
13- சிறீலங்கா முஸ்லீம் காங்கிரஸ் (ரவூப் ஹக்கீம் தலைமை)
14- தமிழ் முற்போக்குக் கூட்டணி (மனோ கணேசன் தலைமை)
15- இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் (ஜீவன் தொண்டமான் தலைமை)
16- தேசிய மக்கள் சக்தி அநுர குமார (திஸநாயக்கா தலைமை)
17- ஐக்கிய மக்கள் சக்தி (சஜித் பிரேமதாஸ தலைமை)
18- ஐக்கிய தேசியக் கட்சி (ரணில் விக்கிரமசிங்க தலைமை)
19- பொதுஜனப் பெரமுனை (மகிந்த ராஜபக்ஸ தலைமை)
20- சர்வ அதிகாரக் கட்சி(திலீத் ஜயவீர தலைமை)(இன்னும் பல கட்சிகள்

## பாராளுமன்றத் தேர்தல் வாக்காளர்களும்தெரிவுசெய்யப்படும் (M.P)உறுப்பினர்களும் 2020 - 2024

Seat allocation changes: 2020 to 2024

| District | Registered electors |  | Number of allocated seats |  |  |
|---|---|---|---|---|---|
|  | 2020 | 2024 | 2020 | 2024 | Change |
| Ampara | 513,979 | 555,432 | 7 | 7 | – |
| Anuradhapura | 693,634 | 741,862 | 9 | 9 | – |
| Badulla | 668,166 | 705,772 | 9 | 9 | – |
| Batticaloa | 409,808 | 449,686 | 5 | 5 | – |
| Colombo | 1,709,209 | 1,765,351 | 19 | 18 | - |
| Galle | 867,709 | 903,163 | 9 | 9 | – |
| Gampaha | 1,785,964 | 1,881,129 | 18 | 19 | - |
| Hambantota | 493,192 | 520,940 | 7 | 7 | – |
| Jaffna | 571,848 | 593,187 | 7 | 6 | - |
| Kalutara | 972,319 | 1,024,244 | 10 | 11 | - |
| Kandy | 1,129,100 | 1,191,399 | 12 | 12 | – |
| Kegalle | 684,189 | 709,622 | 9 | 9 | – |
| Kurunegala | 1,348,787 | 1,417,226 | 15 | 15 | – |
| Matale | 407,569 | 429,991 | 5 | 5 | – |
| Matara | 659,587 | 686,175 | 7 | 7 | – |
| Monaragala | 372,155 | 399,166 | 6 | 6 | – |
| Nuwara Eliya | 577,717 | 605,292 | 8 | 8 | – |
| Polonnaruwa | 331,109 | 351,302 | 5 | 5 | – |
| Puttalam | 614,374 | 663,673 | 8 | 8 | – |
| Ratnapura | 877,582 | 923,736 | 11 | 11 | – |
| Trincomalee | 288,868 | 315,925 | 4 | 4 | – |
| Vanni | 287,024 | 306,081 | 6 | 6 | – |
| National List | — | — | 29 | 29 | – |
| Total | 16,263,885 | 17,140,354 | 225 | 225 | – |

## 2024 இலங்கைப் பாராளுமன்ற தேர்தல் முடிவுகள் பற்றிய சிறு குறிப்புகள்...

| கட்சி | பெற்றவாக்குகள் | வீதம் | ஆசனங்கள் |
|---|---|---|---|
| 1- தேசிய மக்கள் சக்தி | 68.63.186 | 61.56 | 159 |
| 2- ஐக்கிய மக்கள் கட்சி | 19.68.716 | 17.66 | 40 |
| 3- இல.தமிழரசுக் கட்சி | 2.57.813 | 02.31 | 08 |
| 4- புதியஜனநாயக முன்னணி | 5.00.835 | 04.49 | 05 |
| 5- பொதுஜன பெரமுனை | 3.50.429 | 03.14 | 03 |
| 6- ஸ்ரீலங்காமுஸ்லீம்காங்கிரஸ் | 87.038 | 00.78 | 03 |
| ஏனைய கட்சிகள் | | | 07 |
| மொத்தம் | | | 225 |

- மொத்த வாக்காளர்கள் - 1.71.40.354

  நிராகரிக்கப்பட்ட வாக்குகள் - 6.67.240

  வாக்களித்தோர் - 1.11.48.006

  வாக்களிப்பு வீதத்தில் அதிகூடிய வாக்களிப்பு மன்னார் மாவட்டம்-70வீதம்
- நாடு முழுவதிலும் பார்த்தால் இருவர் அதிகூடிய விருப்பு வாக்குகளைப் பெற்றனர்.. -விஜித ஹெரத் -7.01.675., ஹெரிணி அமரசூரியா - 6.55.289
- மலையகத்தில் 6 பேர் தெரிவாகியுள்ளனர். (2 பெண்கள் உட்பட) பதுளை மாவட்டம் 2 பேர். தேசிய மக்கள் சக்தி, நுவரெலியா மாவட்டம் ஒருவர் தே.ம.சக்தி 2பேர். ஐக்கிய மக்கள் முன்னணி 1 ஐ.தே.கட்சி. மனோகணேசன் தோல்வி.
- வடகிழக்கு தமிழர் பிரதேசங்களில்.வெற்றி பெற்றோர்....

| | யாழ்-கிளி | வன்னி | திருகோ | மட்டக் | அம்பாறை | தேசிய பட்டியல் |
|---|---|---|---|---|---|---|
| அநுரா | 03 | 02 | 02 | 01 | 04 | |
| தமிழரசு | 01 | 01 | 01 | 03 | 01 | 01 |
| காங்கிரஸ் | 01 | 00 | 00 | 00 | 00 | |
| சுயேட்சை | 01 | 00 | 00 | 00 | 00 | |
| சங்கு | 00 | 01 | 00 | 00 | 00 | |
| காதர் மஸ் | 00 | 01 | 00 | 00 | 00 | |
| சஜித் ஐ.ம.கட்சி | 00 | 00 | 01 | 00 | 00 | |
| ரிஷாட் பதி | 00 | 01 | 00 | 00 | 00 | |
| முஸ்லீம் காங் | 00 | 00 | 00 | 01 | 02 | 01 |

- தோல்வியடைந்த தமிழ் அரசியல் வாதிகள்
  - -அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா
  - -பிரதி அமைச்சர் பிள்ளையான்
  - -எம் - பிமார் கோவிந்தன் கருணாகரம், சுமந்திரன், அங்கயன் இராமநாதன் குலதீபன் (வவுனியா) சித்தாத்தன், கஜேந்திரன்,
- -தேர்தலில் போட்டியிடாதவர்கள் நீதியரசர் விக்கி, சார்ள்ஸ் நிர்மலநாதன், விநோதாரலிங்கம், வியாழேந்திரன்.
- அநுரா அலையால் சிங்களத்தரப்பில் அமைச்சர்கள், பிரதி அமைச்சர்கள், எம்பிக்கள் என இருபதுக்கும் மேற்பட்டோர் தோல்வியடைந்தனர்.

# Nobel - நோபல் பரிசு - 2024




வருடாவருடம் வழங்கப்படும் உலகின் அதி உன்னத பரிசான நோபல் பரிசு வழங்கும் முறை 1833ம் ஆண்டில் பிறந்தவர் சுவீடனைச் சேர்ந்த அல்பிரட் நோபல் (Alfred Nobel) அவர்களின் நினைவாக வழங்கப்படுகின்றது. பரிசுவழங்கப்படும் ஆறு துறைகளில் தெரிவு செய்யப்படுபவர்களுக்கு தனது சொத்தின் 94 சதவீதத்தைப் பரிசாக அளிக்க வேண்டும் என்று அவர் உயில் எழுதி வைத்தார். இந்த உயிலின்படி 1901ம் ஆண்டு தொடங்கப்பட்டது.

இந்தவருடம் இது 122வது வருடமாகும். பரிசுபெறுவோர் விபரங்கள் நவம்பர் மாதம் அறிவிக்கப்பட்டது. மொத்தமாக 10 மில்லியன் சுவீடிஸ் குறோனர் (9.20.000 யூரோ) பகிர்ந்தளிக்கப்படுகின்றது.ஒவ்வொருவருக்கும் 24 காரட் தங்கமுலாம் பூசிய பதக்கங்கள் அணிவிக்கப்படும்.

மருத்துவம், இயற்பியல் (பௌதீகம்), வேதியியல் (இரசாயனம்), இலக்கியம், பொருளாதாரம், சமாதானம் என 6 பிரிவுகளில் வழங்கப்படும் இப்பரிசானது புதிய கண்டுபிடிப்புகள், பொருளாதாரம், மற்றும் சமாதானத்திற்காக பாடுபட்டு உழைத்தவர்கள் அல்லது உழைத்த தாபனங்களுக்கு வழங்கப்படுவது வழமையாகும்.

இந்தத் துறைகளில் சாதனை படைத்தவர்களை இனங்கண்டு அவர்களுக்குச் சான்றிதழ்களும் பணப் பரிசும் வழங்கிக் கௌரவிப்பது சர்வதேச நோபல் கமிட்டியின் செயற்பாடாக இருந்து வருகின்றது வெற்றிபெறும் ஒவ்வொருவருக்கும் பணப்பரிசாக 20 கோடி ரூபா வழங்கப்படுகின்றது.

இந்தமுறை 5 நாடுகளைச் சேர்ந்த 12 பேருக்கு இப்பரிசு கிடைத்திருக்கின்றது. இதில் 10 பேர்ஆண்கள் ஒரு பெண்ணாவர்.- அமெரிக்கா, கனடா, பிரித்தானியா,தென்கொரியா, யப்பான் நாட்டவர்களுக்கு இப்பரிசு வழங்கப்பட்டுள்ளது.

8- அமெரிக்கர்
1- கனேடியர்
1- பிரித்தானியர்
1- தென்கொரியர்
1- யப்பான் நிறுவனம் ( 1- பெண் , 10 ஆண் )

# மனிதநேயப்பணியில் இணைந்துகொண்டவர்கள்!..

தாயகத்தில் ஆதரவற்ற சிறார்களின் வாழ்நாள் மற்றும்கல்விச்செலவுகளைப்பொறுப் பேற்றுஉதவும் அன்பு உள்ளங்களை நேசத்துடன் வாழ்த்துகின்றோம்.எனவே நீங்களும் இந்தப்பணியுடன் இணைந்து உதவலாம். இதுவரை இத்திட்டத்தில் இணைந்து உதவிவரும் நல்லுள்ளங்களின் விபரம்....

1- திருமதி பிங்கலை செந்திலன் - Kitzingen - 600-00 யூரோ
ஒளிரும் வாழ்வகம் - துணுக்காய் - முல்லைத்தீவு
உதவி பெறுவோர்.. - தியாகராசா டிலானி (பி.தி 10.04.2014)
குருபவராசா ரேணுஸ்றியா (பி.தி 23.08.2012)
றொனி டிலக்சனா (பி.தி 03.08.2014)

............................................................................................................................

2- திருமதி சிவதர்சினி பிராங்ளின் - Viersen - 480-00 யூரோ
ஒளிரும் வாழ்வகம் - துணுக்காய் - முல்லைத்தீவு
உதவி பெறுவோர்.. - றமணன் பிலோமினா (பி.தி 08.04.2012)
- ஜெகஸ்ரீன் மதுசாளினி (பி.தி 02.04.2013)

............................................................................................................................

3- திருமதி சாந்தினி துரையரங்கன் - Essen - 480-00 யூரோ
சிறீ சண்முகா பெண்கள் இல்லம் - திருகோணமலை
உதவி பெறுவோர்.. - திலக்சிகா கோடீஸ்வரன் (பி.தி 12.05.2008)
மதுஸா சுந்தரலிங்கம் (பி.தி 01.01.2008)

............................................................................................................................

4- திருமதி அஜந்தி பத்மநாதன் - London - 480-00 யூரோ
செபமாலை இரக்கத்தின் இல்லம்- தலைமன்னார்- மன்னார்
உதவி பெறுவோர்.. - கதிர்விழி சகாயநாதன் (பி.தி 09.05.2008)

............................................................................................................................

5- திருமதி பிரிந்தாவனி ஏகானந்தராசா - Bonn - 480-00 யூரோ
சிறீ அகிலாண்டேஸ்வரி "அருளகம்" - வவுனியா
உதவி பெறுவோர்.. - இ. அபிராமி (பி.தி 14.11.2002)

............................................................................................................................

6- திருமதி அனிதா றஞ்சன் - Duisburg - - 480-00 யூரோ
திருஞானசம்பந்தர் குருகுலம் - களுவாஞ்சிக்குடி - மட்டக்களப்பு
உதவி பெறுவோர்.. சாய்ரிதன் சத்தியசீலன் (பி.தி 07.06.2010)

7- திருமதி ஸ்ரெவ்வானி இம்மானுவல் - Essen - 480-00 யூரோ
இந்து ”அன்பகம்” சிறுவர் அபிவிருத்தி நிலையம் - வவுனியா
உதவி பெறுவோர்.. அஸ்வினி சுனில்சாந்த் ( பி.தி 09.06.2012)
8- திரு Johannas Grüendler - Köln - 480-00 யூரோ
இந்து ”அன்பகம்” சிறுவர் அபிவிருத்தி நிலையம் - வவுனியா
உதவி பெறுவோர்.. தட்சாயினி கபிசா ( பி.தி 01.09.2012)
9- செல்வன் பிரணவன் யோகராசா - Düsseldorf - 240-00 யூரோ
இந்து ”அன்பகம்” சிறுவர் அபிவிருத்தி நிலையம் - வவுனியா
உதவி பெறுவோர்.. சிவராசா பவிதா ( பி.தி 05.09.2011 )

---

- பொறுப்பெடுத்தவர்கள் 9 பேர்.. (ஜேர்மனி, லண்டன்)

- உதவி பெறுவோர் 13 பிள்ளைகள் (தாயகம் - சிறீலங்கா)

---



இ.மணி
சமூர்த்திமுன்பள்ளி,
இறம்பொடை,
2024.07.25

வணக்கம்,

2024.06.26ம் திகதியன்று எமது இறம்பொடை சமூர்த்தி முன்பள்ளி சிறார்களுக்கு, புத்தகப்பை, [illegible], சாப்பாட்டு பெட்டி மற்றும் [illegible], பென்சில்கள் வழங்கி அவர்களை உற்சாகப்படுத்தியதோடு சிறார்களுக்கும், நிகழ்வில் கலந்து பெற்றோர்களுக்கும் உணவுப் பொதிகளை வழங்கிய என் நண்பன் ம.ஜெயசீலன் அவர்களுக்கும், இவ்வனைத்து பொருட்களையும் வாங்குவதற்கு ரூபா 124000 பெறுமதியை வழங்கிய ஜேர்மனியால் வெளிவரும் மண் சஞ்சிகையின் ஆசிரியர் திரு. சிவராசா ஐயா அவர்களுக்கும் எம்முன்பள்ளி நிலையத்தினர் சார்பாகவும் மனம் நிறைந்த நன்றியினை தெரிவித்துக் கொள்கின்றோம்.

நன்றி.

இப்படிக்கு,
இறம்பொடை,
முன் பள்ளி ஆசிரியர்,
இ.மணி

VELOO [illegible]
RAMBODA SAMOORTHY
PRESCHOOL
RAMBODA

# ஆதரவற்றோர் நிதி உதவிக் கணக்கு..

ஆரம்ப இருப்பு 01-09-2024 + 226-85

அன்பளிப்புகள்:-

01. திருமதி. சிவதர்சினி பிராங்ளின் - Viersen + 80-00
(ஆதரவற்றசிறார் ஒருவரைப் பொறுப்பேற்ற மாதாந்த அன்பளிப்பு)
02. செல்வி. அனித்தா றஞ்சன் - Duisburg + 80-00
(ஆதரவற்றசிறார் ஒருவரைப் பொறுப்பேற்ற மாதாந்த அன்பளிப்பு)
03. திருமதி.ஸ்ரெவ்வானி.இம்மானுவல் - Essen + 80-00
(ஆதரவற்றசிறார் ஒருவரைப் பொறுப்பேற்ற மாதாந்தஅன்பளிப்பு)
04.திருமதி அஜந்தி பத்மநாதன் - London + 80-00
(ஆதரவற்றசிறார் ஒருவரைப் பொறுப்பேற்ற மாதாந்தஅன்பளிப்பு)
05. திருமதி பிரிந்தாவனி ஏகானந்தராசா - Weeze + 80-00
(ஆதரவற்றசிறார் ஒருவரைப் பொறுப்பேற்ற மாதாந்த அன்பளிப்பு)
06. திரு. Johannas Gruendler - Köln + 80-00
(ஆதரவற்றசிறார் ஒருவரைப் பொறுப்பேற்ற மாதாந்த அன்பளிப்பு)
07. திருமதி பிங்கலை செந்திலன் - Kitzingen +100-00
(ஆதரவற்றசிறார் ஒருவரைப் பொறுப்பேற்ற மாதாந்த அன்பளிப்பு)-------------

+ 580-00 + 580-00

---------------

+ 806-85

அன்பளிப்புகள்...

08. ”ஹரிதாஸ்” தமிழ்ப்பெண்கள் அமைப்பு - Hamm+ 102-75
09- திரு பரமானந்தம் பிரபாகரன்
(தந்தையாரின் நினைவுதினஅன்பளிப்பு)-Oberhausen+ 150-00
10. திருமதி மயூரி சுதர்சன் - Brüggan + 150-00
(தந்தையாரின் நினைவுதின அன்பளிப்பு)
09. திருமதி மேரி விஜயகுமார் - Stuttgart + 400-00
(கல்வி மேம்பாட்டு உதவி
10. திருமதி மங்கை சிவராசன் - Stuttgart + 400-00
(கல்வி மேம்பாட்டு உதவி
11- திருமதி கிறிஸ்ரி அமலதாசன் - London + 300-00
(மைத்துனரின் இறப்பு நினைவு அன்பளிப்பு) ---------------

+ 1.502-75 +1.502-75

-----------------

+ 2.309-60

முற்பக்கப்படி + 2.309-60

**அனுப்பியது...**

| | ரூபா | யூரோ | |
|---|---|---|---|
| 1)"ஒளிரும் வாழ்வகம்" மல்லாவி துணுக்காய் | | | |
| 18.10.2024 -(தமிழ்ப்பெண்கள்-Hamm) | 30,000-00 | - 102-75 | |
| 22.10.2024 -(திரு லோகன்-Brükkan) | 44.901-75 | - 150-00 | |
| 2)"சாந்தோம்" முதியோர் இல்லம் - மன்னார் | | | |
| 26.10.2024 - பிரபா (Oberhausen) | 44.850-45 | - 150-00 | |
| 3)"செபமாலை இரக்கத்தின் இல்லம் " - மன்னார் | | | |
| 04.11.2024 - அமல் (London ) | 44.878-95 | - 150-00 | |
| 4)"ஒளிரும் வாழ்வகம்" - புதுக்குடியிருப்பு | | | |
| 04.11.2024 - அமல் (London ) | 44.870-40 | - 150-00 | |
| 5)"நல்லாயன் சிறுவர் இல்லம்" மாங்குளம் | | | |
| 06.09.2024 - ( மேரி + மங்கை ) | | - 800-00 | |
| | | .............. | |
| | | -1.502-75 | - 1.502-75 |
| | | | ------------------- |
| | | | + 806-85 |

மண் சஞ்சிகை வக்கிக்கணக்கு வங்கிவரி

01.09.2024 - 30.09.2024 - 18-39
01.10.2024 - 31.10.2024 - 21-89 ...................................................... - 40-28

31.10.2024 மீதி கையிருப்பு + 766-57

# 35வது ஆண்டு நிறைவுப் போட்டிகள்...

- "மண்" சஞ்சிகையின் 35 வது ஆண்டு (1990 -2025) நிறைவுப் போட்டிகள் பற்றிய விபரங்கள் சென்ற இதழில் வெளிவந்தன.
- சிறியவர்கள், மாணவமணிகள், இளையோர்கள், எழுத்தாளர்கள் எனப் பல தரப்பினருக்குமான பல போட்டிகள் நடைபெறவுள்ளன.
- ஆவலுடையவர்கள் அனைவரும் பங்குகொள்ளலாம். அத்தனை போட்டிகளும் இலவசமானவை.. போட்டிகள் பற்றிய விபரங்கள் தேவைப்படுவோர் எம்முடன் தொடர்புகொண்டால் அனுப்பி வைப்போம்... முடிவு திகதி 31.12.2024

- ஆசிரியர் -



# Good Shepherd Child Development center,
## Mullai Road, Mankulam
## Srilanka.

E-mail – mankulamcdc@gmail.com
Tel. No. – 0212060077/+94775924582
Date: 21.09.2024

அன்பின் மண் சஞ்சிகை அமைப்பின் உறுப்பினர்கள் அனைவருக்கும் இறைவனின் நிறைந்த ஆசீர்களையும் நன்றிகளையும் கூறி அன்புடன் வரைவது,

பெரும் உள்ளம் கொண்டவர்களாக சமூக நலன் கருதி கடல் கடந்து வாழ்ந்தாலும் பிறந்த மண்ணில் வாழும் உறவுகளுக்கு உதவிக்கரம் கொடுத்து உதவ வேண்டும் என்ற துடிப்புடன் தொடர்சியான நிதி உதவி செய்து ஒத்துழைக்கும் உங்களை நன்றி கூறி பாராட்டுவதில் மகிழ்ச்சியடைகின்றேன்.

. 06.09.2024 திருமதி மேரி விஜயகுமார் மற்றும் திருமதி மங்கையற்கரசி சிவராசன் ஆகியோர் மண் சஞ்சிகை அமைப்பின் ஊடாக அனுப்பிவைத்த ரூபா 129,364.07 (400 Euro) எம் கரம் கிடைத்தது. மாங்குளம் நல்லாயன் சிறுவர் இல்லத்தின் சிறார்களின் கல்விப் பாதைக்கு தொடர்ச்சியான ஒத்துழைப்பு வழங்கி இல்லத்தின் செயற்பாடுகள் தடையின்றி நிறைவேற்ற நிதிப்பலம் தந்த உங்களுக்கு எமது நன்றிகள். பலர் வாழ்வு வளம் பெற நிதி உதவி வழங்க நீங்கள் செய்யும் கடும் உழைப்பும் தியாகமும் சொல்லில் வடிக்க முடியாது என்பதை நாம் அறிவோம். உங்கள் மக்கள் சேவை மகத்தானது. இதனால் பல சிறார்கள் பாதுகாப்பாக கல்விலே கரை காண நீங்கள் ஊன்றுகோலாக இருந்துள்ளீர்கள்.

உங்களின் தாராள உள்ளத்தை இறைவன் நிறைவாக ஆசீர்வதித்திட தொடர்ந்து உங்களுக்காக மன்றாடுகின்றோம். உங்களின் உதவிக்கரத்தினால் பல சிறுவர்களின் வாழ்வு ஒளிமயமானதாக அமைய சமூக அக்கறை கொண்ட உங்கள் சேவை வளர்ச்சியடைய நீங்கள் எடுக்கும் முயற்சி வெற்றி அளிக்க இறைவன் உங்களுக்கு உடல் உள நலன் தந்து காத்திட வேண்டும் என்று ஆசித்து நன்றி கூறி விடை பெறுகின்றேன்.

இப்படிக்கு,
என்றும் உங்கள் அன்பு சேவையை மறவாத,
பிள்ளைகள் மற்றும் அருட்சகோதரிகள்.

Sr. Sumithra.

SEBAMALAI MARIYANNAI HOUSE OF COMPASSION

# செபமாலை மரியன்னை இரக்கத்தின் இல்லம்

Dominican Convent,
Thallikudiruppu,
Pesalai,
Sri Lanka
023-2050095

Date: 16.09.2024

திரு. லை.சிவராசா

"மண்" கல்வி கலை இலக்கிய சஞ்சிகை

ஜேர்மனி

அன்புடையீர் !

செல்வி க.கஜந்தினி என்பவர் எமது இல்லத்தில் 2021ஆம் ஆண்டிலிருந்து பராமரிக்கப்பட்டு வருகிறார். இவரது தகப்பனார் அண்மையில் வறுமை காரணமாக தற்கொலை செய்து இறந்தார்-தாயார் பேச முடியாதவர். கஜந்தினிக்கு ஒரு சகோதரர் உள்ளார் இவர்கள் இருவரும் இரட்டை பிள்ளைகள் தாயின் இந் நிலை காரணமாக இவரது சகோதரரும் இன்னுமொரு சிறுவர் நிலையத்தில் பராமரிக்கப்பட்டு வருகிறார்.

கஜந்தினி எனும் சிறுமி தற்போது தரம் 6 இல் கல்வி கற்று வருகிறார். இவரது கண்பார்வை சிறு வயதில் இருந்தே பெற்றோரால் இதற்குரிய சிகிச்சை சரியான முறையில் கொடுக்கப்படவில்லை இதனால் இவரது கண் நரம்புகள் பாதிக்கப்பட்டுள்ளதாக வைத்தியர்கள் கூறியிருக்கிறார்கள். ஆனால் இச்சிறுமி கரும்பலகையின் கல்வியில் ஆர்வம் உடையவள் இவளுக்குரிய [illegible] விசேடபார்வையுடைய மூக்குக்கண்ணாடியின் உதவியுடன் தனது செயற்பாடுகளை செய்துவருகிறார். ஒவ்வொருவருடமும் இக்கண்ணாடி புதுப்பிக்கப்பட வேண்டும்.

இச் சிறுமியின் புதிதான வாழ்க்கைக்கும் அவருடைய கண்களுக்கான சிகிச்சை செலவுகளையும் தீ... பொறுப்பேற்குமாறு தங்களை தாழ்மையுடன் கேட்டுக்கொள்கிறோம்.

நன்றி

தாழ்மையுள்ள

Rev.Sr.Mary Magdalene Joseph O.P
Dominican Convent
Sebamalai Mariannai House of Compassion
Thallikudiruppu, Pesalai,
Sri Lanka.



# இந்து அன்பகம் சிறுவர் அபிவிருத்தி நிலையம்
# Hindu Anpakam Children Development Center
# හින්දු අන්පකම් ළමා සංවර්ධන මධ්‍යස්ථානය

[illegible]
[illegible]
**Parentless Children Pity Rescue, Protect Them**

பதிவு இல: NP/30/23/04/02
NEP/928/V/55/111
Reg.No. HA/04/V/24

E-mail: hinduanpakam@gmail.com
2ம் கட்டை, மன்னார் வீதி, வேப்பங்குளம், வவுனியா. தொ.இல: +94 024-2223683
2nd Mile post, Mannar Rd, Veppankulam, Vavuniya. T.P +94 024-2223683

President
K.Jeyarany

Vice President
K.Uthayakumar

Secretary
S.Niranjana

Treasurer
S.Basugy

Asst. Secretary
N.Dilshanth

Asst. Treasurer
K.Sasikaran

Board of Members
G.Sriskantharajah
K.Kanesarajiah
S.Raveendran
S.Rathimalar
V.Rajalaxmi
K.Niththiyananthan
S.Jayaruban
S.Vasanthan
T.Lankathevi

Auditor
T.Amalan

Bank/Ac/details
032020254291
Hatton National Bank
Vavuniya.

Contact:
024 222 3683
077 6143628

E-mail:
hinduanpakam@gmail.com

26-10-2024

நிர்வாகம்
மண் கலை இலக்கிய சமூக சஞ்சிகை
ஜேர்மனி.

**<u>நன்றி கூறல்</u>**

மேற்படி முகவரியில் இயங்கி வரும் எமது இல்லத்தில் பராமரிக்கப்பட்டு வருகின்ற சிறுமிகளான செல்வி.கனிஸ்சாந் அஸ்வினி செல்வி. தட்சாயினி கபிசா செல்வி.சிவராசா பவிதா ஆகியோரின் வருடாந்த பராமரிப்பு செலவினை தங்களுடைய இந்த மண் கலை இலக்கிய சமூக சஞ்சிகை வாசகர்கள் மூலமாக உதவியினை பெற்று எமது இல்லத்தின் வங்கிக் கணக்கிற்கு ரூபா.227,629.22 அனுப்பி வைத்தமைக்கு மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்வதுடன் தங்களுடைய இந்த சமூகப் பணியானது மென்மேலும் சிறப்புறவும் தொடர்ந்து நடைபெறவும் எல்லாம் வல்ல இறைவனை வேண்டிக் கொள்கின்றோம்.

நன்றி

'காலத்தினால் செய்த நன்றி சிறிது எனினும்
ஞாலத்தின் மாணப் பெரிது".

தலைவர்
[illegible]



# அமெரிக்க தேர்தலில் றொனால்ட் ட்ரம்ப் வெற்றி

உலகில் மிக அதிகமான நாடுகளில் தேர்தல்கள் நடைபெறும் ஆண்டாக இந்த வருடம்தான் சரித்திரத்தில் பதிவாகியுள்ளது. அந்த வகையில் உலகின் வல்லரசு, உலகின் முதன்மை நாடாக விளங்கும் அமெரிக்காவின் ஜனாதிபதி தேர்தல் கடந்த 05.11.2024 அன்று நடைபெற்றது. நான்கு வருடங்களுக்கு ஒரு தடவை நடைபெறும் ஜனாதிபதி தேர்தலில் 2020 தேர்தலில் தோல்வியுற்ற றொனால்ட் ட்ரம்ப் (78வயது)(குடியரசுக்கட்சி) மற்றும் தற்போதய அமெரிக்காவின் உப அதிபர் கமலா ஹாரிஸ் (60 வயது) (ஜனநாயகக்கட்சி) இருவரும் போட்டியிட்டதில் றொனால்ட் ட்ரம்ப் வெற்றி பெற்றார்.

அமெரிக்காவின் 47வது ஜனாதிபதியைத் தெரிவு செய்வதற்கான இத்தேர்தலில் வெற்றிபெற்ற றொனால்ட் ட்ரம்ப் 2015 - 2020 வரை ஜனாதிபதியாக இருந்து 2020 தேர்தலில் தோல்வியுற்றவர். மீண்டும் இப்பொழுது வெற்றி பெற்றுள்ளார். அமெரிக்காவிலுள்ள 50 மாநிலங்களில் வாக்குப்பதிவு இடம் பெற்றதில்...

| | வென்றதொகுதிகள் | கிடைத்தவாக்குகள் | வீதம் |
|---|---|---|---|
| (1) றொனால்ட் ட்ரம்ப் | - 301 | - 7.35.76.505 | - 50.7 |
| (2) கமலா ஹாரிஸ் | - 226 | - 6.92.44.155 | - 47.7 |

இறுதியாக ஜனாதிபதியாக இருந்து 10 பேர்களும் அமெரிக்காவின் முதல் பெண்மணிகளும் (அவர்களின் மனைவிமார்கள்)

| | | |
|---|---|---|
| 01- 1973-1974 | -Richard M. Nixon | - Pat Nixon |
| 02- 1974-1977 | -Gerald R. Ford | - Betty Ford |
| 03- 1977-1981 | -Jimmy Carter | - Rosalynn Carter |
| 04- 1981-1989 | -Ronald Reagan | - Nancy Reagan |
| 05- 1989-1993 | -George Bush | - Barbara Bush |
| 06- 1993-2001 | -Bill Clinton | - Hillary Rodham Clinton |
| 07- 2001-2009 | -George W. Bush | - Laura Bush |
| 08- 2009-2017 | -Barack Obama | - Michelle Obama |
| 09- 2017-2020 | -Donald J. Trump | - Melania Trump |
| 10- 2021-2024 | -Joe Biden | - Neilia Hunter |











" சிறுவர் மலர் "

(தமிழ், டொச், ஆங்கிலம்)

புலம்பெயர் நாடுகளில் வாழும் தமிழ்ச்சிறுவர்களின் நலன்கருதி தமிழ்-டொச்-ஆங்கிலம் என மும்மொழிகளில் " சிறுவர் மலர் " ஒன்றை எழுதி, அச்சுப்பதிவு செய்து 01.09.2024 அன்று வெளியீடு செய்துள்ளேன் என்பதை மகிழ்வுடன் அறியத்தருகின்றேன்.

எமது தாய்மொழியாம் தமிழோடு யேர்மன் மொழியான டொச் மற்றும் உலக மொழியான ஆங்கிலம் ஆகிய மொழிகளில் இந்தச் சிறுவர்மலர் அழகிய வர்ணப்படங்களுடன் வெளிவந்துள்ளது.

இந்த மலரானது சிறுவர்களுக்கு மட்டுமல்லாது பல வயதினருக்கும் பயன்படும் என்பது எனது எண்ணமாகும். எனவே இம்மலர் ஒன்றைப் பெற்றுக்கொண்டு உங்கள் அன்பளிப்புகளை வழங்குவீர்கள் என அன்போடு எதிர்பார்க்கின்றேன்.

இப்புத்தகத்தை உங்கள் செல்லக் குழந்தைகள், சிறுவர்களின் பிறந்தநாள் பரிசாகவும் கொடுத்து உதவலாம். எனவே தேவைப்படுவோர் எம்மோடு தொடர்புகொண்டு பெற்றுக்கொள்ளுங்கள். விரும்பியவர்கள் முகவரியை அனுப்பி வைத்தால் தபால்மூலம் அனுப்பி வைப்போம். உங்கள் பேராதரவிற்குப் பெரு நன்றிகள்!..

திருமதி இராஜேஸ்வரி சிவராசா

நூலாசிரியர் - யேர்மனி 01.09.2024

உங்கள் நிதிப்பங்களிப்பை கீழ்க்காணும் வங்கி விபரத்திற்கு அனுப்பி உதவலாம்... நன்றிகள்!...அன்புள்ளங்களே!..














லண்டனில் வசிக்கும் எனது சகோதரர் வைரமுத்து சீனிவாசன் அவர்கள் தனது சொந்த நிதிப் பங்களிப்பில் மனிதநேயச் செயற்பாடாக இந்த வருடம் மட்டக்களப்பு மாவட்டத்தின் சிறிய கிராமங்களில் வாழும் எழைக் குடியானவர்களுக்கு 3 வீடுகள் 2 கிணறுகளைக் கட்டிக் கொடுத்துள்ளார். அவரின் நிதிச் செலவில் கட்டிய வீடுகளையும் கிணறுகளையும் இங்கே காணலாம்...



Wissen, Kultur & Literatur • கல்வி, கலை, இலக்கிய சமூக இருமாத இதழ்

# ERDE

MANN
Germany / Ausgabe 228

## Merry Christmas and a Happy New Year

## கிறுஸ்துமஸ் மற்றும் புதுவருட வாழ்த்துக்கள்

| | | |
|---|---|---|
| வருட சந்தா | ஜேர்மனி | 20€ |
| | ஏனைய நாடுகள் | 25€ |